# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆடி 6 செவ்வாய்க்கிழமை (22-07-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:236




# விடுதலைப் புலிகள் தனியரசு அமைப்பதை தடுக்க இந்தியா மீண்டும் தலையிடக்கூடும்!

## முன்னாள் இந்தியத் தூதர் டிக்ஷிற் சூசகமாகத் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை22

வடக்கு - கிழக்கில் தமிழர்களுக்கான இறைமையுள்ள தனி அரசொன்றை தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பதை தடுப்பதற்காக இலங்கைப் பிரச்சினையில் இந்தியா மீண்டும் தலையிட வாய்ப்புள்ளதாக இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதர் ஜே.என்.டிக்ஷிற் சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிநாட்டுச் செய்திச் சேவைக்கு அளித்த பேட்டியிலேயே இதனை அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய அமைதி முயற்சியில் முரண்பாடுகளும், தளம்பல் நிலையும் உருவாகும் பட்சத்தில் இந்தியா தலையிடவேண்டியிருக்கும் என்றும் ஜே.என்.டிக்ஷிற் கூறினார்.

இந்தச் செவ்வியில் ஜே.என்.டிக்ஷிற் மேலும் கூறியதாவது:-

இறைமையுள்ள தமிழ்நாடொன்றை அமைப்பதே விடுதலைப் புலிகளின் குறிக்கோளாகும். இலங்கையின் இறைமையையும், இலங்கை அரசின் அதிகாரத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய கடப்பாடு விடுதலைப் புலிகளுக்கு இல்லை.

ஜனநாயக அரசியலில் ஈடுபடும் ஈ.பி.டி.பி. போன்ற கட்சிகளை அங்கீகரிக்க விடுதலைப் புலிகள் தயாராயில்லை. தமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதிகள் தாங்களே என்று அவர்கள் கூறுகின்றனர்.

தமிழர் தாயகத்தில் மத்திய அரசுடன் குறைந்தளவு தொடர்புகள் கொண்ட, தன்னாட்சி அதிகாரத்துடன் கூடிய நிர்வாக அமைப்பை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்குவார் என்ற நம்பிக்கையை புலிகளின் பிரதான பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம குறைந்தளவிலேயே கொண்டுள்ளார்.

2002 ஆம் ஆண்டு முதல் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு விடுதலைப் புலிகளுடன் நடத்திவரும் பேச்சுக் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அவரது கட்சியினரும் கடுமையான விமர்சனங்களை வெளியிட்டு வருகின்றனர். இந்த முரண்பாடு அமைதி முயற்சியில் பாதிப்பை (14ஆம் பக்கம் பார்க்க)

இராணுவக் கெடுபிடிகளை எதிர்த்தும், கறுப்பு ஜூலையைக் கண்டித்தும்

# நேற்று மட்டுநகர், அம்பாறை மாவட்டங்களில் ஹர்த்தால்!

## அலுவலகங்கள் இயங்கவில்லை போக்குவரத்துகள் ஸ்தம்பிதம்

மட்டக்களப்பு,ஜூலை22

**மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் பெரும்பாலான பகுதிகள் நேற்றுச் செயலிழந்தன. கடைகள் மூடப்பட்டு, வாகனப் போக்குவரத்துக்கள் ஸ்தம்பித்திருந்தன. பாடசாலைகள், வங்கிகள், அரச அலுவலகங்கள் என்பன இயங்கவில்லை. வீதிகள் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடின.**

இவ்விரு மாவட்டங்களிலும் நேற்று அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தாலினாலேயே அவை செயலிழந்தன. படையினரின் கெடுபிடிகளை எதிர்த்தும், புரிந்துணர்வு ஒப்பந்தம் பூரணமாக அமுல்படுத்தப்படாமையையும், திமிலைத்தீவில் புலிகளின் ஆதரவாளர் கொலை செய்யப்பட்டதைக கண்டித்தும், கறுப்பு ஜூலையை நினைவுகூர்ந்தும் இந்தப் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

'மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பெருமன்றம்' என்ற அமைப்பு விடுத்திருந்த அழைப்பின்பேரிலேயே இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. ஹர்த்தாலையொட்டி கறுப்புக்கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

நேற்றைய ஹர்த்தாலின்போது அசம்பாவிதம் எதுவும் இடம் பெறவில்லை. பாதுகாப்புப் படையினரின் நடமாட்டம் வீதிகளில் காணப்படவில்லை.

முஸ்லிம் மக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட வாழைச்சேனை, ஓட்டமாவடி ஆகிய இடங்களில் கடைகள் பூட்டப்பட்டிருந்தன. காத்தான்குடி, ஏறாவூர் போன்ற இடங்களில் கடைகள் திறந்திருந்தன. ஆரையம்பதியில் கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன.

அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கல்முனை, காரைதீவு, திருக்கோயில், ஆலையடிவேம்பு, நிந்தவூர், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, சம்மாந்துறை ஆகிய சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் ஹர்த்தாலை முன்னிட்டு பாடசாலைகள், கடைகள், வங்கிகள், அரச அலுவலகங்கள், பொது நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டன. மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்து, தனியார் பஸ் சேவைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டிருந்தன. வைத்தியசாலைகளில் தங்கியுள்ள நோயாளர் நலன்கருதி அத்தியாவசிய சேவை இடம் பெற்றது. வீதிகளுக்குக் குறுக்கே (14ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சி அபிவிருத்திப் பணியை ஏற்க ஒப்பந்தகாரர்கள் பின்னடிப்பு

கிளிநொச்சி,ஜூலை22

கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்திக்கு பல திட்டங்களை நடைமுறைப்படுத்த பல அமைப்புக்கள் முன்வந்த போதும், அத்திட்டங்களை மேற்கொள்ள ஒப்பந்தகாரர்கள் முன்வராதுள்ளதாக கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் கவலை தெரிவித்தார்.

யுனிசெவ், நிக்கொட், நீரப் ஆகியன (14ஆம் பக்கம் பார்க்க)

# ஜோன் வெஸ்பேர்க் இன்று கிளிநொச்சி வருகின்றார்

கிளிநொச்சி,ஜூலை22

நோர்வே சமாதானக் குழுவின் விசேட ஆலோசகர் ஜோன் வெஸ்பேர்க் இன்று கிளிநொச்சி வருகிறார்.

இன்று காலை 9 மணியளவில் வந்துசேரும் அவர் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்துவார்.

வடக்கு-கிழக்குக்கான இடைக்கால (14ஆம் பக்கம் பார்க்க)

# ஒட்டுசுட்டான் காட்டில் யானை கண்ணிவெடியில் சிக்கிக் காயம்!

கிளிநொச்சி,ஜூலை22

ஒட்டுசுட்டான் காட்டுப் பகுதியில் கண்ணிவெடியில் யானை ஒன்று சிக்கிக் காயமடைந்துள்ளது. இந்த யானையைக் காப்பாற்ற நிபுணத்துவ உதவியை விடுதலைப் புலிகள் கோரியுள்ளனர்.

கண்ணிவெடியில் சிக்கி காலில் காயம் அடைந்த அந்த யானையை விடுதலைப் புலிகளின் (14ஆம் பக்கம் பார்க்க)



ஹர்த்தாலால் வெறிச்சோடிக் கிடக்கும் மட்டுநகர் வீதிகளில் ஒன்று.

## சுண்டுக்குழியில் தீவிர சோதனை

யாழ்ப்பாணம்,ஜூலை22

யாழ்.நகரை அண்டிய சுண்டுக்குழிச் சந்தியில் நேற்று மாலை படையினர் தீவிர சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

வீதியில் சென்றோரின் அடையாள அட்டைகளைப் பரிசோதனை செய்த படையினர் வாகனங்களைப் மறித்தும் சோதனை செய்தனர்

(ஓ-3)

# கொள்கைப் பிரச்சினை குறித்து சு.க - ஜே.வி.பி. இன்று பேச்சு

கொழும்பு,ஜூலை22

சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான தேசிய முன்னணி தொடர்பாக எழுந்திருக்கும் கொள்கை அடிப்படையிலான சில பிரச்சினைகள் இன்று ஆராயப்படவிருக்கின்றன. இது தொடர்பான கூட்டம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் இன்று மாலை நடைபெறும்.

இப்பிரச்சினைகள் குறித்து ஜே.வி.பியின் அரசியல் குழு கூடி ஆராய்ந்திருப்பதாக அறியவருகின்றது.

(14ஆம் பக்கம் பார்க்க)

# அக்கரைப்பற்று கடலில் வெளிநாட்டுக் கப்பல்; கடற்படையினர் வரவழைக்கப்பட்டுச் சோதனை!

கொழும்பு,ஜூலை22

அக்கரைப்பற்றுக்கு அப்பாலுள்ள கடலில் வெளிநாட்டுக் கப்பல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. கடற்படையினர் உடனடியாக வரவழைக்கப்பட்டு அக்கப்பல் சோதனையிடப்பட்டது. ஆயினும், அக்கப்பலில் ஆயுதம் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

அக்கரைப்பற்றுக்கு அப்பால் கடலில் ஒன்றரைக் கிலோமீற்றர் தூரத்தில் அக்கப்பல் நங்கூரமிடப்பட்டிருந்தது. மோல்டா நாட்டு கொடியைக் கொண்ட கப்பலின் பெயர் 'எலிஸபெத்' என்று இனங்காணப்பட்டிருக்கிறது.

நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் இக்கப்பல் கடலில் நங்கூரமிட்டிருக்க பொலீஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் அது குறித்து திருகோணமலை கடற்படையினருக்கு அறிவிக்கப்பட்டது.

அதனையடுத்து, கடற்படை வேவு விமானம் ஒன்று அதிகாலை 5.30 மணிவரை கப்பலைக் கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தது.

(14ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதியின் அங்கீகாரம் இல்லாத

# இடைக்கால நிர்வாக அமைப்பில் பொ.ஐ.மு. எப்படி பங்கேற்பது?

## சரத் அமுனுகம கேள்வி

கொழும்பு,ஜூலை22

வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான வரைவை ஜனாதிபதியின் அனுமதியின்றி விடுதலைப் புலிகளுக்கு அரசு அனுப்பியுள்ளது. இந்நிலையில் அந்தக் கட்டமைப்பில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதிநிதி எப்படி பங்கேற்கமுடியும்? இப்படிக் கேள்வி எழுப்பியுள்ளார் பொ.ஐ. முன்னணியின் ஊடகப்பேச்சாளர் சரத் அமுனுகம.

விடுதலைப் புலிகளுக்கு அரசு அனுப்பியுள்ள வரைவில் இடைக்கால நிர்வாக அமைப்பில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதிநிதி ஒருவரும் நியமிக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக அவர் கருத் (14ஆம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாகத்தில் பங்கு கேட்கிறது ஜே.வி.பி.!

கொழும்பு,ஜூலை22

வடக்கு - கிழக்குக்கான உத்தேச இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பில் தமது கட்சிக்கு இடம் தரப்படாதமை குறித்து ஜே.வி.பி. குறை கூறியுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு அரசு அனுப்பியுள்ள வரைவை நுணுக்கமாக ஆராய்ந்து வருவதாகவும் -

அந்த வரைவில் உள்ள பல விடயங்கள் விடுதலைப் புலிகளுக்கு சார்பாக அமைந்துள்ளதை தாங்கள் அவதானித்துள்ளதாகவும் - அக்கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். கட்சியின் உத்தியோகபூர்வமான (14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மீனவர்களால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாம் படையினர் கண்காணிப்புக் குழுவிடம் முறையீடு!

யாழ்ப்பாணம்,ஜூலை22

கிளாலி, கேரதீவுப் பகுதியில் நிறுவப்பட்டுள்ள பாதுகாப்பு நிலைகளை அண்டிய கடற்பகுதியில் குருநகர் மற்றும் சாவல்கட்டு மீனவர்கள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுகின்றதாகவும், இதனால், தமக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினிடம் முறைப்பாடுசெய்துள்ளனர்.

கடமை நிமித்தம் கிளாலிப் பகுதிக்குச் சென்ற சமயமே, அங்குள்ள கடற்படையினர் இந்த முறைப்பாட்டைத் தம்மிடம் தெரிவித்தனர் என போர் நிறுதத்க் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகப் பிரதிநிதி, வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவரிடம் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதி, சமாசத் தலைவரிடம் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

படைநிலைகளுக்குச் சமீபமாக வந்து தொழில்புரியும் மீனவர்களின் நடவடிக்கைகளினால் தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் -

இரவு வேளைகளில் கிளாலியிலிருந்து கேரதீவுக்கு தாம் ரோந்துசெல்லும் கடல் பாதையில் மீனவர்கள் களம்கட்டி வலைகளை மிதக்கவிடுகின்றனர் என்றும் -

இதனால், ரோந்துப்பணிக்கு பெரும் இடைஞ்சல் ஏற்பட்டுள்ளது என்றும் -

கடற்படையினர் என்னிடம் தெரிவித்துள்ளனர்.

எனவே, இதுகுறித்து சம்பந்தப்பட்ட பகுதி மீனவர்களுடன் பேச்சு நடத்தி இருவாரங்களுக்குள் உரிய தீர்வினைப் பெற்றுத்தரவும் என்று கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதி தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த சமாசத் தலைவர், மீனவர்களுடன் பேச்சு நடத்தி ஆக்கபூர்வமான பதிலைத் தருவதாகத் தெரிவித்துள்ளார்.

(எ)

## கலாசார அலுவலருக்கு திருமலையில் செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜூலை22

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 30ஆம் திகதிமுதல் மூன்று தினங்கள் திருகோணமலை, துளசிபுரத்தில் உள்ள முகாமைத்துவ நிலையத்தில் நடைபெறவுள்ளது.

கலாசார செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் பல்வேறு விடயங்கள் இதில் ஆராயப்படவுள்ளதால் சகல கலாசார உத்தியோகத்தர்களும் இதில் தவறாது கலந்துகொள்ள வேண்டுமென வடக்கு - கிழக்கு மகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(எ)

## சுபத்திரன் கொலை தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்க அவகாசம்!

யாழ்ப்பாணம்,ஜூலை22

ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணி யாழ். மாவட்டப் பொறுப்பாளர் த.சுபத்திரனின் படுகொலை தொடர்பான விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்க பொலீஸாருக்கு யாழ்.நீதிமன்றம் அவகாசம் வழங்கியுள்ளது.

இந்த வழக்குத் தொடர்பான விசாரணை நேற்று யாழ்.மேலதிக நீதிவான் பா.சுப்பிரமணியம் முன் இடம்பெற்றது.

கொலை தொடர்பான தமது விசாரணைகள் இன்னமும் முடிவடையவில்லை என்றும் -

விசாரணை அறிக்கையைச் சமர்ப்பிக்க கால அவகாசம் தருமாறும் - பொலீஸார் கோரினர்.

இதை ஏற்றுக்கொண்ட நீதிவான் அடுத்த தவணையில் விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிட்டு விசாரணையை செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இந்த வழக்கில் பிணையில் அனுமதிக்கப்பட்ட வேம்படி மகளிர் கல்லூரி காவலாளிகள் இருவரும் நீதிமன்றத்தில் நேற்று ஆஜராகியிருந்தனர்.

(ம-3-5)

## மடுப் பகுதி ஏழை விவசாயிகளுக்கும் மடுறோட் வீதியைத் திறந்துவிடுங்கள்

### பாதுகாப்பு அமைச்சரிடம் அடைக்கலநாதன் கோரிக்கை

கொழும்பு,ஜூலை22

மடுறோட் சந்தி வீதியூடாக மடுத் திருப்பதி யாத்திரிகர்கள் மட்டுமன்றி சாதாரண பொதுமக்களும் பிரயாணம் செய்ய இராணுவம் அனுமதியளிக்க வேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அடைக்கலநாதன் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவிடம் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு இது தொடர்பாக கடிதம் ஒன்றை எழுதியிருக்கும் அவர், அந்த வீதியில் பயணம் செய்ய இராணுவம் விதித்திருக்கும் தடையால் மடுப்பகுதி ஏழை விவசாயிகள் தமது விளைபொருள்களை வெளியிடங்களுக்கு எடுத்துச் சென்று சந்தைப்படுத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்.

எனவே இத்தடை விதிக்கப்படுவதற்கு முன்னர் இருந்த பிரயாண நடைமுறையைக் கையாள இராணுவத்திற்குப் பணிப்புரை விடுக்குமாறு அவர் அமைச்சரைக் கோரியிருக்கிறார்.

## காரைநகரில் விரைவில் தகவல் தொழில்நுட்ப பூங்கா

### இந்து கலாசார அமைச்சு உதவியுடன் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம்,ஜூலை22

காரைநகர் பகுதியில் வசிக்கும் மாணவர்களின் நன்மைகருதி அங்கு தகவல் தொழில்நுட்பப் பூங்காவொன்று (IT Park) அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நேற்றுமுன்தினம் நடப்பட்டது. இந்து கலாசார அமைச்சின் உதவியுடன் இப்பூங்கா அமைக்கப்படவுள்ளதாக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் வே. சாம்பசிவம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் :-

காரைநகர்ப் பகுதியில் வசிக்கும் மாணவர்களுக்கு கணனி வசதிகள் இல்லை. கணனி கற்கைநெறிகளை மேற்கொள்வதற்கும் அவர்கள் காரைநகரில் இருந்து யாழ். வரவேண்டியுள்ளது.

இதனால், மாணவர்களின் கல்வித் தேவையை நிறைவு செய்யும் நோக்குடன் அங்கு ஒரு தகவல் தொழில்நுட்பப் பூங்காவை அமைப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது துரித கதியில் நடைபெற்றுவருகின்றன. இதற்கான 50 கணனிகளைக் கொண்ட பெரிய பூங்காவாக இதனை அமைப்பதற்கு இந்து கலாசார அமைச்சு உதவிகளை வழங்கவுள்ளது - என்றார்.

(ம-8)

## விவசாய சம்மேளன தொழிற்பாடுகளை ஊக்குவிக்க திட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை22

குடாநாட்டில் உள்ள விவசாய சம்மேளனங்களின் தொழிற்பாடுகளை ஊக்குவித்து அதன்மூலம் விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கெயர் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக வட்டுக்கோட்டை கிழக்கு, பண்டத்தரிப்பு, மாதகல், கட்டுடை, விளான், சற்றுப்பிட்டி, அச்செழு, புத்தூர் ஆகிய கிராமங்களிலுள்ள விவசாய சம்மேளனங்களின் உதவியுடன் அந்தந்தப் பகுதிகளில் வயல் பாடசாலைகள் உருவாக்கப்படவுள்ளதாக கெயர் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(ம-4)

## நாவலப்பிட்டி-டயகம பாதையில் பஸ் கவிழ்ந்து மூன்று பேர் பலி!

### 25 பேர் வைத்தியசாலையில் சேர்ப்பு

கொழும்பு,ஜூலை22

நாவலப்பிட்டி - டயகம பாதையில் குயின்ஸ்பெரி தோட்டமருகே நேற்றுக்காலை 6.45 மணியளவில் பஸ் ஒன்று பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் மூவர் கொல்லப்பட்டனர். மேலும் 25 பேர் படுகாயமடைந்திருக்கின்றனர்.

நாவலப்பிட்டி போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான இந்த பஸ், தலவாக்கலையிலிருந்து நாவலப்பிட்டிக்குச் சென்றுகொண்டிருக்கையிலேயே விபத்துக்குள்ளானது.

விபத்துக்குள்ளான பஸ் சுமார் 150 அடி பள்ளத்தில் கவிழ்ந்ததில் ஒருவர் அதே இடத்தில் கொல்லப்பட்டார் என்று டம்புள்ள பொலீஸார் தெரிவித்தனர். மேலும் இருவர் நாவலப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கையில் இறந்தனர். இவர்களில் ஒருவர் பொகாவத்தையைச் சேர்ந்த மாணவி என்று அடையாளம் காணப்பட்டார்.

காயமடைந்தவர்கள் பொது மக்களின் உதவியுடன் நாவலப்பிட்டி ஆதார வைத்தியாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இவர்களுள் சாரதியினதும் நடத்துநரினதும் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக நாவலப்பிட்டி வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்விபத்து தொடர்பாக பத்தனை பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி செந்தில் தலைமையிலான பொலீஸ் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## குற்றச்சாட்டுக்களின் பேரில் 6 பொலீஸார் பணி இடைநிறுத்தம்

கொழும்பு,ஜூலை22

கடந்த மூன்று மாத காலத்துக்குள் ஒழுங்குமீறல் குற்றச்சாட்டுக்களின் பேரில் 6 பொலீஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

துர்நடத்தை, ஏமாற்றுதல், கடமையில் தவறிழைத்தல், பொலீஸ் திணைக்கள வாகனங்களை விபத்துக்குள்ளாக்குதல் மற்றும் நீதி ஒழுங்கு முறைகளை மீறுதல் போன்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் பொலீஸ் மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் இவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் இக்குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமான மேலதிக விசாரணைகளைப் பொலீஸ் திணைக்களம் மேற்கொண்டுள்ளதாகவும் பொலீஸ் தலைமையகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(ம)

## கிழக்குப் பல்கலை ஊழியர்கள் வேலைநிறுத்தம்

மட்டக்களப்பு,ஜூலை22.

கிழக்குப் பல்கலைக்கழக தொழில்நுட்ப ஊழியர்கள் சம்பள அதிகரிப்புக் கோரிக்கையை முன்வைத்து நாளை அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவர்.

கடந்த 5ஆம் திகதி இந்த ஊழியர் சங்க நிர்வாகக் கூட்டத்தில் அதன் செயலாளர் லஷ்மன் குமார தலைமையில் மேற்கொள்ளப்பட்ட முடிவுக்கமைய இந்த அடையாள வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்படும்.

## அச்சுவேலியில் இரு திருடர்கள் பொதுமக்களிடம் சிக்கினர்!

### 40இற்கும் மேற்பட்ட திருட்டுக்களுடன் தொடர்புடையவர்களாம்

அச்சுவேலி,ஜூலை22

அச்சுவேலி மற்றும் குடாநாட்டின் பல பகுதிகளில் 40இற்கு மேற்பட்ட திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் இருவர் அச்சுவேலியில் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர்.

அச்சுவேலி தோப்புப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து சூட்கேஸைத் திருடிக்கொண்டு ஓடிய சமயம் இவ்விருவரும் பொதுமக்களால் துரத்திப் பிடிக்கப்பட்டனர்.

பொதுமக்களால் அவ்விருவரும் விடுதலைப் புலிகளின் அச்சுவேலி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

இருவரையும் விசாரணை செய்த விடுதலைப் புலிகள் பின்னர் அவர்களை அச்சுவேலிப் பொலீஸில் கையளித்தனர்.

அச்சுவேலி உட்பட குடாநாட்டின் பல பகுதிகளிலும் 40இற்கு மேற்பட்ட திருட்டுச் சம்பவங்களுடன் தமக்குத் தொடர்பு இருப்பதாக இருவரும் பொலீஸாரிடம் ஒப்புக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இருவரில் ஒருவர் திருட்டுச் சம்பவம் தொடர்பாக நீதிமன்றத்தில் தடுத்துவைக்கப்பட்டு, ஒரு வாரத்துக்கு முன் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ம-3-11)

## நாடாளுமன்றம் இன்று கூடுகிறது

கொழும்பு,ஜூலை22

நாடாளுமன்றம் இன்று காலை 10 மணிக்குக் கூடும். இன்று றப்பர் ஆராய்ச்சி திருத்தச் சட்ட மூலத்தின் மீதான விவாதம் நடைபெறும்.

## வெள்ளவத்தையில் ஸ்ரூடியோ தீப்பிடித்து கருவிகள் நாசம்

கொழும்பு,ஜூலை 22

வெள்ளவத்தையிலுள்ள நவீன டியிற்றல் இயந்திர வசதிகளுடன் கூடிய 'அக்மி' ஸ்ருடியே நேற்று அதிகாலை தீப்பிடித்து எரிந்தது. இதனால், கட்டடத்துக்கு பாரிய சேதங்கள் ஏற்படவில்லை. ஆயினும் உள்ளேயிருந்த பெறுமதிவாய்ந்த டிஜிற்றல் வண்ணப்படக் கருவிகள் பலவும் எரிந்து நாசமாகின.

நேற்று அதிகாலை 3.15 மணியளவில் திடீரென தீப்பற்றிக் கொண்ட போது ஸ்ரூடியோவில் பத்து ஊழியர்கள் இரண்டாம் மாடியில் தங்கியிருந்தனர்.

தீப்பற்றிக் கொண்டதற்கான காரணம் உடனடியாகக் கண்டுபிடிக்கப்படவில்லை. தீயினால் ஏற்பட்ட நஷ்டம் குறித்து மதிப்பிடப்பட்டு வருகின்றது.

## திருத்தம்

'தனித்திருந்த வயோதிப மாதுவுக்கு நேர்ந்த கதி' என்ற தலைப்புடன் கடந்த பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி உதயனின் 03ஆம் பக்கத்தில் வெளியாகிய நகைத் திருட்டு பற்றிய செய்தியில் -

'மின்சாரக் கணக்கெடுப்பு மேற்கொள்வதற்காக வீட்டினுள் நுழைந்த நபர்' என்று இருப்பது தவறு ஆகும். 'மின்சாரக் கணக்கெடுப்பு மேற்கொள்வதாகக் கூறி வீட்டினுள் நுழைந்த நபர்' என்பதே சரியான தகவலாகும்.

மீசாலை தெற்கில் இடம்பெற்ற ஒரு திருட்டுச் சம்பவம் தொடர்பான அந்தச் செய்தியில் தவறுதலாக ஏற்பட்ட கருத்துப்பிழை காரணமாக அப்பிரதேச மின்சார சபை பணியாளர்களுக்கும் மின் பாவனையாளராகிய சுப்பிரமணியம் மங்கையர்க்கரசி என்பவருக்கும் ஏற்பட்டிருக்கக்கூடிய மன உளைச்சலுக்காக வருந்துகிறோம்.

(ஆ-ர்)

## நீதிமன்ற நியாயாதிக்க எல்லை அடிப்படையில் வழக்குத் தாக்கல்

### பொலீஸாருக்கு நீதிவான் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூலை22

யாழ்.நீதிமன்ற நியாயாதிக்க பகுதிக்குள் இடம்பெறும் குற்றச்செயல்கள் தொடர்பான வழக்குகளை யாழ். 'நீதிமன்றத்திலேயே தாக்கல் செய்ய வேண்டும் என்று யாழ்.நீதிவான் பொலீஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

யாழ். நீதிமன்றத்தில் நேற்று நடந்த கூட்டம் ஒன்றில் இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா, மேலதிக நீதிவான் பா.சுப்பிரமணியம், யாழ். பொலீஸ் அத்தியட்சகர், அச்சுவேலி, மானிப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் கலந்துகொண்டனர்.

1979ஆம் ஆண்டு நீதிமன்றங்களின் நியாயாதிக்கப் பகுதிகள் தொடர்பாக வெளியான அறிக்கையின்படி, யாழ்.நீதிமன்றப் பகுதி என வரையறுக்கப்பட்ட பகுதிக்குள் இடம்பெறும் குற்றச்செயல்கள் தொடர்பான மனுக்கள் அந்த நீதிமன்றத்திலேயே தாக்கல் செய்யவேண்டும் என்று நீதிவான் பொலீஸாருக்கு அறிவுறுத்தல் விடுத்தார்

(ஒ-3)

## பிரான்ஸ் தூதரக பாதுகாப்பு அதிகாரி மட்டக்களப்பு நிலை குறித்து ஆராய்வு

இலங்கைக்கான பிரான்ஸ் தூதரகத்தின் பாதுகாப்பு இணைப்பாளர் கேணல் ஜீன் நேற்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார்.

பிரான்ஸ் தூதரக பிரதித் தலைவர் காயல் டி மைசோனே சகிதம் விஜயம் மேற்கொண்ட இவர் மட்டக்களப்பு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் அன்ரி ஜீன்ருனனை அவரது அலுவலகத்தில் சந்தித்து சுமார் இரண்டு மணி நேரம் பேச்சு நடத்தினார்.

அரச அதிபர் இ.போனகுருசாமியைச் சந்தித்து இவர்கள் பேச்சு நடத்தினர்.

தற்போதைய பாதுகாப்பு நிலைவரம், சமாதான நடவடிக்கைள், யுத்த நிறுத்தத்தின் பின்னரான மட்டக்களப்பின் நிலை உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து பேசியதாக கேணல் ஜீன் தெரிவித்தார்.

# பி.பி.ஸி. கிளப்பிய சர்ச்சையினாலேயே கெலி தற்கொலை செய்தார் என புகார்!

லண்டன்,ஜூலை22

புலனாய்வுத்துறையின் அறிக்கையை மிகைப்படுத்தி அமெரிக்க - பிரிட்டிஷ் கூட்டுப்படைகள் ஈராக் மீது தாக்குதல் நடத்தியதாகத் தகவல் தந்தது மரணித்த டேவிட் கெலிதான் என்று பி.பி.ஸி வெளிப்படையாக அறிவித்துள்ள நிலையில், கெலியின் மரணத்துக்கு பி.பி.ஸி. கிளப்பிய சர்ச்சையே காரணம் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.



புலனாய்வுத்துறையின் அறிக்கையை மிகைப்படுத்திக் கூறி அமெரிக்காவும், பிரிட்டனும் ஈராக் மீது தாக்குதல் நடத்தியதாக பி.பி.ஸி. தான் முதலில் சர்ச்சையைக் கிளப்பியது. பி.பி.ஸிக்கு இத்தகவலை கூறியவர் ஈராக்கிற்கான ஐ.நா.ஆயுத பரிசோதனைக் குழுவில் இடம்பெற்றிருந்த டேவிட் கெலிதான் என்று குற்றச்சாட்டு எழுந்த நிலையில், கெலி மர்மமான முறையில் மரணமானார்.

இதுகுறித்து பி.பி.ஸி. செய்தி ஆசிரியர் ரிச்சர்ட் சம்புருக் தொலைக்காட்சியில் தோன்றி அறிக்கை ஒன்றை வாசித்தார்.

பி.பி.ஸி. தொலைக்காட்சி நிருபர் அன்ட்ரூவ் கில்லிகன், கெலியிடம் எடுத்த பேட்டியின் சாராம்சத்தை அவர் விளக்கினார்.

எங்களுக்கு தகவல் தந்தவர்களின் இரகசியத்தை பி.பி.ஸி. எப்போதும் காப்பாற்றும். ஆனால், கெலி இறந்துவிட்டதால் இந்த உண்மையைச் சொல்கிறோம். எங்களுக்கு அவர் தந்த தகவலின் அடிப்படையில் தான் இதனை உலகிற்கு தெரிவித்தோம். அவர் சோகமுடிவைத் தழுவியதற்காக ஆழ்ந்த கவலை அடைகிறோம் என்று ரிச்சர்ட் தன்னுடைய அறிக்கையில் தெரிவித்தார்.

இந்நிலையில், பி.பி.ஸி. மேற்கண்ட செய்தியை வெளியிட்டதனாலேயே கெலி தற்கொலை செய்துள்ளார் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

கெலியை பேட்டி கண்ட பி.பி.ஸி. நிருபர் அன்டருவ் கிலிக்கன் கூறியதாவது:-

டேவிட் கெலி கூறிய கருத்துகளை பி.பி.ஸி. திரித்துக் கூறவில்லை. அவரது பேட்டியை தவறான அர்த்தம் கொடுத்து நாம் வெளியிடவில்லை.

கெலி புலனாய்வு சமூகத்தினருடன் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தார். அதன் அடிப்படையிலேயே அவர் எமக்கு மேற்கண்ட தகவலை வழங்கினார். கெலி கூறிய தகவல்களை வைத்து நாம் போர் குறித்த சர்ச்சையைக் கிளப்பியதே அவரின் சோக முடிவுக்குக் காரணமாக அமைந்துவிட்டது. அதற்காக வருந்துகிறோம் என்று தெரிவித்தார்.

கெலியின் மரணம் குறித்து பிரதமர் பிளயர் துரித விசாரணைகளை நடத்துமாறும் விசாரணைகளை ஹட்டன் பிரபு என்பவர் மேற்கொள்வார் என்றும் அறிவித்துள்ளார்.

முதற்கட்டமாக பி.பி.ஸி. செய்தி நிருபர்களிடம் ஹட்டன் பிரபு விசாரணை நடத்தவுள்ளார். இந்த விசாரணைகளின் ஒரு கட்டமாக பிரதமர் ரொனி பிளயரும் சாட்சியமளிக்க வேண்டிவரும் என்று கூறப்படுகிறது. (ம)


# மலையில் இருந்து பஸ் கவிழ்ந்ததால் சீனாவில் 23 பயணிகள் உயிரிழந்தனர்!

மலைப் பகுதிகளில் பயணித்துக் கொண்டிருந்த பஸ் திடீரென பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விழுந்ததால் அதில் பயணித்த 23 பயணிகள் பரிதாபமாக உயிரிழந்தனர். கடந்த சனிக்கிழமை இச்சம்பவம் நடந்துள்ளது.

வியட்நாம் எல்லையில் இருந்து 350 கி.மீ தூரத்தில் அமைந்துள்ள சீனாவிற்குச் சொந்தமான மலைப் பகுதிக் கிராமம் ஒன்றிலேயே இந்த விபத்து நடந்தது.

மலைப் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த பஸ் திடீரென 330 அடி பள்ளத்தாக்கினுள் தடம்புரண்டு உருண்டது. இந்த விபத்தில் பஸ் சுக்குநூறாக நொறுங்கியது.

பஸ்ஸில் மொத்தம் 45 பயணிகள் இருந்தனர். அவர்களில் 23பேர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். ஏனையோர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ம)



பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் தென்கொரியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். அவருக்கு அங்கு சிறப்பான அணிவகுப்பு மரியாதையுடன் வரவேற்பளிக்கப்பட்டது. வரவேற்பு நிகழ்வில் ஒரு காட்சி.

# ஜப்பான் மண்சரிவில் 10 பேர் உயிரிழப்பு!

டோக்கியோ,ஜூலை22

ஜப்பானில் நேற்று ஏற்பட்ட மண்சரிவில் குறைந்தது 10பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் பலரைக் காணவில்லை. என்றும்தெரிவிக்கப் படுகிறது.

ஜப்பானின் தென்மேற்குப் பகுதியில் இருந்து 900 கி.மீ தூரத்தில் அமைந்துள்ள பகுதியிலேயே இந்த அனர்த்தம் நடந்துள்ளது.

காணாமல் போனோரை நூற்றுக் கணக்கான மீட்புப் படையினரும் பொலீஸாரும் இணைந்து தேடி வருகின்றனர்.

உயிரிழந்தவர்களுள் இரண்டு குழந்தைகள் உள்ளடங்கும் என்று ஜப்பான் உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது.



மண் சரிவு ஏற்பட்ட பகுதியில் மீட்புப் பணி நடைபெறுகிறது.

# லைபீரிய தலைநகரைக் கைப்பற்ற கிளர்ச்சியாளர்கள் மீண்டும் சண்டை!

மொன்றோவியா,ஜூலை22

லைபீரிய தலைநகர் மொன்றோவியாவைக் கைப்பற்றுவதற்கான சண்டையை லேட் கிளர்ச்சியாளர்கள் (Lurd) தீவிரப்படுத்தியுள்ளனர். அரச படையினரும் கிளர்ச்சியாளர்களை மூர்க்கமாக எதிர்த்துப் போரிடுகின்றனர் என்று பாதுகாப்பு அமைச்சர் டானியல் ச்சீ தெரிவித்துள்ளார்.

தலைநகரைக் கைப்பற்றுவதற்கான சண்டையை கிளர்ச்சியாளர்கள் தீவிரபடுத்தியதையடுத்து அங்கிருந்த மக்கள் தமது உடைமைகளை சுமந்தவாறு பாதுகாப்பான இடங்களைத் தேடி இடம்பெயர்கின்றனர்.

அரச படையினர் கிளர்ச்சியாளர்களின் பகுதிகளை நோக்கி முன்னேறுவதைக் கைவிட்டு தலைநகரைத் தக்க வைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் கிளர்ச்சியாளர்களிடம் பறிகொடுத்த இரண்டு பாலங்களையும் அவர்கள் மீட்டுள்ளனர்.

தலைநகர் இன்னமும் தமது பூரண கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது என்று பாதுகாப்பு அமைச்சர் டானியல் ச்சீ தெரிவித்துள்ளார். அத்துடன், கானாவில் நடைபெற்றுவரும் பேச்சுகளுக்கு வாய்ப்பு வழங்கும் விதத்தில் சண்டையை நிறுத்துமாறு அவர் கிளர்ச்சித் தளபதிகளிடம் வேண்டுகோளையும் விடுத்துள்ளார்.

தலைநகருக்குள் முன்னேறுவதை நிறுத்துமாறு போராளிகளை தாம் கேட்டிருப்பதாகவும் ஆனால், லைபீரிய அரசின் மீதான ஆத்திரத்தால் அவர்கள் அதனை உதாசீனம் செய்துவிட்டு முன்னேறுகின்றனர் என்று கிளர்ச்சித் தளபதிகள் கூறியதாக பி.பி.ஸி. தெரிவித்துள்ளது.

மூன்று நாள்களாக தொடர்ந்து நடைபெறும் சண்டையில் இதுவரை எத்தனைபேர் உயிரிழந்தனர் என்பது தெரியவில்லை. ஆனால், நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர். இவர்கள் செஞ்சிலுவைச் சங்க வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். கடந்த மாதம் நடைபெற்ற சண்டையில் 500 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சண்டை தீவிரமடைந்துவரும் இந்நிலையில், நைஜீரியா ஒரு தொகுதிப் படையினரை லைபீரியாவுக்கு அனுப்பி வைத்துள்ளது. இவர்கள் மேற்கா பிரிக்க அமைதிப்படையினர் வந்து பணியில் ஈடுபடுவதற்கான ஆயத்தங்களை மேற்கொள்வர். இவர்கள் வேவுக் கடமைகளில் ஈடுபடுவார்கள் என்று நைஜீரியப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ம)



தலைநகர் மொன்றோவியாவில் உயிரிழந்து கிடக்கும் கிளர்ச்சியாளர் ஒருவரின் சடலம். அருகே இராணுவத்தினர்.

# நூற்றுக்கணக்கான கைதிகளை விடுவிக்க இஸ்ரேலிய பிரதமர் ஷெரோன் இணக்கம்

ஜெருசலேம்,ஜூலை22

இஸ்ரேலிய சிறைகளில் வாடும் ஆயிரக்கணக்கான பலஸ்தீன கைதிகளில் மேலும் நூற்றுக்கணக்கானோரை விடுவிக்க இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷெரோன் உடன்பட்டுள்ளார்.

**உலக அரங்கில்**

பலஸ்தீன பிரதமர் மஹ்முட் அப்பாஸ் அபு மாஸானுடன் ஞாயிற்றுக் கிழமை ஜெருசலேமில் நடந்த பேச்சுக்களின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆனால், இந்தப் பேச்சுக்களை அடுத்து இஸ்ரேலிய சிறைகளில் வாடும் ஆறாயிரம் பலஸ்தீனர்களும் விடுதலையாவார்கள் என்ற தனது நம்பிக்கை வீண்போயுள்ளதாக பலஸ்தீன பிரதமர் தெரிவித்திருக்கிறார்.

கைதிகள் அனைவரும் விடுதலையாவார்கள் என்று நம்பியிருந்த அவருக்கு இது ஏமாற்றம் அளித்துள்ளது என்று பலஸ்தீன தகவல் அமைச்சர் நபில் அமர் தெரிவித்துள்ளார்.

இருந்தபோதும், இஸ்ரேலின் இந்த நடவடிக்கை சமாதானத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் தென்பை மேலும் வலுவாக்கியுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இஸ்ரேல் விடுவிக்கவுள்ள கைதிகளின் பெயர் விவரங்கள் இம்மாத இறுதியில் அமெரிக்காவில் பலஸ்தீன, இஸ்ரேலிய பிரதமர்கள் ஜனாதிபதி புஷ்ஷை சந்திக்கும் போது வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

# அரைக் கிலோவில் அதிசய விமானம்!

சென்னை,ஜூலை22

அரைக்கிலோ எடையில் அதிசய விமானம் ஒன்றை சென்னையைச் சேர்ந்த நந்தகுமார் வடிவமைத்துச் சாதனை புரிந்துள்ளார்.

தனது கடின உழைப்பால் அரைக் கிலோ எடையில் குட்டி விமானத்தை உருவாக்கிய இவர் ஹெலிகொப்டர் என்பது போல இதற்கு 'ஆர்னிதாப்டர்' என்று பெயரிட்டுள்ளார்.

'ஆர்னிதாப்டர்' என்ற இத்தகைய விமானம் உருவாக்கப்பட்டிருப்பது இந்தியாவில் இதுவே முதல் முறையாகும்.

45 நிமிடங்கள்முதல் 50 நிமிடங்கள் வரை வானில் பறக்கும் இந்த விமானத்தை தொழிலதிபர்கள், விஞ்ஞானிகள் முன்னிலையில் இயக்கிக் காட்டிய நந்தகுமார் தனது கண்டுபிடிப்புக் குறித்துப் பெருமிதம் அடைந்துள்ளார். (ம)

# ஜனநாயகம் வேண்டுமென்பதற்காக ஈராக்கில் அதனைத் திணிக்கக்கூடாது

## ஐ.நா. செயலாளர் நாயகம் வலியுறுத்து

ஈராக்கில் விரைவில் ஜனநாயக ஆட்சி மலரவேண்டும். ஆனால், அதனை வெளியுலகத்தினர் திணிக்கக் கூடாது.

- இவ்வாறு அறிக்கை ஒன்றின் மூலம் கோரியுள்ளார் ஐ.நா.செயலாளர் நாயகம் கோபி அனான்.


ஈராக்கின் தற்போதைய நிலை குறித்து வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கோரியுள்ளார்.

22 பக்கங்கள் அடங்கிய இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

ஈராக்கில் ஜனநாயகம் திரும்புவதற்கான வழிமுறைகள் விரைவில் வகுக்கப்படவேண்டும். வெளியுலகத்தினர் தங்கள்மீது திணிக்கும் ஜனநாயகத்தை ஈராக் மக்கள் விரும்பவில்லை.எனவே, அங்கு புதிய அரசு அமைய ஐ.நா.சபை உதவவேண்டும், ஈராக்கியர்களே தமது அரசை நிர்ணயிக்கவேண்டும்.

ஈராக்கியர்களுக்குத் தேவையான பாதுகாப்பு, உண்மையான அதிகாரம் விரைவில் வழங்கப்படவேண்டும் என்பது பொதுவான கருத்தாகும். இறையாண்மை முழு அளவில் ஏற்படுத்தப்பட்டு, இராணுவ ஆக்கிரமிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்பது ஈராக்கியர்களின் விருப்பமாக உள்ளது.

ஈராக்கில் இன்னமும் நிலைமை மோசமாக உள்ளது. மக்கள் வாழும் சூழ்நிலை அங்கு இன்னமும் ஏற்படுத்தப்படவில்லை. கொள்ளை, சூறையாடல் போன்றன இன்னமும் தொடர்கின்றன, எனவே, இதனைக் கட்டுப்படுத்தி ஈராக்கில் ஜனநாயகம் மலர ஐ.நா.தன்னாலான பணிகளைச் செய்ய வேண்டும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.



## சண்டிலிப்பாயில் முதியோர் அடையாள அட்டை

யாழ்ப்பாணம்,ஜுலை22

வலி.தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 65 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் சமூக சேவை கள் திணைக்களத்தின் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி அடையாள அட்டை பெற விரும்பும் 65 வயதிற்கு மேற்பட்டவர்கள் அடையாள அட்டைக்குரிய இரண்டு படங்களுடன் உடனடியாக சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில இயங்கும் சமூகசேவைப் பிரிவுடன் தொடர்புகொள்ளவேண்டுமென சமூக சேவை அலுவலர் எஸ்.யோகானந்த ராஜா அறிவித்துள்ளார். (எ-185)

## பேச்சு, கட்டுரை போட்டி முடிவுகள்

வலி.தெற்கு,ஜுலை22

தெல்லிப்பழை கல்விக் கோட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற போதைப்பொருள் தடுப்புத் தினம் சம்பந்தமான பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் முதல்மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரம் முறையே வருமாறு:-

பேச்சுப்போட்டி

கனிஷ்ட பிரிவு:- பு.திருமாறன் (மகாஜனக் கல்லூரி), இ.துஷ்யந்தி (அருணோதயக் கல்லூரி), க. கிருஷ்ணா (மகாஜனக் கல்லூரி).

சிரேஷ்ட பிரிவு:- அ.அனுஷியா (மகாஜனக் கல்லூரி, பே.புஜபனா (மகாஜனக்கல்லூரி), இ.நகிதன் (மகாஜனக்கல்லூரி).

கட்டுரைப் போட்டி

கனிஷ்ட பிரிவு:- அ.சாந்தினி (அருணோதயக் கல்லூரி), கு.பிரியதர்ஷினி (அருணோதயக்கல்லூரி), ஆ.ரோகினி (மயிலிட்டி றோ.க. பாடசாலை)

சிரேஷ்ட பிரிவு:- வி.பிரியா (யூனியன் கல்லூரி). வை.வாமனன் (மகாஜனக் கல்லூரி),க.கயனி (யூனியன் கல்லூரி). (எ-152)

## உழவு இயந்திரத்தில் இருந்து தவறிவிழுந்த இளைஞன் படுகாயம்!

யாழ்ப்பாணம்,ஜுலை22

ஓடிக்கொண்டிருந்த உழவு இயந்திரப் பெட்டியில் இருந்து தவறிவிழுந்த இளைஞர் படுகாயமடைந்தார்.

கிளிநொச்சி, உருத்திரபுரம் பகுதியில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இந்தச சம்பவத்தில் உருத்திரபுரம் 8ஆம் வாய்க்காலைச் சேர்ந்த நவரத்தினம் தீபன் (வயது-18) என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவார்.

கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர், மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (எ-ம்-6-15)

## அல்லிப்பளையில் முன்பள்ளி திறப்பு

தென்மராட்சி,ஜுலை22

கடந்த 16வருட இடைவெளிக்குப் பின்னர் பளை அல்லிப்பளையில முன்பள்ளியொன்று கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முன்பள்ளி மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் பச்சிலைப் பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகத்தினர் இந்த முன்பள்ளியை அமைத்துள்ளனர்.

நிகழ்வின் தேசியக் கொடியினை போராளி மகேஸ் ஏற்றிவைக்க, முன்பள்ளி பெயர்ப்பலகையை தமிழர் புனர்வாழ்வுக்கழக பளைப் பிரதேச உதவிப் பணிப்பாளர் கேசவன் திறந்துவைத்தார்.

அல்லிப்பளை கிராம அலுவலர் நா.வேதநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்பள்ளி மண்டபத்தினை பளைப் பிரதேச செயலக நிர்வாக அலுவலர் தா.சுவாமிநாதன் திறந்து வைத்து உரைநிகழ்த்தினார்.

இந்த முன்பள்ளியுடன் பளைப் பிரதேசத்தில் 18முன்பள்ளிகள் அமைக்கப்பட்டு இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (எ-117)

## சுயதொழில்விருத்திக்கு கொடிகாமத்தில் கடன்

தென்மராட்சி,ஜுலை22

கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தின் உதவியுடன் சங்க எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும சுயதொழில் முயற்சியாளர்களுக்கு கடன்களை வழங்கி வருகின்றனர்.

முதல் கட்டமாக கடந்த வாரம் 50பயனாளிகளுக்கு தலா 20ஆயிரம் ரூபா வதம் கடனாக வழங்கியுள்ளனர்.

கடன் வழங்குவதற்கென மேற்படி நிறுவனத்தினர் ஏழு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவினை வழங்கியுள்ளனர் என சங்கத் தலைவர் தெரிவித்தார்.(எ-117)

# காரைநகர் மருத்துவமுகாமில் 961 பேர் பயன்பெற்றனர்

காரைநகர்,ஜுலை22

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தில நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மருத்துவ முகாமில் 961 பேர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

காரைநகர் உதவி அரசாங்க அதிபரின் அனுசரணையுடன், சாவகச்சேரி லயன்ஸ் கழகம், கீபூ மெடிக்கா, யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடம் ஆகியன இணைந்து நடத்திய இந்த மருத்துவ முகாம் காலை 9மணி தொடக்கம் மாலை 3மணிவரை நடைபெற்றது.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் வே.சாம்பசிவம் தலைமையில் நடைபெற்ற இந்த மருத்துவ முகாமை லயன் மாவட்ட கவுணர் எஸ்.சிவானந்தம் தொடக்கிவைத்தார். இதில் பங்குபற்றிய 961 பேருக்கும் பொது வைத்தியம், இரத்த அமுக்கம், சலரோகம், கண் ஆகியவற்றுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

கண் பரிசோதனை மேற் கொண்ட 50பேருக்கு உடனடியாக கண்ணாடிகள் வழங்கப்பட்டன. (எ-73)

## மின் இணைப்புக்கு ரூபா. 10 ஆயிரம் அன்பளிப்பு

கோப்பாய்,ஜுலை22

ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயத்திற்கு மின் இணைப்பினை மேற்கொள்வதற்கென பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் பத்தாயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (எ-72)

## கோப்பாய், இருபாலைப் பகுதிகளில்

# அனுமதியின்றி மணல் ஏற்றுவோர் மீது பொலீஸார் சட்டநடவடிக்கை

வலி.வடக்கு,ஜுலை22

கோப்பாய் பொலீஸ் பிரிவில் சட்டவிரோதமான முறையில் மணல், மரம் ஏற்றிவரும் வாகனங்கள் மீது பொலீஸார் கடும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

கடந்த காலங்களில் இருபாலைப் பகுதியிலும் மற்றும் சில இடங்களில இருந்தும் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வதில் சிலர் ஈடுபட்டு வந்தனர்.

எனினும், அண்மையில் கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் பணிப்பின் பேரில் வீதியில் மணல். மரங்கள் ஏற்றிவரும வாகனங்கள் தடுத்து நிறுத்தப்பட்டு அவற்றுக்கான அனுமதிப் பத்திரங்கள பரிசோதனை செய்யப்படுகின்றன என்றும் -

அனுமதிப்பத்திரம் இன்றி மரம், மணல் ஏற்றிச்செல்வோர்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-86)


## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

எமது வித்தியாலயத்தின் ஆசிரியர்
திரு. இ.கருணாகரன்
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி இராசையா சரஸ்வதி**
அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/இமையாணன்
அ.த.க.வித்தியாலயம்,
வல்வெட்டித்துறை. (20507) (21-19-14-16)

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்,
மாணவர்கள்.

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 - 01 - 1928



மறைவு 02 - 08 - 2002

**திருமதி ஜெயமணி யோகலிங்கம்**

திதி 22-07-2003

ஓராண்டு மறைந்ததம்மா உங்கள் நினைவினிலே
ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி விட்டு
மீளாத் துயில் கொண்டதேன்?
மாறாத நேசம் கண்டு நீங்கள்
கூறாமல் போனதென்ன?
எங்களால் உங்களை எப்படி மறக்கமுடியும் அம்மா,
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கணவர்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

பொற்பதி றோட்,
கொக்குவில் கிழக்கு,

(20547) (14-16)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

மண்மகிழ 24 - 11 - 1936



கண்நெகிழ 23 - 06 - 2003

**அமரர் வேலுப்பிள்ளை பொன்னையா**

(ஈஸ்வரி)

முப்பத்தொரு நாளுமாயிற்றோ நீர் எமைப்பிரிந்து - உமது ஆத்மா சாந்திபெற ஆண்டவனை இறைஞ்சுகிறோம்.

எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டி, சபிண்டீகரணக் கிரியைகள் நாளை (23.07.2003) புதன்கிழமை எமது தற்காலிக இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வுகளில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

☆ தயவு செய்து இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுவருகை தருமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

தற்காலிக முகவரி: உபயகதிர்காமம். புலோலி தெற்கு, புலோலி.

நிரந்தர முகவரி: மருதங்கேணி தெற்கு, தாழையடி.

மனைவி, மருமகள், மகன் குமார்.

(20528) (21-26-14-16)

## மரண அறிவித்தல்

**திருமதி சீவரத்தினம் தில்லைநாயகி**

மலேஷியாவைப் பிறப்பிடமாகவும் வீமன்காமம், தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் சாவகச்சேரியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சீவரத்தினம் தில்லைநாயகி அவர்கள் 15-07-2003 செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதி செல்வநாயகி (கனடா)அவர்களின் அன்புச் சகோதரியும் மில்க்ராஜ், ஆனந்தன் (கனடா), விஜயகுமாரி, ஞானகுமாரி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற மகலன் அற்புதராசா (தென்மராட்சி சிற்றூர்திச் சேவை முன்னாள் தலைவர்), நவரஞ்சன் (பிரான்ஸ்), பாமா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் விக்ரர் அற்புதநேசன், நீற்றா சஜீவா, அற்புதகுமார், மாலினி, றோசி, டசித்தா, சுரேஸ்குமார், சங்கர், அபிராம் சந்தோஷ், சத்தியன், திலீப்குமார், வஷிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-07-2003) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்துக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி அற்புதராசா விஜயகுமாரி
(பேபி-மகள்)

இல.5,டச்சு வீதி,
சாவகச்சேரி. (20546)(21-14-16-19)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





**திருமதி யோகானந்தம் செல்வமணி**

**செல்வன் யோகானந்தம் சுரேஷ்**

| | | | | |
|---|---|---|---|---|
| 15-01-1954 | → | தோற்றம் | ← | 18-02-1983 |
| 02-08-2002 | → | மறைவு | ← | 06-03-2002 |

எங்கள் அன்புத் தெய்வமே!
நாங்கள் உங்களைப் பிரிவோமென்று
கனவு கூடக் கண்டதில்லை
எம்மை அன்போடும் பாசத்தோடும்
கனவுகளோடும் வளர்த்த உங்கள்
நினைவுகள் ஒன்றல்ல ஆண்டுகள்
பல சென்றாலும் எம் மனவுலகில்
நிலைத்தேயிருக்கும்!

பிரிதலுக்கான அறிவிப்பு
ஏதுமின்றியே பிரிந்து போனவனே!
நீ கால் தடம்பதித்த மண்ணின் வாசமும்
உன் குறும்புச் சொல்களின் நினைவும்
பட்டாம் பூச்சியாய்ச் சிறகடித்துத் திரிந்த
நாள்களும் நினைக்கும் போது நெஞ்சம்
கனக்குதடா! ஆண்டுகள் பல சென்றாலும்
உன் நினைவுகள் மனதை விட்டகலாது!

உங்களது ஆத்மா சாந்திபெற ஆண்டவனைப் பணிந்து வேண்டுகின்றோம்.

அல்வாய் மேற்கு, திக்கம். (20521) (21-26-14-16)

- குடும்பத்தினர்.

உதயன்

## தன்போக்கை மறந்து விட்டு ஊருக்கு உபதேசம்

விடுதலைப் புலிகள் கோரிய வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக 'தற்காலிக நிர்வாகக் கவுன்ஸில்' என்ற பெயரில் அரசு சமர்ப்பித்திருக்கும் திட்ட வரைவின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

அந்தத் திட்ட வரைவில் அரசு தெரிவித்திருக்கும் யோசனைகள் விடுதலைப் புலிகளின் எதிர்பார்ப்பை பூர்த்திசெய்யுமா என்பது சந்தேகமே என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

தமிழர் தரப்பைப் பொறுத்தவரை இந்த யோசனைகளில் சில சாதகமான அம்சங்களும் பல பாதகமான அம்சங்களும் இருப்பது நோக்குதற்குரியது.

அதேசமயம், இந்தத் திட்ட வரைவு ஊடாக அரசுத் தரப்பு வெளிப்படுத்த முற்பட்டிருக்கும் அடிப்படைக்கொள்கை விவகாரம் ஒன்று அரசுத் தரப்புக்கே, திருப்பிப் பொருத்தப்பட வேண்டியிருப்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

தமிழர் தரப்பைப் பொறுத்தவரை, அவர்களின் ஏக பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள்தான் என்ற யதார்த்தத்தை இந்தத் திட்டவரைவு ஓரளவுக்கு ஒப்புக்கொண்டிருப்பது சாதகமான அம்சம். புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியேற்றம் போன்ற அனைத்து விவகாரங்களும் உத்தேச கவுன்ஸிலிடம் ஒப்படைக்கப்படும் என்ற யோசனையும் எதிர்பார்க்கப்பட்ட - நிறைவுசெய்யப்பட வேண்டிய - அம்சம்தான்.

ஆனால், காணி தொடர்பான அதிகாரத்தை உத்தேச கவுன்ஸிலுக்கு வழங்காமல், அரசு பிடித்து வைத்துக்கொண்டிருந்தால், மீள் குடியமர்வு என்ற செயற்பாடு கேள்விக்குள்ளாவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

உத்தேச கவுன்ஸிலுக்கு வருமானம், நிதி திரட்டுகை தொடர்பான தெளிவான ஏற்பாடுகளும் திட்ட வரைவில் இல்லை. ஆனால், வரி அறவிடல் (வருமானம்) தொடர்பான அதிகாரம் ஏதும் கவுன்ஸிலுக்கு வழங்கப்படமாட்டாது என்பதை மட்டும் முன்கூட்டியே - திட்டவட்டமாக - அரசு அறிவித்துவிட்டது.

அடுத்தது - கவுன்ஸிலின் தலைவர் தெரிவு தொடர்பானது. இது விடயத்தில் இரு மாற்று யோசனைகளை அரசுத் தரப்பு முன்வைத்திருக்கின்றது. அந்த இரண்டு மாற்று யோசனைகள் ஊடாகவும் அரசுத் தரப்பு வலியுறுத்த முயற்சிக்கும் விடயம் ஒன்றுதான் என்பது அந்த யோசனையைப் பார்க்கும் எவருக்கும் தெளிவாகப் புரிந்துவிடும்.

உத்தேச கவுன்ஸிலில் தமிழர் தரப்பான விடுதலைப் புலிகளுக்குப் பெரும்பானமை இடம் அளிக்க அரசு இணங்கியுள்ளது. ஆனால், வடக்கு - கிழக்கில் சிறுபான்மையினரான முஸ்லிம் தரப்பினதோ, சிங்களத் தரப்பினதோ நலனைப் பாதிக்கும் எந்த விடயத்தையும் தமிழர் தரப்புச் செய்வதைத் தடுத்துநிறுத்தும் விதத்தில் உத்தேச கவுன்ஸிலின் தலைவர் பற்றிய மாற்று யோசனைகள் இரண்டையும் அரசு முன்வைத்திருக்கின்றது. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுப்பதன் பிரதிபலிப்பு இது!

வடக்கு - கிழக்கில் பெரும்பான்மையினர் தமிழர்கள். இரண்டு தசாப்த கால யுத்தத்தினால் பெரிதும் பாதிப்புற்றிருப்பவர்களும் அவர்களே. யுத்தப் பாதிப்பிலிருந்து மீளுவதற்கான - அவசர- மனிதாபிமானப் பணிகளை அவர்கள் முன்னெடுக்க வேண்டும். அதற்காகத்தான் இடைக்கால நிர்வாக சபையை அவர்கள் கோருகின்றனர்.

வடக்கு - கிழக்கில் பெரும்பான்மையினரான தமிழர்கள், அந்த இடைக்கால ஏற்பாடாகச் செய்யப்படும் நிர்வாகத்தின்மூலம் - தற்காலிகமாக அமைக்கப்படும் கவுன்ஸிலின் மூலம் - தமது பெரும்பான்மையைப் பயன்படுத்தி அங்குள்ள சிறுபான்மையினருக்குக் குந்தகம் விளைத்து விடக்கூடாது என்று அரசு விரும்புகிறது.

ஆனால், இதே சிங்கள அரசுதான் கடந்த ஐந்து தசாப்த காலமாக பெரும்பான்மை என்ற தனது ஆதிக்கத்தை வைத்துக்கொண்டு, நாட்டின் சிறுபான்மையினரான தமிழர்களை அடக்கி வந்தது; அவர்களின் உரிமையைப் பறித்தது; அவர்களை அடிமைகளாக்கியது. அதனைத் தொடரவும் செய்கிறது.

வடக்கு - கிழக்கில் தற்காலிக ஏற்பாடாகச் செய்யப்படும் இடைக்கால நிர்வாகத்தில் அங்குள்ள பெரும்பான்மையினர் சிறுபான்மையினரை தப்பித் தவறி அடக்கி, ஒடுக்கிவிடக்கூடாது என்பதற்காக முன்கூட்டியே இவ்வளவு அக்கறை காட்டும் அரசு - அதற்கான கட்டுப்பாடுகளைப் புகுத்தும் அரசு - தேசிய மட்டத்திலும் சிறுபான்மையினரான தமிழர்களைப் பாதுகாப்பதற்காக அத்தகைய ஏற்பாடுகளை அரசமைப்பு மூலம் உறுதிப்படுத்த முன்வருமா?

'ஊருக்கல்லவா உபதேசம்; உனக்கில்லையடி!' என்பதுதான் சிங்களப் பேரினவாதத்தின் அடிப்படைப் போக்கு என்பதால் இந்தக் கேள்விக்கு சாதகமான பதில் ஏதும் கிடைக்காது என்பது மட்டும் நிச்சயம்.

## தமிழீழ மருத்துவப் பிரிவின் சேவைகள் 'இன்னொரு போர் முகம்' நூலில்

### அறிமுக விழாவில் பாலகுமாரன் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை22

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மருத்துவப் பணியின் விரிப்புகளை வெளிப்படுத்தும் வகையில் தூயவனின் 'இன்னொரு போர் முகம்' நூல் அமைந்துள்ளது என விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் மாவீரர் லெப்ரினன்ட் கேணல் தூயவன் அரசறிவியல் கல்லூரியில் நடைபெற்ற 'இன்னொரு போர்முகம்' நூல் அறிமுக விழாவில் பங்குகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

க.வே.பாலகுமாரன் மேலும் கூறியதாவது:-

எங்கள் மண்ணை எதிரிகள் முற்றுகையிட்டு, இறுக்கி எம்மையெல்லாம் கொன்று ஒழிப்போம் என்ற நிலையில், எங்கள் உயிர்களைக் காக்கும் பணியில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்கள் மருத்துவர்களும் மருத்துவப் போராளிகளுமாவர்.

போராடிக்கொண்டு போர்ச் சூழலில் செய்த மருத்துவப் பணியின் மகத்துவத்தை இன்னொரு போர்முகம் நூலின் ஊடாக தூயவன் வெளிப்படுத்தியுள்ளார் - என்றார்.

முன்னதாக, தமிழீழ கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் பொது ஈகைச்சுடரினை ஏற்றிவைத்தார். மருத்துவப் போராளி ஜோன்சன் வரவேற்புரையையும், நூல் அறிமுக உரையை வெளிச்சம் சஞ்சிகை ஆசிரியர் கருணாகரனும் நிகழ்த்தினர். மதிப்பீட்டுரைகளை நிலாந்தன் மற்றும் புதுவை இரத்தினதுரை ஆகியோர் நிகழ்த்தினர்.

நூலின் முதற்பிரதியை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படை அணியின் சிறப்புத் தளபதி நகுலன், மாவீரர் மேஜர் தனாவின் சகோதரி அஞ்சலாதேவியிடம் வழங்கினார். பதிலுரையை நூலாசிரியர் தூயவன் நிகழ்த்தினார். (எ-9)

## நாட்டு நடப்பு

### காதலன் தீட்டிய கடிதம்

*கயல் விழியாளே!*
பற்பல உவமை சொன்னேன்
பாவையுன் எழிலைச் சொல்ல
இன்னும் உன் அழகைச் செப்ப
இவ் இளைஞனுக்கு அறிவே தம்மா
சொற்பல அடுக்கிடாது
சுருங்கிடச் சொல்வேன் ஆகில்
அண்டையின் பழகினோரும்
அகல்வரோ உன்னை விட்டு
கண்டவர் மீண்டும் காண
களிப்புடன் காத்திருப்பரன்றோ
முற்றிலும் தமிழர் பண்பு
முழுதுமாய் அழியும் என்று
கற்பனை மிகுதியாலே
கண்கணீர் சொரியலாமோ
முற்தவப் பயனாலன்றோ உன்னை
மூத்தவளாகப் பெற்றார்.

*அன்புக் காதலன்*
*முல்லை வளவன்.*
- விகடகவி.

## மோட்டார் சைக்கிளில் சென்று வழிப்பறி, திருட்டு நடத்தும் கும்பல்

### குடாநாடு எங்கும் நடக்கிறது

யாழ்ப்பாணம்,ஜூலை22

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அண்மைக்காலமாக மோட்டார் சைக்கிள் கும்பல் நடத்தும் திருட்டு மற்றும் வழிப்பறி என்பன அதிகரித்துள்ளன என முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

'ஹெல்மெட்' சகிதம் மோட்டார் சைக்கிள்களில் அணிவகுத்துத் திரியும் இந்தக் கும்பல், முகவரி விசாரிப்பது போன்ற பாவனையில் பெண்கள் மற்றும் வயோதிபர்கள் தனியாக இருக்கும் வீடுகளுக்குச் செல்கின்றது என்றும் -

பின்னர், அங்குள்ளவர்களின் தங்க நகைகளை அபகரித்துச் செல்வதுடன், பெறுமதிமிக்க பொருள்களையும் எடுத்துக்கொண்டு மோட்டார் சைக்கிள்களில் தப்பிவிடுகின்றது என்றும் - கூறப்பட்டது.

அத்துடன், இந்தக் கும்பல்கள் வீதிகளில் செல்வோரின் பணப்பையை அபகரிப்பது, பெண்களின் நகைகளை அறுத்துச் செல்வது போன்றவற்றில் ஈடுபடுவதுடன், தமது காரியம் கைகூடாத தருணத்தில் உரியவர்களைத் தாக்கிவிட்டும் சென்றுவிடுகின்றனவாம்.

வங்கிகளில் பணத்தை எடுத்துக்கொண்டு செல்லும் பொது மக்களை அவதானித்துவிட்டு இந்தக் கும்பல் அவர்களைப் பின்தொடர்ந்து சென்று அதனை அபகரிக்க முயன்ற சம்பவங்களும் அண்மைக்காலமாக யாழ்நகரப் பகுதியில் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் - மானிப்பாயில் உள்ள வங்கியொன்றில் அண்மையில் 2 லட்சம் ரூபா பணத்தை எடுத்துச்சென்ற ஒருவர் தமது 'ஹைஏஸ்' வானில் பணப்பையை வைத்துவிட்டு சுதுமலை அம்மன் கோவிலில் பொங்கலில் ஈடுபட்டிருந்தார் என்றும் -

வங்கியிலிருந்து அவரைப் பின்தொடர்ந்த மோட்டார் சைக்கிள் கும்பல் வானில் இருந்த பணத்தை அபகரிக்க முயன்ற வேளை பொதுமக்களிடம் சிக்கிக்கொண்டதாகவும் - தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர் பொதுமக்களால் நையப்புடைக்கப்பட்ட இவர்கள் மானிப்பாய் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அண்மையில் சுதுமலைப்பகுதியில் வீதியால் சென்று கொண்டிருந்த இரு பெண்களின் நகைகளும் மோட்டார் சைக்கிள் கும்பலால் அறுத்துச்செல்லப்பட்டுள்ளன.

மேற்படி வழிப்பறித் திருட்டுச் சம்பவங்கள் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக இடம்பெற்றுவருவதாக பொலீஸ் வட்டாரங்களிலும் தெரிவிக்கப்பட்டது. (எ-10-139)

1983 ஜூலை தாக்குதலில் வீரச்சாவடைந்த

## செல்லக்கிளியின் நினைவாக நாளை அஞ்சலி நிகழ்வுகள்

வலி.வடக்கு, ஜூலை22

1983ஆம் ஆண்டு வீரச்சாவடைந்த மூத்தபோராளி லெப்டினன்ட் செல்லக்கிளியின் 20ஆவது வருட நினைவு நாள் நிகழ்ச்சிகள் நாளை புதன்கிழமை திருநெல்வேலியில் இடம்பெறவுள்ளன.

1983ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் திகதி திருநெல்வேலி வளாக வீதிச் சந்திக்கு அருகே இராணுவ வாகன அணிமீது விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் 13 படையினர் உயிரிழந்தனர். அந்தத் தாக்குதலில் பங்கேற்று விழுப்புண் அடைந்து பின்னர் வீரச்சாவடைந்தவர் செல்லக்கிளி அம்மான்.

அவர் நினைவாக நாளை திருநெல்வேலியில் தாக்குதல் சம்பவம் நடைபெற்ற இடத்தில் நினைவுக்கல் பதிக்கப்படவுள்ளது. விசேட அஞ்சலி நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.(ஐ-86)

## வைத்தீஸ்வரன் ஆலய தேவி மஹோற்சவம் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை22

யாழ். திருவண்ணைநகர் ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரசுவாமி ஆலயத்தின் (வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோயில்) வருடாந்த தேவி மஹோற்சவம் நாளை புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் காலை 10 மணிக்கு அபிஷேக பூசைகள் ஆரம்பமாகித் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறும். முற்பகல் 11 மணியளவில் கொடி யேற்றம் நடைபெறும்.

எதிர்வரும் 31ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவன்று காலை 8 மணிக்கு வசந்தமண்டபப் பூசைகள் ஆரம்பமாகி 9 மணிக்கு அம்பாள் தேரில் எழுந்தருளுவார்.மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறும்.(எ-10)

### நாளை

ஆடி 07
புதன்கிழமை,
(23.07.2003)
திதி : தசமி
முழுவதும்
நட்சத்திரம் : பரணி
முற்பகல்11.46
சுபநேரம் : 4.32 - 6.02
ராகுகாலம் : 12.02 - 1.32
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

திறமையுடைய தொழிலாளிக்கு வழங்கப்படும் சம்பளம் ஒருபோதும் மிகையான சம்பளமாக இருக்காது.

## கண்ணிகள் அகற்றிய பகுதிகள் சரசாலையில் நேற்று கையளிப்பு

தென்மராட்சி,ஜூலை22

தென்மராட்சிப் பிரதேசத்தில் சரசாலை தெற்கு கிராம அலுவலர் பிரிவில் 'ஹொங்கோ' மிதிவெடி அகற்றும் அமைப்பினால் கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பகுதிகள் நேற்று பிரதேச செயலக அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன.

மேற்படி அமைப்பின் தலைவர் டொம்சிமித் கண்ணி அகற்றப்பட்ட பகுதியை தென்மராட்சிப் பிரதேச செயலக ஆளணி அலுவலர் க.பாலசுப்பிரமணியத்திடம் சம்பிரதாயபூர்வமாகக் கையளித்தார். சரசாலை மத்தி சனசமூக நிலையத்தில் இந்தக் கையளிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

இப்பிரிவில் உள்ள மக்கள் குடியிருப்பு பகுதிகள், விவசாய நிலங்கள் உள்ளடங்கிய 72 ஆயிரத்து 208 சதுரமீற்றர் பரப்பளவுடைய பகுதியிலிருந்து ரொக்கெற்றுக்கள் இரண்டு, ஜொனி மிதிவெடிகள் 64, அம்மான் மிதிவெடிகள் மூன்று உட்படப் பல வெடிபொருள்கள் மீட்கப்பட்டதாக மேற்படி அமைப்பினர் தெரிவித்தனர்.

சரசாலை வடக்கின் சில பகுதிகள் மிதிவெடிகள் அகற்றப்பட்டு ஏற்கனவே பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-10-117)

## தொழில்நுட்பக் கல்லூரியில் கைத்தொழில் கண்காட்சி

### ஒக்ரோபர் மாத முதல் வாரத்தில் நடைபெறும்

யாழ்ப்பாணம்,ஜூலை22

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் கைத்தொழில் தொடர்பான கண்காட்சி நடைபெறவுள்ளது.

ஒக்ரோபர் முதல் வாரத்தில் இருந்து தொடர்ச்சியாக பத்து நாள்களுக்கு கைத்தொழில் முறையில் பயன்படுத்தப்படும் நவீன இயந்திரங்களையும், பழைமைவாய்ந்த இயந்திரங்கள் என்பவற்றை பயன்படுத்தியும் -

எமது பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் கைத்தொழில் நுட்பங்களை மக்களுக்கு எடுத்துக்கூறும் வகையிலும் - இந்தக் கண்காட்சி ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது என்று தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் என்.யோகராஜன் தெரிவித்தார்.

தென்பகுதி மக்களின் கைத்தொழில்நுட்பங்கள், அவர்கள் பின்பற்றிவருகின்ற இயந்திரப் பாவனைமுறை பற்றியும் இந்தக் கண்காட்சியில் எடுத்துக்கூறப்படும்.

இதற்குரிய சகல ஏற்பாடுகளையும் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம் செய்துள்ளது என்றும் - அதிபர் மேலும் தெரிவித்தார். (எ-ரி)

# புற்று நோயாளர்கள் கவனத்திற்கு!

யாழ்.நகரிலுள்ள சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்கிற்கு இம்மாதம் 22ஆம், 23ஆம் திகதிகளில் Dr.P.வாணி அவர்கள் வருகை தரவுள்ளார். பதிவுகளை முற்கூட்டியே செய்யவும்.

தொடர்புகளுக்கு:

**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்,**
அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்,
08, இராமையாசெட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(20527) (21-15-14)


## வீதி விபத்தொன்றில் மூவர் பலி!

காலி வீதி வாதுவ, பொத்துபிட்டிய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம பெற்ற வாகன விபத்தொன்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பலியாகியுள்ளனர்.

களுத்துறையிலிருந்து வந்த டிப்பர் வண்டியும் எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதனால் இவ்விபத்து இடம் பெற்றது. விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த தந்தை, தாய், 10 வயது மகள் ஆகியோர் பலியாகினர்.

வாகனம் ஒன்றை டிப்பர் வண்டி முந்திச் செல்ல முற்படுகையில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது என்று கூறப்படுகிறது. டிப்பர் வண்டியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

பலியாகியோர் கல்கிசைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## ஆசிரியர் சங்க செயற்றிட்ட அறிக்கை வெளியானது

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அண்மைக்காலத்தில் தாம் மேற்கொண்ட செயற்றிட்டங்கள், தீர்மானங்கள் கொண்ட தொகுப்பு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சாதனைகள் என்ற தலைப்பில் இது வெளியாகி உள்ளது.

சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவத்தினால் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கை சங்கத்தின் பிராந்திய கோட்டகிளை நிர்வாகத்தினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (எ-11)


# இதோ!

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

★ *100% இளமையையும் வலிமையையும் தரும்!*

**சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்**

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

*MANUFACTURED BY:*
**SITHARA PRODUCTS,**
PUTTALAM ROAD,
CHILLAW.
(REG.NO: 6382) AR/PR/No. 228

யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
**சிவா நறுமணப் பூங்கா,**
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். TP:222 2567.


# பதின்மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



## செல்வன் தெய்வேந்திரம் மகேந்திரம்

(மகா)

தோற்றம் 27-12-1969 மறைவு 22-07-1990

பத்துமாதம் சுமந்தேனடா
பெற்ற வயிறு துடிக்குதடா!
இத்தரையில் உனைப் பிரிந்து
பதின்மூன்றாண்டும் போச்சே!
வித்தகனே மகேந்திரா
விளங்கு நகை முகம் காண்போமோ?

அல்லின் வீதி. காரைநகர்.
தற்போதைய முகவரி:
பாடசாலை வீதி. சங்கரத்தை.
வட்டுக்கோட்டை (20422)

பாசமுள்ள:
*அப்பா, அம்மா, அக்கா, அண்ணா, தம்பிமார்,*
*மச்சான், மச்சாள்மார்,*
*மக்கள், மருமக்கள்.* (21-15-14)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## *கணபதிப்பிள்ளை கந்தையா*

எமது செயலகத்தில் கடமையாற்றும்
திருமதி கலாதேவி குணரட்ணம்
அவர்களின் அன்புத் தந்தையார்

## கணபதிப்பிள்ளை கந்தையா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆறுதலைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்.

பிரதேச செயலக
ஊழியர் நலன்புரிச் சங்கம்.
பிரதேச செயலகம். தென்மராட்சி. (சி-29015) (21-15-14)


# மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

உங்களுக்குத் தேவையான சகலவிதமான புத்தகங்களும் ஒரே கூரையின்கீழ் பெற்றுக்கொள்ள 'புத்தகக் கடல்'. 10% - 50% கழிவு வழங்கப்படும். ஒரு சில மருத்துவ, பொறியியல், கணனி புத்தகங்கள், ஆங்கிலம் கற்றுக்கொள்ள பாடசாலை மாணவர்களுக்கான ஒரு சில புத்தகங்களும், உபகரணங்களும் ரூபா 10 - ரூபா 100 வரை பெற்றுக்கொள்ளலாம். இவை தவிர, பாடசாலை அலுவலக உபகரணங்களும் பாடசாலை அழிபொருள்கள், மூலப்பொருள்களும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைகளுக்கு இலவச விநியோகம். உங்கள் தேவை எதுவானாலும் பூர்த்திசெய்ய தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-

## ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

*இல. 212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.* T.P.021-222 5542

(C/28764) (21-14-15)



விலை 16/=

# சுடர் ஒளி

## ஜூலை 27 - ஓகஸ்ட் 02




- நெருக்கடிகளின் மத்தியில் நகரும் கூட்டணி முயற்சி
- தமிழர் வரலாற்றிலே மறக்கமுடியாத ஜூலை
- இன்னொரு இந்தியத் தலையீடு
  வடக்கில் எழுகின்ற சந்தேகம் (வடபுலம்)
- இழுபடுகின்ற தண்டனைகளும்
  எழுந்து நிற்கின்ற தீர்ப்புகளும்
- மனிதன் கண்டுபிடிப்புகள்
  விடுக்கும் சவால்
- கேள்விச் செவியன் ஊரைக் கெடுத்தான்
  உளவுக்காரன் உலகை அழித்தான்

**மேலும் பல அம்சங்களுடன்........**

(சி-29057) (24-13-18)

### முல்லை மண்மீட்பு நாளை மறக்கவே முடியாது!

# பரவிக்கிடந்தன படையினரின் சடலங்கள்; பார்க்கும் இடமெங்கும் கனரக ஆயுதங்கள்!

## மீனவர் சங்க சமாசத் தலைவர் அன்று கண்டதை விவரிக்கிறார்

-முல்லைத்தீவிலிருந்து அலுவலகச் செய்தியாளர்-

முல்லைத்தீவு,ஜூலை22

முல்லைத்தீவு படைமுகாம் விடுதலைப் புலிகளால் வெற்றிகரமாக மீட்கப்பட்டுவிட்டது என்ற செய்தியை அறிந்ததும் அங்கு ஓடோடிச் சென்றோம். ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினரின் சடலங்கள் அங்கும் இங்குமாகப் பரவிக்கிடந்தன. இரண்டு



ஆட்லறிகள், மோட்டார்கள் உட்பட கனரக ஆயுதங்கள் பார்க்கும் இடமெங்கும் நிறைந்து காணப்பட்டன. அவற்றைப் பார்ப்பதற்கு ஏராளமான மக்கள் முண்டியடித்தனர். மொத்தத்தில் அன்றைய நாளை மறக்கவே முடியாது.

'ஓயாத அலைகள்-I' நடவடிக்கை மூலம் முல்லைத்தீவு படை முகாம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட வெற்றிச்சமர் குறித்து தனது அனுபவத்தை இவ்வாறு விவரித்தார் முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் செ.இரத்தினம்.

முல்லை முகாம் தகர்ப்பின் 7ஆம் ஆண்டு நிறைவு வெற்றிவிழா கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவில் கோலாகலமாக நடைபெற்றவேளை முல்லை முகாம் தாக்குதல் குறித்த தனது உணர்வலைகளை அவர் 'உதயன்' செய்தியாளருடன் பகிர்ந்து கொண்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

முல்லைத்தீவை 1990ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா இராணுவம் கைப்பற்றியது. அப்போது அங்கிருந்து சகல மக்களும் இடம்பெயர்ந்து வேறு பகுதிகளுக்குச் சென்று அல்லலுற்று வாழ்ந்து வந்தனர்.

எமது மீனவ சமூகத்தவர்கள் தொழில் செய்யமுடியாமல் எவ்வளவோ கஷ்டப்பட்டார்கள். நாங்கள் கேட்கும் போதெல்லாம் அள்ளிக்கொடுக்கும் இந்த முல்லைத்தீவுக்கடல் அன்னை, ஸ்ரீலங்கா கடற்படையின் கோரப்பிடிக்குள் சிக்கித் தவித்துக்கொண்டிருந்தாள். நாங்கள் ஆண்டாண்டு காலமாக தொழில் செய்த முல்லைக் கடலில் இறங்கமுடியாத துர்ப்பாக்கிய நிலை எமக்கு ஏற்பட்டது.

வேறுபகுதி கடலில் மீன்பிடிக்கச் செல்லும் கடற்றொழிலாளர்கள் கூட நாளுக்குநாள் பிணங்களாகக் கரையொதுங்குகின்ற பேரவலமும் நிகழ்ந்து கொண்டிருந்தது.

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் நிலைகொண்டிருந்த ஸ்ரீலங்கா கடற்படையினரின் பேராக்கள் எமது மீனவர்களை நாளுக்குநாள் கொன்றொழித்தன. கடற்படையினரின் கோரத் தாக்குதலால் கரையொதுங்குகின்ற சடலங்கள் பலவற்றை கடற்கரையில் வைத்தே அடக்கம் செய்ய வேண்டிய நிலைமைகூட பலதடவைகள் ஏற்பட்டன.

இவற்றினால் கொதிப்படைந்திருந்த நாங்கள் எப்போது எமது முல்லை மண் எங்கள் கைக்கு வரும், எமது கடலன்னை எப்போது எம்மை மீண்டும் தன் மடியில் சுமப்பாள் என்று ஏங்கிய வண்ணம் இருந்தோம். எமது ஏக்கத்துக்கும் எதிர்பார்ப்புக்கும் எமது தேசியத் தலைவர் அவர்கள் 1996ஆம் ஆண்டு செயல்வடிவம் கொடுத்தார்.

ஆறுவருடங்கள் எமது மண்ணில கொட்டமடித்துக்கொண்டிருந்த ஸ்ரீலங்காப்படைகள் தமிழர் படையினால் துடைத்தெறியப்பட்டனர். அந்த வெற்றிச்செய்தி அறிந்ததும் முல்லை மண் காண ஓடோடி வந்தோம்.

ஆட்டிலறிகள் ஒருபுறம், கனரக ஆயுதங்கள் மறுபுறம் சிதறுண்டு கிடந்தன. ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினரின் சடலங்கள் பரவிக் கிடந்தன. ஆறு வருடங்களாக நூற்றுக்கு மேற்பட்ட அப்பாவி மீனவர்களையும் மக்களையும் கொன்றொழித்த முல்லை முகாம் படையினர் பார்க்கும் இடமெங்கும் சடலங்களாகக் கிடந்தார்கள். அப்போது எமக்கு ஏற்பட்ட ஆனந்த மிதப்பை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. எமது மண்ணையும் கடலையும் மீண்டும் எம்மிடம் பெற்றுத் தந்த புலிகளுக்கு எம்மாலான சகல உதவிகளையும் வழங்கினோம். ஆயுதங்களையும் படையினரின் சடலங்களையும் அப்புறப்படுத்தினோம். காயமடைந்த போராளிகளுக்கு ரத்ததானம வழங்கினோம். அவர்களைப் பராமரித்தோம். எமது கடற்றொழிலாளர் சங்கங்கள், தொழிலாளர் அனைவரும் தம்மாலான ஒத்துழைப்பைப் புலிகளுக்கு வழங்கினார்கள்.

அங்கிருந்த இரு ஆட்லறிகளையும் எமது மக்கள் மிகுந்த மகிழ்ச்சிப் பிரவாகத்துடன் கட்டியிழுத்துச் சென்றார்கள்.

சிதைவடைந்த நிலையில் இருந்த படையினரின் சடலங்களுக்கு நாங்கள் உரிய மதிப்பளித்து பூரண மரியாதைகளுடன் தகனம் செய்தோம். எனினும், தமது உறவுகளை இந்தப் படையினரின் வெறியாட்டத்துக்குப் பலி கொடுத்த சில மக்கள் ஆத்திரத்தின் மிகுதியினால் படையினரின் சடலங்களைக் கட்டியிழுத்துச் சென்றார்கள்.

அந்தளவிற்கு இந்த முல்லை முகாம் படையினர் ஆறு வருடங்களாக எமது மக்களை துன்புறுத்தியிருந்தார்கள்.

இத்தகையதொரு மாபெரும் வெற்றியை விழாவாகக் கொண்டாடுகின்ற இந்தவேளையில், இதற்காக தமது உயிர்களை விலையாகக் கொடுத்த எமது பிள்ளைகளை நாங்கள் நினைவுகூருகின்றோம்.

-இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(ஐ-4)

---

### உரியகாலம் கடந்தும், இன்னும்

# 46 அமைச்சர்கள்; 143 எம்.பிக்கள் சொத்து விவரங்களை வெளியிடவில்லை

கொழும்பு,ஜூலை22

அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது சொத்துக்களை உத்தியோகபூர்வமாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்று சட்டம் உள்ளது.

சட்டத்தின்கீழ் அதற்காக வழங்கப்பட்ட காலக்கெடு ஜூன்30ஆம் திகதியுடன் முடிவடைந்த பின்னரும், 46 அமைச்சர்களும் 143 எம்.பிக்களும் தமது சொத்துக்கள் பற்றிய விடயங்கள் அடங்கிய தமது பிரகடனத்தை இன்னமும் உரிய இடத்திற்கு அனுப்பி வைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

சட்டப்படி -

எல்லாத் தரநிலைகளையும் சேர்ந்த அமைச்சர்கள் ஜனாதிபதியிடமும், எம்.பிக்கள் சபாநாயகரிடமும் ஜனாதிபதியும் சபாநாயகரும் பிரதம நீதியரசரிடமும் தமது சொத்துக்கள் பற்றிய விடயங்களைப் பிரகடனப்படுத்தும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கவேண்டும்.

ஆனால், அமைச்சரவை அந்தஸ்துள்ள 32அமைச்சர்கள், அமைச்சரவை அந்தஸ்து இல்லாத 27அமைச்சர்கள மற்றும் எட்டு பிரதி அமைச்சர்கள் என மொத்தம் 67அமைச்சர்களில் ஆக 21பேரே இதுவரை தமது சொத்துக்களைப் பிரகடனம் செய்துள்ளனர்.

சொத்துக்களைப் பிரகடனம் செயதுள்ளவர்களில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள் கரு ஜெயசூரிய, திலக் மாரப்பன, ராஜித சேனாரத்ன, ஜி.எல்.பீரிஸ், மகிந்த சமரசிங்க, ஜயலத் ஜயவர்த்தன, ரவி கருணாநாயக்க ஆகியோர் அடங்குகின்றனர்.

அமைச்சர்களின் உறவினர்கள் எவராவது அந்த அமைச்சருக்கு தனிப்பட்ட செயலாளர் அல்லது இணைப்புச் செயலாளர் என்ற அந்தஸ்தோடு பணிபுரிந்தால் அந்த உறவினர்களும் தமது சொத்து விவரங்களைப் பிரகடனப்படுத்துவது சட்டப்படி அத்தியாவசியமானதாகும்.

சுமார் முப்பது அமைச்சர்கள் தமது நெருங்கிய உறவினர்களை பல்வேறு தரநிலைகளில் இவ்வாறு பணியாளர்களாகச் சேர்த்துக்கொண்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. ஆனால், அவர்களில் மூன்று அமைச்சர்களுக்கு உதவியாளர்களாகப் பணிபுரியும் அவர்களின் துணைவியர் மட்டும் தமது சொத்துக்களை இதுவரை பிரகடனப்படுத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

---

# விடிவு தருவதாக கூறிய எம்.பிக்கள் முடிவையாவது கேட்டுத் தரட்டுமே!

## பாதுகாவலர் சங்கம் பகிரங்க வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜூலை22

தமிழ்மக்களுக்கு சுபீட்சமான எதிர்காலத்தைப் பெற்றுத்தருவோமெனக் கூறித் தேர்தலில் போட்டியிட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவர்கள் ஆதரிக்கின்ற அரசிடம் இருந்து, படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனவர்கள் குறித்து உறுதியான முடிவை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு பாதுகாவலர் சங்கம் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். முனியப்பர் ஆலய முன்றிலில் பாதுகாவலர் சங்க உறுப்பினர்கள் சந்திப்பொன்றை நடத்தினார்கள். அக்கூட்டத்திலேயே தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இவ்வாறு வேண்டுகோள் விடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. அங்கு கூறப்பட்டதாவது:-

வடபகுதியில் சுமார் அறுநூறுக்கும் மேற்பட்டவர்கள், அரசபடையினரால் கைதுசெய்யப்பட்டதும் பின்னர் அவர்களுக்கு என்ன நடந்தது என்பது மர்மமாகவே நீடிப்பதும் சாதாரண சம்பவமாகவே இன்று நோக்கப்படுகிறது. எமது பிள்ளைகள் வருவார்கள் என்ற நம்பிக்கை, நாளாந்தம் தேய்ந்து செல்ல ஒவ்வொரு உறவுகளும் நடைப்பிணமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். காத்திருந்த பெரும்பாலான உறவுகள், தமது காலத்தை முடித்துக் கொண்டுவிட்டன.

எமக்கு நீதி வழங்கப்போவதாகக கூறி, ஏகப்பட்ட சந்திப்புகளும், விசாரணைகளும், வழக்குகளும் நடத்தப்பட்டனவே தவிர உருப்படியான நடவடிக்கை எதுவுமில்லை. எமது உறவுகளின் நிலையை அறிந்துகொள்வதற்காக பாதுகாவலர் சங்கத்தால் முனெடுக்கப்பட்ட மறியல் போராட்டங்கள் மற்றும் உண்ணாவிரதப் போராட்டங்களும் அவ்வப்போது வழங்கப்பட்ட வாக்குறுதிகளால் நிறுத்தப்பட்டன.

யாழ்ப்பாண அரச செயலகம் முனபாகவும் எமது சங்கம், போராட்டங்களை முன்னெடுத்திருந்தது. காணாமற்போனவர்களின் குடும்பங்களுக்கு தையல் இயந்திரங்களை வழங்குவதைத் தவிர மேற்கொண்டு தம்மால் நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாது என அரசின் பிரதிநிதியான யாழ். அரசாங்க அதிபர் கூறுகிறார்.

நாம் இன்றுவரை கேட்பது, எமது உறவுகள் எங்கே? அவர்கள் என்ன ஆனார்கள்? என்பதனையே. இது தொடர்பில் உறுதியான ஒரு முடிவை எமக்குத் தாருங்கள் என்றே நாம் கேட்கிறோம்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், காணாமற்போனவர்கள் தொடர்பில் உறுதியான ஒரு பதிலை அரசிடமிருந்து பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கான அழுத்தங்களை அவர்கள் அரசுக்குப் பிரயோகிக்க வேண்டும் என்று பகிரங்கமாக வேண்டுகோள் விடுக்கிறோம். அதன் பொருட்டு அவர்களுடன் இணைந்து போராட்டங்களை நடத்துவதற்கு பாதுகாவலர் சங்கம் தயாராகவுள்ளது

- இப்படி அங்கு தெரிவிக்கப்பட்டது.

---

# இந்த உத்தேச நகலும் நிராகரிக்கப்பட்டால் புலிகளிடம் அரசு யோசனை கோரநேரிடலாம்

## அமைச்சர் ஹக்கீம் கூறுகிறார்

இடைக்கால நிர்வாக அமைப்பு தொடர்பாக அரசு முன்வைக்கும் யோசனைகளைப் புலிகள் தொடர்ந்தும் நிராகரித்தால், இந்த விடயத்தில் புலிகளின் உச்சக்கோரிக்கை அடங்கிய ஆலோசனையை அரசு கேட்க வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம்.

-இப்படித் தெரிவித்திருக்கிறார் அமைச்சர் ரவூப் ஹக்கீம்.

பி.பி.ஸி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியில் - அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இடைக்கால நிர்வாக சபையில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவ விகிதாசாரம் குறித்து முஸ்லிம் குழு பேச்சு மேசைக்கு வந்துதான் பேசவேண்டும்.

உத்தேச இடைக்கால நிர்வாக சபையில், அரசு, புலிகள், முஸ்லிம் காங்கிரஸ் தவிர ஏனைய தமிழ்க் கட்சிகள் சேர்த்துக்கொள்ளப்படாமைக்கு - அரசு கடைப்பிடிக்கும் அந்த நெகிழ்வுப் போக்கு - காரணம், யுத்தத்தில் ஈடுபட்ட புலிகள் தரப்பை எப்படியாவது பேச்சுமேசைக்கு கூட்டிவர வேண்டும் என்பதே ஆகும்.

அரசமைப்பின் 13ஆவது சட்டத் திருத்தத்தின்கீழ் மாகாணசபைகளுக்கென வழங்கப்பட்ட அதிகாரங்களை வேறு ஓர் அமைப்புக்கு வழங்குவது என்பது சட்டரீதியாக, அரசமைப்பு ரீதியாக இயலாத காரியம். ஆகவே, சட்டரீதியான சவால்களை ஏற்படுத்துகின்ற விஷயங்களை பேச்சுக்களின் மூலமே தீர்மானிக்க முடியும். அதற்குப் புலிகள் பேச்சு மேசைக்கு வரவேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

காணி விவகாரங்களில் புலிகளுக்கு அதிகாரமளிக்காமல் மீள்குடியமர்வு மேற்கொள்வது எவ்வாறு என்று கேட்டதற்கு -

பேச்சு மேசைக்கு புலிகள் வருவார்கள் என்ற விடயம் உத்தரவாதமளிக்கப்படாத நிலையில், அதிகாரப் பகிர்வுடன் தொடர்புடைய காணி விவகார யோசனையை நகலில் உள்ளடக்குவது அரசுக்கு நெருக்கடி கொடுக்கும் பிரச்சினையாக இருந்திருக்கலாம். அதனால் அரசு அதைத் தவிர்த்திருக்கலாம் என்றார்.

பேச்சு மேசையில் முஸ்லிம் குழு தனது பிரச்சினைகளையும் - முன்வைக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்ற எமது கோரிக்கை உத்தேச நகலில் உள்வாங்கப்பட்டிருந்தாலும், அது இன்னமும் அழுத்தம் திருத்தமாக - வேறுவிதமாக - சொல்லப்பட்டிருக்க வேண்டும் என்று கருதுகிறோம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

---

# சிறுவர் நாடக அரங்க போட்டிகளுக்கு ஏற்பாடு

வலி.தெற்கு,ஜூலை22

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் ஆரம்பவகுப்பு பிள்ளைகளுக்கான சிறுவர் நாடக அரங்கப்போட்டி நடைபெறவுள்ளது.

வலய மட்டத்தில் இப்போட்டிகள் அடுத்த மாதத்தின் இரண்டாம் வாரத்தில் நடைபெறும் என்றும் -

அதற்கு முன்பாக கோட்டங்களில் உள்ள ஒவ்வொரு குடும்பப் பாடசாலைகளும் இணைந்து நாடகப்போட்டிகளை நடத்தி சிறந்த நாடகப் போட்டியாளர்களின் விவரத்தை அனுப்பி வைக்குமாறும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகளில் பங்குபற்றும் பிள்ளைகள் அனைவருக்கும் பாராட்டுப் பத்திரங்கள் வழங்கப்படும் எனவும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-152)

---

## வகுப்பறைத் தொகுதி அதிபரிடம் கையளிப்பு

தென்மராட்சி,ஜூலை22

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன சர்வதேச பிரிவினரால் புனரமைக்கப்பட்ட வகுப்பறைத் தொகுதி கடந்த வெள்ளியன்று கல்லூரி அதிபர் திருமதி சி.சிவநாதனிடம் வைபவரீதியாகக் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன சர்வதேச பிரிவு பிரதிநிதிகளும், தென்மராட்சி கல்விவலய உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

(எ-117)

---

# 'லூப்' இணைப்பு வழங்காமையினால் 'பக்ஸ்' சேவையை ஆரம்பிக்கவில்லை

## மானிப்பாய் தபாலதிபர் கவலை

யாழ்ப்பாணம்,ஜூலை22

மானிப்பாய் தபாலகத் தொலைபேசிக்கு 'லூப்' இணைப்பு வழங்கப்படாததால் 'பக்ஸ்' சேவையை ஆரம்பிக்க முடியாதுள்ளதாக மானிப்பாய் தபால் அதிபர் வீ. அந்தோனிப்பிள்ளை தெரிவித்தார்.

தபால் தொலைத்தொடர்பு அமைச்சினால் மானிப்பாய் தபாலகத்துக்கு 'பக்ஸ்' இயந்திரம் வழங்கப்பட்டு ஒரு வருடம் ஆகிவிட்டதாகவும் -

ஆனால், 'லூப்' இணைப்பு வழங்கப்படாததால் மக்களுக்கான சேவையினை வழங்க முடியாத அவலநிலையேற்பட்டுள்ளதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார்.

(ஒ-185)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள நீர் இறைக்கும் இயந்திரம், உஷா தையல் மெசின் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 105, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (20556)

கோண்டாவில், நெட்டிலைப்பாய் பிள்ளையார் கோயிலின் பொறுப்பில் 31/2 அடிச் சுற்றும் சுமார் 35 அடி உயரமும் கொண்ட யாவரணை மரம் ஒன்று தறிக்கும் அனுமதிப்பத்திரத்துடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: காலை 7.30 மணிக்கு பூசை வேளையில் தலைவரைச் சந்திக்கவும். (20550)

செவ்வரத்தை (மஞ்சள் அடுக்கு), ஸ்பொஞ்பிளவர், மஞ்சள் கொடிப்பூ, முசந்தாஸ், எவக்கிறீன், முத்துப்பூ, குறோட்டன், நல்ல இன ரோஜாக் கன்றுகள் விற்பனைக்குண்டு. 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (I.C.R.C.இற்கு அண்மையில்) (20337)

பாவனையிலுள்ள 17 1/2 அடி புளுஸ்ரார் போட் (இயந்திரப்படகு) ஒன்று SUZUKI இஞ்சின் H.P.9.9 உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ந.அதிவதனசீலன், பெரிய கடற்கரை, தொண்டமனாறு.
T.P.070-212921. (20409)

## வீடு விற்பனைக்கு

சாவகச்சேரியில் பழைய இலங்கை வங்கிக்கு அருகில் வெளிநாட்டு முறையில் கட்டப்பட்ட வீடு மூன்று பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மா.கைலாயநாதன், C/o பஞ்சலிங்கம் (ஆசிரியர்), ஐயா கடையடி, மீசாலை T.P. 070 213388 (சி-29074)

## நாடகம்

வானொலியில் "பொறாமை" நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம் பிள்ளையின் நாடக நூல்கள்: 1. நாடகம் எழுதுவது எப்படி, 2.யாழ்ப்பாணமா? கொழும்பா? 3. எங்கள் நாடு 4. இலக்கிய விமர்சனம். (20549)

## தவறிவிட்டது

குப்பிளான் தெற்கு, அயட்டைப் புலத்தைச் சேர்ந்த குலசிங்கம் குலமதி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.807911333V), விசேட அடையாள அட்டை என்பன 14.07.2003 திங்கட்கிழமை தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (20553)

## திருமண சேவை

1969, மிருகசீரிடம், செவ்வாய் 7 (பாவக்குறைவு) ஆசிரியைக்கும் 1970 உத்தரம், செவ்வாய்க்குற்றமற்ற அரச உத்தியோக மணப்பெண்ணுக்கும் உள்ளூர் கௌரவ குடும்ப உத்தியோக மணமகன்கள் தேவை. சீதனம் உண்டு. தொடர்பு: துரை விமலா, இலகு திருமண சேவை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (20500)

## சாவகச்சேரியில் சுகாதாரப் பரிசோதகர்கள் திடீர் சோதனை

தென்மராட்சி,ஜூலை22

சாவகச்சேரி நகர் பகுதியிலுள்ள உணவு கையாளும் நிலையங்கள் மீது சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் திடீர் பரிசோதனையை கடந்த வியாழக்கிழமை நடத்தினர்.

இந்த நிலையங்களில் திறந்த நிலையில் வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டு வர்த்தகர்கள் முன்னிலையில் அழிக்கப்பட்டன.

இதேவேளை -

கொடிகாமம் சந்தைப் பகுதியில் நடத்திய திடீர் பரிசோதனையில் அழுகிய நிலையில் சாக்குகளில் வைக்கப்பட்டிருந்த உருளைக் கிழங்குகள் நச்சு மருந்து விசிறி அழிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## பிரதேச சபை அதிகாரி மீது தாக்குதல்

மாதகல்,ஜூலை22

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு உப அலுவலகத்தின் வருமான மேற்பார்வையாளர் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சைக்கிள்களுக்கான 2003ஆம் ஆண்டுக்குரிய இலக்கத் தகடுகளை விநியோகிக்கும் பணியில் இவர் ஈடுபட்டிருந்த வேளையில் மது போதையில் வந்த இருவர் இவருடன் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டதாகவும் பின்னர் அவரை அவர்கள் தாக்கியதாகவும் கூறப்பட்டது.

இது தொடர்பாக இளவாலை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து பொலீஸார் குறிப்பிட்ட இருவரையும் கைது செய்துள்ளனர். (ம-10-95)

# வாழ்த்துகின்றோம்



இருபத்தியேழு வருடமாக தேவனுடைய பணியைச் செய்து வருகின்றமைக்காக சிங்கப்பூரில் நடைபெற்ற உலக தமிழ்ப் போதகர்கள் மாநாட்டில் "ஊழியத்திற்கான சிறந்த சாதனையாளர்" விருதினைப் பெற்று கௌரவிககப்பட்ட எமது தலைமைப் போதகர்

**L.J.மத்தியூஸ்**

அவர்களை யேசுவின் நாமத்தில் உளமார வாழ்த்துகின்றோம

(20555)(21-19-15) ~கல்வாரிக் குடும்பம்.

# இவரைக் காணவில்லை



பிரான்பற்று, பண்டத்தரிப்பைச் சேர்ந்தவரான

**செல்வன் பாலசுப்பிரமணியம் மோகன்குமார்**

என்பவரைக் கடந்த 26-06-2003 முதல் காணவில்லை. இவரைக் காணாமல் இவரது பெற்றோர் மிகவும் வேதனைக்குள்ளாகியுள்ளனர். அத்துடன், இவரது வளர்ப்புத் தாய் மிகவும் சுகவீனமுற்று ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். ஆகவே, இவரைக் கண்டவர்கள் கீழுள்ள முகவரிக்கு உடனடியாகத் தகவல் தரவும். சன்மானம் வழங்கப்படும்.

**தேவன் சவுண்ட்**

சங்கானை கிழக்கு பிரான்பற்று பண்டத்தரிப்பு.

☎ 070 212723 (வசந்தா அக்கா)

(20558) (21-19-15-26)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/குளமங்கால் றோ.க.வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவிகளான

15வயதின் கீழ்பெண்கள் பிரிவைச் சேர்ந்த

**செல்வி செ.கீர்த்திகா**

13வயதின் கீழ்பெண்கள் பிரிவைச் சேர்ந்த

**செல்வி ஸ்.மேரிறஜிதா**

ஆகிய இருவரும் வடக்கு - கிழக்கு மாகாணமட்டப் போட்டியில் பங்குபற்றி, செல்வி செ.கீர்த்திகா தேசியமட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார். இவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள்.

யா/குளமங்கால் றோ.க. வித்தியாலயம், மல்லாகம்.

(20561) (21-15-19-26)

# அருளொளிப் பாராட்டு வாழ்த்துக்கள்



தெய்வீக காந்தசக்தியினால் ஈர்க்கப்பட்டு, கைதடி ஸ்ரீசச்சிதானந்த அருளொளி செல்லம்மா மாதாஜீ அவர்களின் அருளொளியையும், அருளாசியையும் பெற்று குருவருள் நிறைந்தவர்

**திருவாளர் குமாரசாமி கங்கைவேணியன்**

(வேணி களஞ்சியம், யாழ்ப்பாணம்)

அவர்கள் எதிர்பாராத விதமாக கிடைத்த குருவருளில் திளைத்திருக்கும் நேரத்தில், சச்சிதானந்த அருளொளி செல்லம்மா மாதாஜியின் விதேகமுத்தி நிலையை அறிந்து ஊர் உலகமெலாம் அறியச்செய்து அதற்குகந்த அபிஷேகப் பொருள்களுடன் வருகை தந்து சமாதிபூஜையை நடத்திய பெருமை அவருக்கே உரியது. கைதடிவாழ் மக்களுக்கும் தன் சமூகசேவையின் மகத்துவத்தை எடுத்துக் காட்டினார்.

அவருக்குக் கிடைத்த அகில இலங்கை சமாதான நீதிவான் பதவியும் பெருமைக்குரியதொன்றாகும். அவரது சமய, சமூகப்பணிகள் மென்மேலும் வளர்ச்சியடைய மாதாஜியின் பொற்பாதக் கமலங்களைப் பிரார்த்திப்போம்.

– ஸ்ரீசச்சிதானந்தா ஆச்சிரமம், கைதடி.

குறிப்பு: ஆச்சிரம அன்பர்களும் கைதடி மக்களும் இணைந்து 28- 08-2003இல் பாராட்டு விழா ஒன்றை நடத்தவுள்ளனர்.

(சி-29075) (26)

# 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1916 - 11 - 25 |  | 2003 - 06 - 22 |

**திருவாளர் கணபதிப்பிள்ளை கந்தையா**

(செல்லையா - அதிபர்)

எங்கள் குடும்பத் தலைவர்
என்றும் எங்களை ஆதரித்தார்
எங்களை இன்று பிரிந்தாலும்
எங்கள் நினைவில் நீங்காதார்.

அமரரான எங்கள் குடும்பத் தலைவரின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (2003-07-22) செவ்வாய்க்கிழமை காலை 10மணிக்கு எங்கள் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

"ஏகாம்பரவாசா", மீசாலை கிழக்கு, மீசாலை. (20557) (21-19-15-26)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



22.07.2003

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்தவர்களான திரு.திருமதி கமலகரன் - சிவகுணதேவி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன்

**ஜனிஸ்ரன்**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (22.07.2003) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அம்மா, அப்பா, அண்ணா, அக்கா, அப்பப்பா, அம்மம்மா, அப்பம்மா, மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், அன்ரிமார், மச்சாள்மார், மச்சான்மார், சகோதரர்கள் அனைவரும் பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

அம்மா, அப்பா.

புன்னாலைக்கட்டுவான் தெற்கு. சுன்னாகம். (20559) (21-26-19-15)

உ
சிவமயம

# சுன்னாகம் ஸ்ரீகதிரமலை சிவன் தேவஸ்தானம் ஆடிப்பூர மஹோற்சவ விஞ்ஞாபனம்

| | |
|---|---|
| கொடியேற்றம் | 23-07-2003 புதன்கிழமை காலை 10.30 மணி |
| சுமங்கலி திருவிழா | 28-07-2003 திங்கட்கிழமை மாலை 2.00 மணி |
| சப்பரத் திருவிழா | 30-07-2003 புதன்கிழமை இரவு 7.00 மணி |
| தேர்த் திருவிழா | 31-07-2003 வியாழக்கிழமை இரவு 7.00 மணி |
| தீர்த்தத் திருவிழா | 01-08-2003 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி |
| கொடியிறக்கம் | 01-08-2003 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணி |

ஸ்ரீகதிரமலை சிவன்கோயில், சுன்னாகம். (சி-29073) (21-19-15) - தேவஸ்தானத்தினர்.



முல்லைமுகாம் தகர்ப்பின் வெற்றிவிழாவில் கலந்துகொண்ட முல்லை மாவட்ட வெகுஜன ஒன்றியத்தின் செயலாளர் சி.வேதவனம், முல்லைத்தீவு பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகள், முல்லைத்தீவு மாவட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சரவணபவன், மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் விதுஷா ஆகியோர் உரையாற்றியபோது எடுக்கப்பட்ட படங்கள். *(படம்: அலுவலக படப்பிடிப்பாளர்)*

# சமூகத்துக்கு நல்லது செய்தால் இறையருள் தானே கூடிவரும்

## 'சிவசக்தி' மண்டபத் திறப்பு விழாவில் சிவத்தமிழ்ச்செல்வி

அச்சுவேலி,ஜூலை22

சமூகத்துக்கு நாம் நல்லதைச் செய்தால் எங்களுக்கு இறையருள் தானே வந்து கிட்டும்.

-இவ்வாறு தெரிவித்தார் சிவத் தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி.



ஆவரங்காலில் புதிதாக அமைக்கப் பட்ட 'சிவசக்தி' மணி மண்டபத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சிவநெறித் தவமகன் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்ற திறப்புவிழா நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

இந்தப் புண்ணிய பூமியில் பிறந்த மனிதர்கள் அனைவரும் சமூகத்துக்கு நல்லமனதோடு பணியாற்ற வேண்டும். அந்தப் பணிகள்தான் எம்மை நல்ல மனிதர்களாக அடையாளம் காட்டக்கூடியன.

பணம் உள்ள எல்லோரும் சமூகத்துக்கு நற்பணி செய்ய முன் வருவதில்லை. அவ்வாறு முன் வந்து செய்வோர் மனிதருள் மாணிக்கமாகத் திகழ்வார்கள். இந்த மணி மண்டபத்தை அமைத்து சமூகத்துக்கு வழங்கியுள்ள சிவசுந்தரம் குடும்பத்தினரின் பணியானது மிகவும் பாராட்டப்பட வேண்டியது. இதுபோன்ற பணிகளைச் செய்வதற்குப் பலரும் முன்வரவேண்டும் என்றார்.

இந்துசமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ. விநாசித்தம்பி தனது உரையில் தெரிவித்ததாவது:-

திருப்பணிகளைச் செய்வோர் சிவனடியார்களாகப் போற்றுதற்குரியவர்கள். அந்தவகையில் சமூகத்துக்குப் பெரும்பணி ஆற்றிய சிவசுந்தரம் குடும்பத்தவரும் உயர்வு பெறுகின்றனர். எமது பணிகளால் சமூகம் பயன் பெறவேண்டும்.

நமது பிறப்பின் நோக்கம் பணிகளால் நிறைவுபெற வேண்டும். முற் பிறப்பில் நாம் செய்த பயனால்தான் நற்பணிகள் கைகூடுகின்றன - என்றார்.

சிவநெறித் தவமகன் ஆறு. திருமுருகன் தனது தலைமையுரையில் தெரிவித்ததாவது:-

இந்த மணிமண்டபத்தை 10 மாதம் 3நாள்களில் அமைதந்துத்தந்த சிவசுந்தரத்தின் பணிகள் ஈழத்தில் மட்டுமல்ல லண்டன் மாநகரிலும் உயர்ந்து நிற்கின்றன. லண்டனில் அந்நாட்டவர்களுக்குக் கிடைக்காத பல பெருமைகள் இவருக்குக் கிடைத்துள்ளன. அந்த நாட்டின் மகாராணியால் இவர் பாராட்டப்பட்டவர் - என்றார். (ஜ-10-11)

# மண்டைதீவு மீனவருக்குப் படகுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை22

ஐநா.அபிவிருத்தித்திட்ட அனுசரணையுடன் மண்டைதீவு கூட்டுறவுத் தொழில் சங்கத்தினால் அப்பகுதி மீனவர்களுக்கு ஆறு படகுகள் சுழற்சி முறைக்கடன் திட்டத்தின்கீழ் அண்மையில் வழங்கப்பட்டன.

இந்த ஆறு படகுகளும் தலா ஒரு லட்சத்து 10ஆயிரம் ரூபா பெறுமதியுடையன. இவற்றைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த 16ஆம் திகதி கூட்டுறவுத் தொழிற்சங்கப் பணிமனையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஐநா.அபிவிருத்தித்திட்ட அதிகாரிகள், கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் மற்றும் அப்பகுதி மக்கள் கலந்து கொண்டனர். (எ-10-ரி)

# கேரதீவு பஸ் சேவையால் மாணவர்களுக்குப் பயனில்லை

யாழ்ப்பாணம்,ஜூலை22

கேரதீவு வீதியூடான பஸ்சேவை சீரின்றிக் காணப்படுவதால் மாணவர்களும் உத்தியோகத்தர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

யாழ்.பஸ் நிலையத்திலிருந்து கோவிலாக்கண்டிச் சந்தி வரையான கேரதீவு வீதியூடான சேவை தினமும் நான்கு தடவைகள் இடம்பெறுகின்ற போதிலும் இச்சேவைகளால் மாணவர்களுக்கு எவ்வித பயனும் இல்லை என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தினமும் காலையில் 9.30 மணிக்கு யாழ்.பஸ் நிலையத்தில் இருந்து புறப்பட்டுச்செல்லும் பஸ் கோவிலாக கண்டிச் சந்தி வரைக்கும் சென்று பின்னர் அங்கிருந்து திரும்பி யாழ்.நகருக்கு வரவேண்டியுள்ளது. இது சுமார் 10.30மணியளவிலேயே மீண்டும் அதே பாதை வழியே திரும்பி வருவதால் பாடசாலைகளுக்கு மாணவர் உரிய நேரத்துக்கு வரமுடியாதுள்ளது.

இதனால் யாழ்.நகரப் பாடசாலைகளில் கல்வி பயிலும் - நாவற்குழிச் சந்திக்கும் கோவிலாக்கண்டிச் சந்திக்கும் இடைப்பட்ட பிரதேசங்களைச சேர்ந்த மாணவர்கள் சுமார் 3கிலோமீற்றர் தூரம் நடந்து அல்லது சைக்கிளில் வந்து நாவற்குழிச் சந்தியிலேயே வேறு பஸ்களில் ஏற வேண்டியுள்ளது.

அவ்வாறு வந்தாலும் கூட கொடிகாமம், முகமாலை மற்றும் கைதடி வடக்கு பகுதிகளுக்கான சேவையில் ஈடுபடும் பஸ்கள் சிலநேரங்களில் நாவற்குழிச்சந்தியில் தரிக்காமல் செல்வதால் மாணவர்கள் உரிய நேரத்துக்குப் பாடசாலைக்குச் செல்ல முடியாமல் உள்ளது.

இதனால் அவர்கள் வீடுகளுக்குத் திரும்பும் நிலையும் ஏற்படுகிறது. இதே போன்று பாடசாலைகள் விட்டதும் மாணவர்கள் வீடு செல்வதற்கும் கேரதீவு வீதியூடான சேவை பிற்பகலில் இல்லாதுள்ளது. மாலை 4மணிக்கே சேவை இடம்பெறுகிறது.

இதனால் மாணவர்கள் வேறு பஸ்களில் சென்று நாவற்குழிச்சந்தியில் இறங்கி பின்னர் நடந்து செல்லவேண்டிய நிலையே உள்ளது. இதுகுறித்து மாணவர்களால் கையொப்பமிடப்பட்ட கடிதம் ஒன்று அண்மையில் வட பிராந்திய போக்குவரத்துச்சபையின் முகாமையாளருக்கு வழங்கப்பட்ட போதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. (ஜ-10)

# சிறுவர்களைப் பாதிக்கும் பிறப்பு இருதயக் குறைபாடுகள்

ஏழைச்சிறுவர் உயிர்காக்கும் 'அரும்புகள்' சிறுவர் நிதியம் யாழ். மருத்துவ மாணவர் ஒன்றியத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது. அதன் அங்குரார்ப்பண வைபவம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளதை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

பிறக்கும் பொழுதே இருதய நோய்களுடன் பிறக்கும் எமது எதிர்காலச் சமுதாயமாகிய சிறுவர்களின் எண்ணிக்கை இந்திய, இலங்கை வம்சத்தினரில் அதிகளவில் காணப்படுவதாக ஒரு புள்ளிவிவரம் தெரிவிக்கின்றது. தனது பிள்ளை வளர்ந்து கல்விகற்றுப் பெரியவனாவான் என்ற தாயின் ஏக்கத்தை வீணடிக்கும் வகையில் சடுதியான மரணங்களும் இந்த இருதய நோய்களினால் ஏற்படுகின்றது.

ஒவ்வொரு ஆயிரம் குழந்தைகளில் எட்டுக்குழந்தைகள்(8:1000) பிறப்பிலேயே இருதயக்குறைபாட்டுடன் பிறக்கின்றன யாழ்ப்பாணத்தில் மட்டும் ஏறத்தாழ 8ஆயிரம் குழந்தைகள் ஒரு வருடத்தில் பிறக்கின்றன. இதனால், ஏறத்தாழ 64குழந்தைகள் இருதய நோயாளர்களாக வருடாந்தம் எமது சமுதாயத்தின் சுமையாக ஒப்படைக்கப்படுகின்றார்கள். இவர்களில் 2/3 பகுதியினர், சத்திரசிகிச்சை மூலம் குணப்படுத்தக்கூடியவர்களாவார்கள். இதனால், ஆரம்பத்திலேயே கண்டறியப்படும் பிறப்புக் குறைபாட்டு இருதய நோய்கள் முற்றாகக் குணப்படுத்தக் கூடியவையாக உள்ளன.


### இருதய நோய்கள் ஏற்படக் காரணம

எமது கலாசாரத்தில் சொந்தத்தில் திருமணம் செய்தல் இந்நோய்க்கான ஒரு முக்கிய காரணியாகக் காணப்படுகின்றது. இங்கு தாய், தந்தை இருவரினதும் பரம்பரை அலகுகளில் உள்ள சிறு குறைபாடுகள் குழந்தைகளில் முழுமையாக வெளிக்காட்டப்படுகின்றன.

தாயின் பிரசவ காலத்தின் முதல் மூன்றுமாத காலத்தில் ஏற்படும் ஜேர்மன் சின்னமுத்து மற்றும் HSV போன்ற குழந்தையைப் பாதிக்கும் வைரசுகள் நிரூபிக்கப்பட்ட காரணியாகக் காணப்படுகின்றன. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களிடையேயும் இருதய நோய்கள் காணப்படலாம். இவை தவிர சூழல் காரணிகளான உயரமான பிரதேசத்தில் வசித்தல் போன்றவையும் இருதய நோய்களில் குறிப்பிடத்தக்களவு பங்கை வகிக்கின்றன. வேறு பிறப்புக் குறைபாடுகளுடன் பிறக்கும் குழந்தைகள் பொதுவாக இருதயக் குறைபாட்டையும் கொண்டிருக்கின்றன என்பது ஓர் உண்மையாகும்.

### பொதுவான இருதய நோய்கள

பிறப்பில் ஏற்படும் இருதய நோய்கள் நீலநிறப் பாதிப்பற்றவை (acyanotic), நீலநிறப் பாதிப்புள்ளவை (ayanotic) என இருவகைப்படுத்தலாம். டலோட் இன் நால்வகைக் குறைபாடு, பெருநாடிகள் மாறியமைதல் போன்றவை நீலநிறப்பாதிப்புள்ள இருதய நோய்களாகும். இவை இலகுவில் குழந்தைக்கு மரணத்தை ஏற்படுத்தக்கூடியவையாகும். இவை தவிர அநேகமான இருதயநோய்கள் நீலநிறப்பாதிப்புக்குள்ளாவதுடன் இலகுவில் குணப்படுத்தக்கூடியதாகவும் உள்ளது.




### இருதயக் கீழறைச் சுவர்க் குறைபாடு
(Ventricular Septal Defect - VSD)

இது பொதுவாக இளம் பராயத்தினரைப் பாதிக்கின்ற ஒரு வகை இருதய நோயாகும். இக்குறைபாட்டினால் வலது, இடது இருதய அறைகளிடையே சுத்த இரத்தம் அசுத்த இரத்தத்துடன் கலப்படைகின்றது. குறைபாடு மிகச் சிறியதாக இருப்பின் குழந்தை எதுவித நோய் அறிகுறிகளையும் காட்டுவதில்லை. பதிலாக நோயானது தற்செயலாகவே கண்டுபிடிக்கப்படுகின்றது. குறைபாடு பெரிய தாயின் அடிக்கடி ஏற்படும் சுவாசத் தொற்று, இருதயம் செயலிழத்தல், வளர்ச்சிக் குறைபாடு, இலகுவில் களைப்படைதல் போன்ற அறிகுறிகள் காணப்படலாம்.

இக்குறைபாட்டை ஈ.சீ.ஜி நாடாப்படம், எக்ஸ் கதிர்ப்படம் மற்றும் நவீன நுண்ணலைப்படப் பிடிப்புகள் மூலம் கண்டுபிடிக்கலாம்.

இந்நோயைக் குணப்படுத்துவதற்காக இதனுடன் தொடர்புள்ள சுவாசத தொற்று, இருதயத்தொற்று என்பவற்றை முதலில் குணப்படுத்துவது அவசியமாகும் பெரும்பாலான இருதய கீழறைச் சுவர்க்குறைபாடுகள் சுயமாகவே அற்றுப்போகும் தன்மை உள்ளவை. இரண்டு வயதின் பிற்பாடு நோய் அறிகுறிகளைக் காண்பிக்கும் குழந்தைகளுக்கு திறந்த இருதய அறுவைச்சிகிச்சை செய்யப்படலாம். எவ்வளவு குறைந்த வயதில் சத்திரசிகிச்சை செய்யப்படுகின்றதோ அவ்வளவு கூடிய வெற்றி கிடைக்கப்பெறும். சத்திர சிகிச்சையின் பின்னர் முற்றிலும் சாதாரணமான வாழ்க்கை கிடைக்கப்பெறுவது ஒரு சிறப்பம்சமாகும்.

### இருதய மேலறைச் சுவர்க் குறைபாடு
(Atrial Septal Defect - ASD)

சாதாரணமாகக் குழந்தை கருப்பையில் உள்ளபோது இருதய மேலறைச் சுவரில் உள்ள துவாரமானது பிறப்பின் பின்னர் தானாகவே மூடப்பட்டுவிடும். ஆனால், சில காரணங்களினால் இது நிலைத்து நிற்கும்போது இந்த இருதய நோய் ஏற்படுகின்றது.

சில வேளைகளில் இந்த இருதய நோயானது வேறு உடற் கட்டமைப்புக் குறைபாடுகளுடன் தொடர்புபட்டதாகவும் காணப்படலாம். இங்கு சுத்த இரத்தமானது அசுத்த இரத்தத்துடன் கலப்படைகின்றது. பெரும்பாலான குழந்தைகளின் சிறுபராயத்தில் எதுவித நோய் அறிகுறிகளும் தென்படாதபோதிலும், வயது வந்த சிறுவர்களில் அடிக்கடி சுவாசப்பைத் தொற்று, மூச்சுத் திணறல், வளர்ச்சிக் குறைபாடு போன்றன ஏற்படுகின்றன. இந்நோயை ஈ.சி.ஜீ நாடாப்படம், எக்ஸ் கதிர்ப்படம் போன்றவற்றில் வலது இருதய அறை பெரிதாக இருப்பதைக்கொண்டு அறியலாம்.

சிகிச்சையாக தொற்றுநோய் மற்றும் இருதயத்துடிப்பு ஒழுங்கின்மை என்பவற்றைக் குணப்படுத்தல் அவசியமாகும். திறந்த இருதய அறுவைச் சிகிச்சை மிக இளவயதில் செய்யப்படுமாயின் அதிசயிக்கத்தக்க வெற்றி கிடைக்கப்பெறுகின்றது. தற்காலத்தில் இருதயத்தைத் திறக்காமலேயே அறுவைச் சிகிச்சை செய்யும்முறை அறிமுகப்பட்டமை விஞ்ஞானத்தின் விந்தைகளில் ஒன்றாகும்.

### பலோட் இன் நால்வகைக் குறைபாடு
(Fallot's Tetralogy)

இது நீல நிறக் குறைபாடுள்ள ஒரு நோயாகும். இங்கு வலது பெருநாடிச் சுருக்கம், இருதயக் கீழறைச் சுவரில் குறைபாடு, வலது இருதய கீழறைப்பெருக்கம், இடது பெருநாடி மாறியமைதல் போன்ற நான்கு வகைக் குறைபாடுகள் சேர்ந்தே காணப்படும்.

குழந்தைகளில் குணங்குறிகள் பொதுவாக மூன்று மாதங்களின் பின்னரே தெரிகின்றன. குழந்தையின் உதடுகள், நகங்கள் யாவும் நீலநிறமாகி 'நீலக்குழந்தை' என அழைக்கப்படுகிறது. குழந்தை வளரும்போது குந்திய நிலையில் இருப்பதனால் குணங்குறிகள் குறைவதனை அவதானிக்கக்கூடியதாக இருக்கும். இங்கு மூளை மற்றும் இருதயப் பாதிப்புற்று சடுதியான மரணம்கூட ஏற்பட வாய்ப்புள்ளது.

இந்நோயினை ஈ.சி.ஜீ நாடாப்படம், எக்ஸ் கதிர்ப்படம், இரு பரிமாண நுண்ணலைப்படங்கள் மூலம் இலகுவில் அடையாளம் காணலாம்.

சிகிச்சையாக மருந்து, மாத்திரைகள் மூலம் ஓரளவு குணப்படுத்த முடியும். பல சந்தர்ப்பங்களில் சத்திர சிகிச்சை செய்வதன் மூலமும் குணப்படுத்தலாம். அவ்வாறு சத்திர சிகிச்சைக்கு உட்பட்டவர் பூரணமான சாதாரண வாழ்க்கை ஒன்றை வாழமுடியும். சத்திரசிகிச்சை செய்யாவிடின் இருபது வயதை அடையும் முன்னர் மரணம் நிச்சயமாகின்றது.

### பெருநாடிகள் மாறி இருத்தல்
(Transposition of Great Vessels - TGV)

இது முக்கியமான நீலநிறக் குறைபாடுள்ள இருதய நோயாகவும் பெரும்பாலான ஒரு வயதுக்குட்பட்ட இருதய நோயினாலான இறப்பிற்கும் காரணியாக உள்ளது. இது பெண் குழந்தைகளிலும் பார்க்க நான்கு மடங்கு அளவில் ஆண் குழந்தைகளில் காணப்படுகின்றது. இவர்கள் காலப்போக்கில் நிறை குறைவான குழந்தைகளாக மாற்றமடைகின்றனர்.

நோய் அறிகுறியான கடுமையான நீல நிறப்பாதிப்பு பிறந்தவுடனேயே காணப்படும். பின்னர் மூச்சுத்திணறல், இருதயச்செயலிழப்பு, வளர்ச்சிக் குறைபாடு என்பன ஏற்படுகின்றன.

எக்ஸ் கதிர்ப்படம், ஈ.சி.ஜீ நாடாப்படம், இரு பரிமாண நுண்ணலைப் படம் என்பன இந்நோயை அடையாளம் காண்பதில் பெரிதும் உதவிபுரிகின்றன.

இந்நோயைக் குணப்படுத்துவதற்காகத் தேவை ஏற்படின் மருந்துகள்

**க.செந்தூரன்**
**இறுதிவருட மருத்துவ மாணவன**

சிலவற்றை எடுக்கலாம் சத்திரசிகிச்சை மிகச் சிறந்த பலனை அளிக்க வல்லது. இதனை முழுமையாகக் குணப்படுத்தல் கடினமானதொன்றாகும்.

இந்நோய்கள் தவிர, குழந்தைகளில் பிறப்பில் நிலைத்த இணைப்புச் சிறுகுழாய் (Patent Ductus Arteriosus - PDA), இடது பெருநாடிச் சுருக்கம் (Aortic Stenosis) போன்றவையும் காணப்படலாம். ◆



மானிப்பாய் றோட்டறக்ட் கழக வளர்ச்சி நிதிக்காக கந்தரோடை சவாரித்திடலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாட்டு வண்டி சவாரிப்போட்டியில் எடுக்கப்பட்ட படங்கள். படங்கள்: பிரேம்

# மெய்வன்மை தொழில்நுட்ப அலுவலர் பரீட்சையில் குடாநாட்டில் 67 பேர் சித்தி

யாழ்ப்பாணம்,ஜூலை22

இலங்கை அமெச்சூர் மெய்வன்மைச் சங்கத்தினால் நடத்தப்பட்ட 'தொழில்நுட்ப அலுவலர் தரம்4' இற்கான எழுத்துப் பரட்சையில் தோற்றி சித்தியடைந்தோர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட இப்பரீட்சையில் யாழ்.மாவட்டத்திலிருந்து தோற்றியவர்களில் 67பேர் சித்தியடைந்துள்ளனர்.

சித்தியடைந்தோர் விவரம் வருமாறு:-

செல்வி ஜே.எஸ்ஸ்ரீ.உதயா, எம்ஏ.பீரிஸ்,ஜீ.டி.தேவராஜா, திருமதி சிவாஜினி பரமசிவம், வை.சிவகுமார், கார்த்திகேசு இராமச்சந்திரன் -

எஸ்.மயூரன், அரியரட்ணம் பிரபாகரன், ரவீந்திரம் ஸ்ரீரமணன், செல்வி ராஜதாஸ் ரமேஸ், பி.முகுந்தன், பெரியதம்பி ராஜமனோகரன், என். முகுந்தன் -

எம்மகிந்தன், ஏ.ஜெயந்தன், துரைராஜா இளங்குமரன், எம்.சசிக்குமார், எஸ்.சிவபாலமுகுந்தன், எஸ்.இந்திரதாஸ், எஸ்.தேவலிங்கம், எஸ்சிவசசெல்வன் -

செல்வி எம்.மிடோனா, எம்.சஞ்சீவன்குலாஸ், கே.சசிக்குமார், எம்.மதியழகன், கேசத்தியபாலன், ஆர்கோபார்ட் சம்சன், செல்வி எஸ்.சிவஞானம், ஜெ.ஜெயகாந், செல்வி ஜெயாழினி இராசலிங்கம் -

பி.பாஸ்கரன், ரி.சசிகரன், கே.அனுஷன், தயாளினி பாலசுப்பிரமணியம், எம்.பிரதீப்குமார், எஸ்.சுரேந்திரா -

பி.நடேசலிங்கம், ரி.ஹரிகரன், கே.கார்த்திகா, எஸ்கௌதமன், பி.துஸ்யந்தி, எஸ்.சதீஸ்கண்ணா, ஏ.தம்பிராஜா -

பி.கலைவாணி, ஆர்.சிவசேகரம், எஸ்.சசிகரன், எஸ்.சிவகரன், திருமதி ரி.லோகநந்தினி, எஸ்.திருநாவுக்கரசு, என்.நவதீபன், ஏ.பவானந்தன் -

எஸ்மதியழகன், எஸ்.உதயணன், ஆர்.கிருபாதேவி, எஸ்.கோகுலன், ஜெ.அனுஷதாஸ், அம்புறோஸ் பெனிற் குறோஸ், பி.பாலபவன், வி.குமணன் -

எஸ்.ஜெயக்குமார், மேரிபரினா பெல்டோமா, எஸ்ஜெனகன், ரி.பரமேஸவரன், ஆர்.குகன், என்.கணேசானந்தன், பி.ஆனந்தி, ஜே.ஜங்கரன்.

இப்பரீட்சையில் தோற்றியவர்களின் பரீட்சைப் பெறுபேற்று அட்டைகளை இன்று முதல் யாழ்.கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டில் பெறறுக்கொள்ளலாம்.

(ம-5)

# விளையாட்டு

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை22

யாழ்ப்பாணம் உதைபந்தாட்டலீக், வலிகாமம் உதைபந்தாட்டலீக் ஆகியவற்றுடன் இணைந்து பருத்தித்துறை உதைபந்தாட்டலீக் நடத்தும் உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டி நாளை புதன்கிழமை முதல் வதிரிபொமர்ஸ் விளை யாட்டுக்கழக மைதானத்தில் நடை பெறவுள்ளன.

யாழ்.மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 24 அணிகள் இப்போட்டிகளில் பங்குபற்றுகின்றன. இவ்வணிகள் 8 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு முதற்சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் நடத்தப்படவுள்ளன.

(ம-5,86)

## குத்துச் சண்டைப் போட்டியில் பங்கேற்றவர் மரணம்

அமெரிக்காவின் யுடா நகரில் நடைபெற்ற குத்துச் சண்டைப் போட்டியின் முதல் சுற்றிலேயே எதிராளி விட்ட குத்தில் பிராட்ரோன் எனும் வீரர் உயிரிழந்தார்.வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்த மோதலில் பில்லி ஜூம்ப்ரனுடன் மோதினார் ரோன். மொத்தம் 6சுற்றுக்கள் கொண்டது போட்டி.

ஆனால், முதல் சுற்று முடிய 5வினாடிகள் இருக்கையில் ஜும்ப்ரனிடம் குத்து வாங்கியுள்ளார் ரோன். அச்சுற்று முடிந்த 10 வினாடிகள் கழித்து கீழே சாய்ந்தார். உடனே அவரைப் பரிசோதித்த டாக்டர், ரோன இறந்துவிட்டதாகக் கூறியுள்ளார்.

ரோன் மாரடைப்பாலேயே இறந்திருப்பார் என யூகங்கள் நிலவுகின்றன. என்றாலும் எவ்வாறு இறந்தார் என்பதை உறுதிசெய்யும் சோதனைகாக அவரது உடல் சால்ட்லேக் சிட்டிக்கு கொண்டு செல்லப்பட்டது.

கடந்த வாரம் இறந்த அவரது தாயின் அடக்கத்துக்குப் பணம் திரட்டவே இப்போட்டியில் ரோன் கலந்து கொண்டார் என அவரது நண்பர் புரூஸ டிராம்பிளர் கூறியுள்ளார்.

# தமிழர் தேசிய அடையாளத்தை வலுப்படுத்தும் காரணிகளில் விளையாட்டும் தனக்குரிய இடத்தைப் பெறவேண்டும்

## தலைவரின் எண்ணம் இது என்கிறார் பாப்பா

"தமிழர் தேசிய அடையாளத்தை வலுப்படுத்தும் காரணிகளில் விளையாட்டும் தனக்குரிய இடத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே விடுதலைப்புலிகளின் விளையாட்டுத்துறை எமது தேசியத் தலைவரினால் உருவாக்கப்பட்டது.

"எமது இளைய தலைமுறையினரை எப்போதுமே வீரமும் விவேகமும் கொண்ட தலைமுறையாக வளர்த்தெடுக்க வேண்டும் என்பதில் தேசியத் தலைவர் அதிக கவனத்தைக் கொண்டிருந்தார்."

- இவ்வாறு தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் சி.பாப்பா அண்மையில் தமிழீழ வலைப்பந்தாட்ட தெரிவு அணியின் ஐரோப்பிய பயணம் தொடர்பாக தெரிவிக்கும் போது கூறினார்.

"தமிழர் தாயகத்தின் எட்டு மாவட்டங்களையும் உள்ளடக்கிய, தமிழர் தாயகத்தின் வலைப்பந்தாட்டத் தெரிவு அணி கடந்த இரு தசாப்தங்களின் பின் தமிழர் தாயக அணியாக வெளிநாடு ஒன்றுக்குச் செல்வது இதுவே முதற்றடவையாகும். இது எமது செயற்பாட்டில் திருப்புமுனையாக அமைகிறது" - இவ்வாறு பாப்பா மேலும் கூறினார்.

8ஆவது தமிழர் விளையாட்டு விழாவில் பங்குபற்றுவதற்காக தமிழீழ விளையாட்டு அணி நேற்று முன்தினம் காலை லண்டனுக்குப் புறப்பட்டுச்சென்றது.

எதிர்வரும் 27ஆம் திகதி பிரிட்டனில் புறோமில் நகரில் இவ்விழா நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. பிரிட்டனில் வசிக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர் சங்கத்தினால் இவ்விழா ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

இந்த வலைப்பந்தாட்ட அணி இவ்வருடம் பெப்ரவரி மாதத்தில் கிளிநொச்சியில் நடைபெற்ற 'தமிழீழ தேசிய பெருவிளையாட்டு விழா'வில் கலந்துகொண்ட அணியினரிடையே இருந்தே தெரிவுசெய்யப்பட்டதாகும். இந்த அணியின் முகாமையாளராக றெசான் இராஜசிங்கமும், பயிற்றுநராக ரதிகலாதேவி ஆனந்த வடிவேலும் கடமையாற்றுகின்றனர்.

இந்த அணியினருக்கு கிளிநொச்சியிலும், மஹரகம இளைஞர் சேவைகள் மன்றத்திலும் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

பிரிட்டனுக்குச் சென்றுள்ள வலைப்பந்தாட்டக்குழு விவரம் :

நிஷாந்தி இராஜரட்ணம் (அணித் தலைவி), தயாளினி செல்வராசா, சங்கீதா திருச்செல்வம், சந்திரமதி தவராஜா, பூமகள் கந்தசாமி, மாலினி மகாலிங்கம், நித்தியா இராஜரட்ணம், பிரிந்தா சோமசுந்தரம், கமீலா குணரட்னம், நிர்மலா காத்தமுத்து, ராதா ஆனந்தக்கிளி, ரதிகலாதேவி ஆனந்தவடிவேல் (பயிற்றுநர்). றொஷான் இராஜசிங்கம் (அணி முகாமையாளர்).

(ஒ)



தமிழீழ வலைப்பந்தாட்ட அணியைச்சேர்ந்த வீராங்கனைகள் லண்டனுக்கு புறப்படுவதற்கு முன்னர் கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

## யுப்பீற்றஸ் குறூப் வென்றது!

யாழ்ப்பாணம்,ஜூலை22

பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழகம் நடத்திய வடிவேல் ஸ்ரீ ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யுப்பீற்றஸ் குறூப் அணி வெற்றிபெற்றது.

இச்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றன.

இறுதியாட்டத்தில் யுப்பீற்றஸ் குறூப் அணி அதனை எதிர்த்து விளையாடிய தண்டஸ் அணியை 12-2 என்ற கோல்கணக்கில் தோற்கடித்து வெற்றிபெற்றது. ஆட்டத்தின் சிறப்பாட்டக்காரராக யூப்பீற்றஸ் அணியைச் சேர்ந்த ஜே.பிக்கிளஸ் தெரிவு செய்யப்பட்டார்.

(ம-5)


**கொக்குவில் சங்கீர்த்தா நவீன பாலர் பாடசாலை**

வருடாந்த விளையாட்டு விழா

காலம் :இன்று (22.07.2003) செவ்வாய் 2.00 மணி
இடம் :கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானம்
பிரதமவிருந்தினர் :திரு. M.S.ஸ்ரீதயாளன் (உதவிக்கல்விப்பணிப்பாளர்)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

(20571) திரு.க.தேவராசா(நிர்வாகி)மற்றும் ஆசிரியர்,பெற்றோர்.



**துயர் பகிர்கின்றோம்**

யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் அவர்களின் அன்புத்தாயார்

**திருமதி செல்லையா முத்துப்பிள்ளை**

அவர்கள் காலமனதையிட்டு துயருறும் குடும்பத்தினருடன் நாமும் துயர் பகிர்கின்றோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

*வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.* (20573)(12-17-30) வலயக்கல்விப்பணிப்பாளரும் அலுவலர்களும்.



**கண்ணீர் அஞ்சலி**

மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி செல்லையா முத்துப்பிள்ளை**

அவர்களின் மறைவையொட்டி அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம், கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம், கொழும்புத்துறை.

(20569)(17-30-12)



**மரண அறிவித்தல்**

**செல்லப்பா ரகுபதி**

33/1,சிவன்பண்ணை வீதி, கொட்டடியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமகவும் கொண்ட செல்லப்பா ரகுபதி நேற்று (21.07.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - மகேஸ்வரி தம்பதிகளின் அன்புமகனும் இஸ்காந்தவதனியின்(லண்டன்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற கைதடி வடக்கு சரவணமுத்து(ஆசிரியர்), விசாலட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், சிறீபதி(லண்டன்), ஜெயபதி (ஜேர்மனி), இந்திரபதி (ஜேர்மனி), விஜயபதி (பிரான்ஸ்), வான்மதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கனடாவில் உள்ள சாயிசங்கர், பிரதீபா, பிரசாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரான்ஸிலுள்ள ஆரணி, சந்துரு, ரமணா ஆகியோரின் பெரிய தகப்பனாரும் புவனேஸ்வரி, ஸ்காந்தவதனன்(லண்டன்), நிர்மலகுமாரன்(லண்டன்), நிர்மலகுமாரி, அனுசூயாதேவி(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*86,ST,Barnapas Road,*
*Walthamstow,*
*E-17, 8 JY,*
*England.*
*T.P 0044 2085092363*

தகவல்:
மனைவி, சகோதரர்கள்.

(20572) (30-17-12)

# மருத்துவ குணங்கள் மிகுந்த நெல்லிக்கனி

**கமமும் புலமும்**

ஜெயஸ்ரீ

### முற்காலத்து நெல்லி

நெல்லி என்ற உடனேயே அதன் பெருமையைப் பற்றிக்கூறும் சான்றுகளைப் பற்றி அறிய ஆவல் ஏற்படுவது இயற்கை. பழமையான நூலகளில் நெல்லியைப் பற்றிவரும் சில செய்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. பல்லாண்டுகளுக்கு முன்பே, அதன் நோய் தீர்க்கும் திறனும் அதில் எல்லாச் சத்துக்களும் நிரம்பியுள்ள பெருமையும் உணரப்பட்டிருக்கின்றன என்பதை இவை காட்டும்.

இந்தியாவின் தகடூரைத் தலைநகராகக்கொண்டு ஆட்சிபுரிந்த கொங்கு நாட்டுமன்னன் அதியமான் புலவர்கள்மேல் மாறா அன்புடையவன். சிறப்பாக ஔவையார் மேல் பேரன்பு பூண்டவன். தன்னைத் தேடி வந்த அந்த முதுபெரும் புலவருக்கு உடனே பரிசு தந்தால் தன்னைவிட்டு



விரைவாக அவர் நீங்கிவிடுவார் என்று கருதி, பரிசு கொடாது காலம் தாழ்த்தித் தன்னுடன் நெடுநாள் அவரைத் தங்கச்செய்தான்.

அதியமான் ஒருநாள் காட்டுக்கு வேட்டையாடச் சென்றான். அங்கு ஓர் உயர்ந்த மலைப்பிளவில் யாரும் எளிதில் ஏறமுடியாத உயரத்தில் ஓங்கி வளர்ந்திருந்த ஒரு நெல்லி மரத்தைக் கண்டான். அதில் பல்லாண்டுகளுக்கொருமுறை தோன்றும் கருநெல்லிக்கனி இருப்பதை அறிந்து, ஏறுதற்கு அரிதான அம்மரத்தில் ஏறி அதைப்பறித்தான்.

அக்கனியை உண்பார் நெடுநாள் பிணியின்றி வாழ்வார் என்னும் செய்தியையும் அதியமான் அறிந்திருந்தான். உடனே அவனுக்கு மகிழ்ச்சி தோன்றிற்று. தான் உண்ண நினைத்ததால் அல்ல; நெடுநாள் வாழ்ந்து உலகிற்குப் பயன் செய்வார் புலவர். அவருக்குத் தரலாம் என்பதற்கான எண்ணத்தால் விளைந்த மகிழ்ச்சி அது. கனியின் பெருமையைப் பற்றிக் கூறாது, அதை ஔவையிடம் தந்து அருந்தச் செய்தான். பின்பே ஔவைக்கு அதன் பெருமை தெரியவந்தது.

நெல்லியை நாளும் உட்கொண்டால் இளமைக்காலம் நீளும், முதுமைப் பருவம் காலம் தாழ்த்தியே வரும் என்று இக்காலத்தய நிபுணர்கள் ஆராய்ந்து கண்டுபிடித்துள்ள உண்மைக்கு இந்நிகழ்ச்சி சான்றாகிறது. இளமையைக் காக்கும் 'காய கல்பம்' நெல்லி என்று அக்காலத்திலேயே மக்கள் உணர்ந்திருந்தனர் என்பது வியப்பிற்குரியதே.

'பகவதியும், இலட்சுமியும் தீர்த்த யாத்திரை சென்றார்கள் "இன்று திருமால் வழிபாட்டிற்கு மிகச் சிறந்த பொருள் ஒன்றுவேண்டும் என்று இலட்சுமி கூறினாள் பகவதியும் இதை ஒப்புக் கொண்டாள். யாதென்று தெரியாத அப்பொருள் மேல் இருவருக்குமே பக்தி கனிந்த ஒரு நிலை ஏற்பட்டு இருவர் கண்களிலிருந்தும் நீர்த்துளிகள் சுரந்து தரையில் வீழ்ந்தன. அந்தத்துளிகளிலிருந்து மாதா மாதம் வளர்பிறையில் ஏகாதசியன்று நெல்லி தோன்றிற்று. இதைக்கண்டு தேவர்கள் மகிழ்ச்சியினால் பூரித்தனர். அன்றிலிருந்து நெல்லி துளசிக்குச் சமமாக வைத்துப் போற்றப்படுகிறது. சிவவழிபாட்டுக்கும் நெல்லி இலைகள் புனிதமானவை எனக் கருதப்படுகின்றன." நெல்லியின் தோற்றம் பெருமை ஆகியவை பற்றிக் கூறும் இக்கதை கருட புராணத்தில் காணப்படுகின்றது.

இன்றும் வட இந்தியாவில் ஆண்டு தோறும் இந்துக்கள் நெல்லி காய்க்கும் பருவத்தில் - மாசி மாதம் வளர்பிறை ஏகாதசியன்று - நெல்லிமரத்தடியில் அதன் பூ, கனி, பட்டை ஆகியவற்றைப் படையலிட்டு வழிபடுகிறார்கள். தென்னிந்தியாவிலும் கூட நெல்லி மரம புனிதத்தில் அரச மரத்துக்கு இணையாகக் கருதப்படுவதைப் பார்க்கின்றோம். கேரளத்திலும், தமிழகத்திலும் பல ஆலயங்களில் தல விருட்சங்களாக நெல்லி விளங்குகிறது. கந்த புராணத்திலும் நெல்லியைப் பற்றிய செய்திகள் உண்டு "ஆதிப் பிரளயத்தில் உலகப் படைப்புகள் அனைத்தும் அழிந்துவிட்டன. உடனே நான்முகனாகிய பிரமன் தவத்தில் தன்மயமானார். தவவலிமையால் அவர் கண்களிலிருந்து நீர் துளித்துப் பூமி மேல்பட்டது. அவ்விடத்தில் நாளடைவில் நெல்லி முளைத்து மரமாயிற்று அது பாவத்தையும், நோயையும் நீக்கவல்லது. காமம், கோபம், மயக்கம் முதலிய தீயகுணங்களைத் தணித்து மக்களுக்கு நன்மை அளிக்கவல்லது." இது கந்தபுராணச் செய்தி.

இச்செய்திகளிலிருந்து நெல்லியின் பழம் பெருமையை ஒருவாறு உணரலாம். இன்றும் அதன் பெருமை குன்றவில்லை.

### இக்காலத்தில் நெல்லி

ஒவ்வொருவரும் எப்பொழுதாகிலும் ஒரு தடவையாயினும் அதனைச் சுவைத்திருப்பர். நெல்லி ஓர் உன்னதமான அரிய பொருள் என்பதை "உள்ளங்கை நெல்லிக்கனி போல" யாவரும் அறிவர்.

நெல்லி மிக எளிதாகக் குறைந்த விலையில் கிடைக்கின்றது. மலிவாகவும் எளிதாகவும் கிடைக்கும் பொருள். அமுதமேயானாலும் அதற்கு இக்கால நாகரிக வாழ்வில் இடமிருப்பதில்லை. 'நெல்லி, தங்கம் இரண்டையும் சமஅளவில் எடுத்துக்கொண்டு அவற்றின் சிறப்பைக் கணிக்குமாறு அறிவுடையோரிடம் கூறினால், நெல்லிக்கே அதிக மதிப்புண்டு என்று அவர்கள் முடிவு செய்வர்' என்ற பொருளில் பாடலொன்று வழங்கி வருகின்றது.

நெல்லிப் பழத்தின் சிறப்பையும் பெருமையையும் மேல் நாட்டினர் நன்கு தெரிந்துவைத்துள்ளனர். நெல்லி விளைவது நம் நாட்டிலிலேயானாலும் அதன் சிறந்த பயன்களை மேல்நாட்டினர் நன்கு அறிந்திருக்கின்றனர். நம்நாட்டு நெல்லிகள், மேலநாட்டுக்குப்போய் மருந்துகளாக உருமாற்றமடைந்து நம் நாட்டுக்கு திரும்பி வரும்போது அவற்றை நாம் மிகுந்த மதிப்போடு நிறைய விலை கொடுத்து வாங்கிப் பயன்படுத்துகின்றோம். கிராமங்களில் ஒரு பழமொழியுண்டு "உள்ளூர் ஆண்டி காத்தாண்டி" அதாவது, யோகியோ ஞானியோ அவரவர் சொந்த ஊரில் மதிப்புப் பெறுவதேயில்லை. அவர் வேறு இடத்தில்தான் மதிக்கப்படுவார்.

நெல்லியின் கதையும் இது போன்றதே. நெல்லியின் சிறப்பு கணக்கில் அடங்காதது.

நம்நாட்டிலும் நெல்லிப்பழத்தின் பெருமை அறியப்படாமலில்லை. புராண காலத்தில் இருந்து நெல்லியின் பெருமை நமது நூல்களில் கூறப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு வைத்தியநூலிலும் நெல்லியின் மருத்துவ குணம் புகழப்பட்டிருக்கிறது. ஆனால், நாளடைவில் பிற வைத்திய முறைகளினுடைய ஆதிக்கம் வலுத்ததினால நெல்லியின் பெருமையும் சீர்மையும் "கொட்டப்பட்ட மூடையிலிருந்து சிதறும் நெல்லிக் காய்களைப் போல" மங்கலாயின.

சித்த வைத்தியம், ஆயுர்வேதம் முதலிய வைத்திய முறைகள் இப்போதும் நெல்லியைப் பயன்படுத்தி வருகின்றன.

பெரும் பொருள் செலவு செய்து உடல் நலத்தைப் பேணிக்கொள்ள முடியாத நிலையிலுள்ள இந்தியா, தென்கிழக்காசிய நாடுகள் முதலியவற்றிற்கு இயற்கை அருளிய பெரும் வரப்பிரசாதம் என்றே நெல்லியைக் கருதவேண்டும். இந்நாடுகளில் நெல்லியின் விளைச்சலும் அதிகம்.

நெல்லிக்காய், கடுக்காய், தானிக்காய் ஆகிய மூன்றும் சேர்ந்தது "திரிபலா" (முக்கனி) எனப்படும். சிறந்த ஆயுர்வேத வைத்தியசாலைகளில் திரிபலாவை "இராஜமருந்து" என்பர். இம் மூன்றாலும் ஆன திரிபலாச் சூர்ணம்(பொடி), திரிபலா லேகியம் ஆகிய இரண்டு பொருள்களும் எண்ணற்ற நோய்களைக் குணப்படுத்தும் மருந்துகளாகப் பயன்படுகின்றன.

இந்தத் திரிபலாவிலும்கூட நெல்லியே தலைமை இடத்தைப் பெற்றிருக்கின்றது. அம்மூன்றாலும் சூர்ணம், லேகியம் தயாரிப்பதோடு நெல்லியில் தனியாகச் சூர்ணமும் லேகியமும் தயாரிக்கப்பட்டுப் பல நோய்களுக்குத தரப்படுகின்றன.

### நெல்லி மரமும் விளைவும்

நெல்லியில் சாதாரணமாக இருவகைகள் உண்டு. அரைநெல்லி அலலது சிறுநெல்லி என்பது ஒருவகை. அரைநெல்லியை விடப் பெருநெல்லியே மருத்துவகுணம் நிறைந்தது.

இரட்டை விதையிலைத் தாவரங்களிலே ஆமணக்குக் குடும்பத்தைச் சேர்ந்தது நெல்லி. அரைநெல்லிமரம் பெரியதாக வளர்வதில்லை. பெருநெல்லி மரம் பெரியதாக வளரும். அரைநெல்லி மரத்தின் இலைகள் பெரியதாக வளரும். அரைநெல்லி மரத்தின் இலைகள் மிகச்சிறியதாகவும் இருக்கும் அரைநெல்லிப் பழங்கள் மிகவும் மென்மையானவை. மரத்திலிருந்து தரையில் விழும் போது அவற்றில் காயமேற்படுவதுண்டு. ஆனால், பெருநெல்லிப் பழங்கள் மரத்தில் இருந்து விழுந்தாலும் காயம் அடையாமல் உருண்டு ஓடும் இயல்பின. அரைநெல்லிப்பழங்களின் மேற்பகுதியிலுள்ள கீற்றுக்கள் பட்டை பட்டையான நாலைந்து மேடு பள்ளங்களாகத் தோன்றும். பெருநெல்லிப்பழங்களில் கீற்றுக்கள் போன்ற கோடுகள் தோன்றுமேயொழிய மேடு பள்ளங்கள் காணப்படாது. அரைநெல்லியை விடப் பெருநெல்லிப பழங்கள் பெரியவை.



இஸ்ரேல் முதல் கொரியா வரையிலான மத்திய கிழக்கு நாடுகளிலும், இந்தியா, இலங்கை, பர்மா, மலேசியா, மாலைதீவு, சீனா, ஜப்பான் ஆகிய தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் நெல்லி மிகுதியாகக் காணப்படுகின்றது.

சமவெளியில் மட்டுமன்றி கடல் மட்டத்திற்கு மேல் 4500அடி உயரம் வரை உள்ள நிலத்தில் நெல்லி வளரும். இது தானாகவும் வளரும் மக்கள் வைத்து வளர்ப்பதும் உண்டு. குன்றுகளிலும், மலைப்பள்ளத்தாக்குகளிலும், இலையுதிர் காடுகளிலும். இம்மரங்கள் எளிதில் வளர்கின்றன. இவற்றுக்குக் காட்டு நெல்லி என்று பெயர். நாட்டுக்குள் கிராமங்களிலும் தோட்டங்களிலும், பட்டணங்களில் வீட்டின் முற்றத்து வெளிகளிலும் கிணற்றங்கரைகளிலும் வைத்து வளர்க்கப்படுகின்றது. இவை தோட்டநெல்லி எனப்படுகின்றது.

காட்டு நெல்லி மரங்கள் மழையை மட்டும் நம்பி வளர்வதால் அவை சிறிதாகவே இருக்கும். ஆனால், வைத்து பயிரிடும் மரங்கள் போதிய நீரும் வேண்டிய எருவும் பெற்று வளர்வதால் பெரிய கனிகளைத் தருகின்றன.

நெல்லி மரம் பருத்து பல கிளைகளுடன் பெரியதாக வளரும். நடுத்தர மரத்தின் அடிப்பாகத்தின் சுற்றளவு இரண்டு மீற்றர் (6முதல்7 அடி) வரை இருக்கும். மரம் கோணலாகவும் நெருடுள்ளதாகவும் இருக்கும். இதன பட்டை சாம்பல் அல்லது இளஞ்சிவப்பு நிறமாக இருக்கும். பட்டைகள் பெரிதும் வெடித்திருக்கும் மேற்பட்டை எளிதில் உரிந்து விடும் பட்டையை வெட்டினால் அது சிவப்பு நிறமாக இருக்கும். இம்மரம் பார்வைக்கு கூட்டிலைகள் உள்ளது போலத்தோன்றும். உண்மையில் கூட்டிலைகளாகக் காண்பவை சிறிய இலைகளே. அக்கிளைகளில் மிகச் சிறிய இலைகள் தனித்தனியாக மாற்று ஒழுங்கில் பொருந்தியிருக்கும் இலை நீண்ட சதுர வடிவில மிகக் குறுகியதாக 2 சென்ரிமீற்றர் நீளம் வரையிலும் இருக்கும். இச்சிறிய இலைகளில் காம்பின் அடியில் செதில்களும், இலைகளுக்கும் காம்புகளுக்கும் இடையிலிருந்து பூக்களும உண்டாகும்.

பூக்களில் ஆண்பூ, பெண்பூ இரண்டும் ஒரே மரத்தில் ஒவ்வொரு சிறு கிளையிலும் தோன்றும் பூக்கள் மிகவும் சிறியவை. எளிதில் உதிர்ந்து விடும். இலைகள் வளரும் முன்பே பூக்கள் தோன்றும். பூவிலே புறவிதழ்கள் ஐந்தாறு இருக்கும். அகவிதழ்கள் இருப்பதில்லை. ஆண் பூக்களை விட பெண்பூக்கள் சற்று பெரியவை. இம்மரம் சாதாரணமாகக் கோடையில பூக்கும்.

கோடை மாதங்களில் இம்மரம் காய்க்கும். மரத்தில் நெல்லி குலைகுலையாகத் தொங்குவதைக் காண அழகாக இருக்கும். பழங்கள ஏறத்தாழ உருண்டையாக இருக்கும்.

நெல்லிமரம் பார்க்க அழகுடையது. நெல்லி இலைகளோ நோய் தீர்ப்பன. அரும்பும் பூக்களும் கூட அப்படியே நெல்லி மரத்தின் நிழல் மிகக் குளிர்ச்சியடைந்து, நெல்லி மரத்தடி காற்றில் அசுத்தமும், வெப்பமும் நீக்கப்படுகின்றது. வேப்பங் காற்றைவிட நெல்லி மரக்காற்று நலமுடையது.

---

# யாழ். மாவட்ட மட்டத்திலான தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை22

யாழ் மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் அண்மையில் யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம், வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றில் இடம்பெற்றன.

போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர், விவரம் முறையே வருமாறு:-

**வாசிப்பு பிரிவு-1**

மா.நாகவதனி-தந்தை செல்வா தொடக்கநிலைப்பள்ளி, யோ.அலன் ராஜ்-யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி, ப.கௌதமன் - உடுப்பிட்டி, அமி. கல்லூரி.

**வாசிப்பு பிரிவு-2**

ஸ்ரீ.கௌசிகா-யாழ்ப்பாணக் கல்லூரி, பொ.அபிதா-வடமராட்சி ம.ம.கல்லூரி, வி.கோபிநாத்-கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்.

**ஆக்கத்திறன் வெளிப்பாடு பிரிவு - 1**

வ.கோவர்த்தன்-வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாலயம், சி.அதிகரன்-ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியாலயம், பு.நிலக்ஷி - வதிரி திருஇருதயக் கல்லூரி.

**பேச்சு பிரிவு - 1**

ம.கரோலின் சேரா-யாழ் சென் ஜோண் பொஸ்கோ வித்தியாலயம், ச.சுபாங்கி-மகாஜனக் கல்லூரி, த.பிரியந்தி-கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்.

**பேச்சு பிரிவு-2**

இ.சாயிபாணு-வேம்படி மகளிர் கல்லூரி, ச.சாயி ஜெனணி-வடமராட்சி ம.ம.கல்லூரி, சி.யசோதரன்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**பேச்சு பிரிவு-3**

வி.நரேஷ்குமார்-கொக்குவில் இந்துக்கல்லூரி, ச.கார்த்திகா-பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை, ந.சாகினி-இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்.

**பேச்சு பிரிவு - 4**

சி.கஜேந்தினி-வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, ம.அருளினியன்-யாழ்.இந்துக்கல்லூரி, செ.ஹெலின்லி - இளவாலை கன்னியர்மடம் ம.வி.

**பேச்சு பிரிவு-5**

சி.பரதன்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி, க.அனித்தா-இணுவில் மத்திய கல்லூரி, ப.சந்திரகுமார்-யாழ். இந்துக் கல்லூரி.

**பாவோதல் பிரிவு -1**

க.சுகேதா-யாழ்.சென்ஜோண் பொஸ்கோ வித்தியாலயம், பு.ஆரணி -தும்பளை சிவப்பிரகாசம் ம.வி., த.யோபிகா -ஏழாலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை.

**பாவோதல் பிரிவு-2**

ம.மேசி-யாழ்ப்பாணக்கல்லூரி, இ.விநோஜா-ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியாலயம், க.கோபிகா-பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை.

**பாவோதல் பிரிவு-3**

து.காயத்திரி-வேம்படி மகளிர் கல்லூரி, இ.நிதர்சன்-ஹாட்லிக் கல்லூரி, சி.கேசலா-யூனியன் கல்லூரி.

**பாவோதல் பிரிவு-4**

பே.புஸ்பனா-தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, க.யோகேஸ்வரன்-நெடுந்தீவு மகா வித்தியாலயம், ச.கேதீஸ்வரி-தும்பளை சிவப்பிரகாச ம.வி.

**பாவோதல் பிரிவு-5**

தே.டஷிகா-சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, க.சர்மிளா-அளவெட்டி அருணோதயக் கல்லூரி, ப.யோகாம்பிகை - வல்வை சிதம்பராக்கல்லூரி.

**இசையும் அசைவும் பிரிவு-1**

செ.நர்த்தனா-கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை, சா.துவாரகா-உடுவில் மகளிர் கல்லூரி, ஜெ.தர்ஷிகா- நல்லூர் ஞானோதயா வித்தியாலயம்.

**இசை (தனி)பிரிவு-2**

ச.சங்கீதா- மானிப்பாய் மகளிர் கல்லூரி, இ.அனுஜா - யாழ். இந்து மகளிர் கல்லூரி, ந.கோகிலவாணி-வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.

**இசை (தனி) பிரிவு-3**

ர.சுரசாகித்தியன்-யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி, ஸ்ரீ.விதுர்சன்-கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம், சி. சிறீதரன்- ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி.

**இசை (தனி)பிரிவு-4**

ஜெ. வைஷ்ணவி- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, அ.அமிர்தஜோயனன்- கொக்குவில் இந்துக்கல்லூரி, தி. ரேணுகா- காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி.

**இசை (தனி)பிரிவு-5**

ம. தயாபரன்-யாழ்.மத்திய கல்லூரி, த.நிஷா- மானிப்பாய் மகளிர் கல்லூரி, சி.பிரபாலினி-தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம்.

**இசை குழு I**

யாழ் இந்து மகளிர் கல்லூரி,

(12 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். மாவட்ட........

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணக்கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

**இசை குழு II**

சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம், வேம்படி மகளிர் கல்லூரி, பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி.

**நடனம் (தனி) பிரிவு-1**

பா. ஜஸ்திகா- ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாலயம், பி. தமயந்தி- சாவகச்சேரி மகளிர் கல்லூரி, சோ.தயந்தினி - காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி.

**நடனம் (தனி) பிரிவு - 2**

தேவிதுர்ஷன் - கொக்குவில் இந்துக் கல்லூரி, ச.சுஜானி- உடுவில் மகளிர் கல்லூரி, பா.ரோகினி- வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.

**நடனம் (தனி) பிரிவு - 3**

பா.அனுஷன்-யாழ்.பெரியபுலம் மகா வித்தியாலயம், க.குலானி- சாவகச்சேரி இந்துக்கல்லூரி, இ.வரலட்சுமி - வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

**நடனம் (தனி) பிரிவு-4**

மு.மயூரி - வேம்படி மகளிர் கல்லூரி, சு.ஜான்சி- சாவகச்சேரி இந்துக் கல்லூரி, ச.டல்றின்- உடுவில் மகளிர் கல்லூரி.

**நடனம் (தனி) பிரிவு-5**

எலிசபேத் சுபத்திரா - வேம்படி மகளிர் கல்லூரி, சி.சிவரஞ்சினி- வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம், யோ.ஜெயதாரணி-வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

**நடனம் குழு I**

உடுவில் மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

**நடனம் குழு II**

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**நாடகம்**

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் மடம் ம.வி., அல்லாரை அ.த.க. பாடசாலை.

**வில்லுப்பாட்டு**

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, தொண்டமனாறு வீரகத்திப் பிள்ளை ம.வி., பெரியபுலம் மகா வித்தியாலயம்.

**விவாதம்**

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ் சென். பற்றிக்ஸ் கல்லூரி, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி.

**தமிழ் அறிவு வினா விடை**

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, சுண்டுக்குழி மகளிர் கல்லூரி, காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா ம.ம.வித்தியாலயம்.

**முஸ்லிம் நிகழ்ச்சி**

எம்.எம்.சர்ஜின்- யாழ் வைத்தீஸ்வராக்கல்லூரி, முந்தியாஸ்- சிலலாலை றோ.க.த.க. பாடசாலை,செ.தர்சினி- வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.

**நாட்டுக்கூத்து-சிந்துநடை**

அளவெட்டி அருணோதயக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி.

**நாட்டுக் கூத்து - தென்மோடி**

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, யாழ் சென். பற்றிக்ஸ் கல்லூரி, வடமராட்சி மணற்காடு றோ.க. த.க. வித்தியாலயம்.

**இசை நாடகம்**

உடுவில் மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, வேலணை கிழக்கு மகாவித்தியாலயம்.

**விசேட கூத்து**

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

**இசைத்திறன் (வீணை) பிரிவு-2**

சி.அபயன்-யாழ் இந்துக்கல்லூரி.

**இசைத்திறன் (வீணை) பிரிவு-3**

உ.சகானா-உடுவில் மகளிர் கல்லூரி, ஹ.காஞ்சனா-நல்லூர் இ.த.பெண்கள் பாடசாலை, சி. நிசாந்தி காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலயம்.

**இசைத்திறன் (வீணை) பிரிவு-4**

தி.காயத்திரி-உடுவில் மகளிர் கல்லூரி, சி.அருணன்-யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

**இசைத்திறன் (வீணை) பிரிவு-5**

பா.கஸ்தூரி சுண்டுக்குழி மகளிர் கல்லூரி, க.ஐஸ்வர்யா- சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

**இசைத்திறன் (வயலின்) பிரிவு-2**

ஜெ.ஹம்சவதி-பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை, ச.கிருஷ்ணவேணி-காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி, ச.சுயாணி- உடுவில் மகளிர் கல்லூரி.

**இசைத்திறன் (வயலின்) பிரிவு-3**

இ.ஜெயக்கிருஸ்ணன்- யாழ் இந்துக் கல்லூரி, தே.டிலாணி-உடுவில் மகளிர் கல்லூரி, வீ.இராஜசந்துரு - ஹாட்லிக் கல்லூரி.

**இசைத்திறன் (வயலின்) பிரிவு-4**

ஜெ.வைஷ்ணவி-மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை, ப.காயத்திரி -கொக்குவில் இந்துக் கல்லூரி, ஞா.தர்சியா-சாவகச்சேரி இந்துக்கல்லூரி

**இசைத்திறன் (வயலின்) பிரிவு-5**

க.பிரார்த்தனா-உடுவில் மகளிர் கல்லூரி, ப.றோசினி-கொக்குவில் இந்துக்கல்லூரி, தே.மாளவிகா- பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை.

**இசைத்திறன் (புல்லாங்குழல்) பிரிவு-3**

சு.விஜயருக்ஷாயினி-சுண்டுக்குழி மகளிர் கல்லூரி

**இசைத்திறன் (புல்லாங்குழல்) பிரிவு-4**

பா.ஐங்கரன்-ஹாட்லிக்கல்லூரி, க.கம்சாயினி-உடுவில் மகளிர் கல்லூரி, ப.தயாநிதி-இரியாலை கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம்

**இசைத்திறன் (புல்லாங்குழல்) பிரிவு-5**

த.தனேந்தினி- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. (எ-5-86)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 01 - 08 - 1952



மறைவு 22 - 06 - 2003

அமரர்

## மழவராயர் இராமநாதன்

22.06.2003 அன்று காலமான எமது அன்புத் தெய்வத்தின் நினைவாக இன்று (22.07.2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை மற்றும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வம் நோயுற்ற நேரங்களிலும் பின்னர் மரணச்சடங்கிலும் கலந்துகொண்டு உதவிகள், ஒத்தாசைகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

*ஞானசேகரம் இல்லம்,*
*இணுவில் தெற்கு.*
*மைத்துனர் ஞான.திருக்கேதீஸ்வரன்.*
*யாழ். மத்திய கல்லூரி.*

மனைவி: வசந்தி இராமநாதன (ஆசிரியை),
தந்தை: மழவராயர் (ஓய்வுபெற்ற அதிபர்),
மாமி, மைத்துனிமார்,
சகோதரர், பெறாமக்கள்.

(20567)(27-14-18-31)


# வகுப்பறைத் தொகுதி கையளிப்பு

தென்மராட்சி,ஜுலை22

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன சர்வதேசப் பிரிவினரால் புனரமைக்கப்பட்ட வகுப்பறைத் தொகுதி கடந்த வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாக கல்லூரி அதிபர் திருமதி சி.சிவநாதனிடம் கையளிக்கப்பட்டது.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன சர்வதேசப் பிரிவு பிரதிநிதிகளும் தென்மராட்சி கல்வி வலய உத்தியோகத்தர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(ம-117)

# முன்பள்ளி விளையாட்டு

தென்மராட்சி,ஜுலை22

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகத்தினால் பளைப் பிரதேசத்தில் நடத்தப்படும் முன்பள்ளிகளின் சிறார்களுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 30ஆம் திகதி பளையில் நடைபெறவுள்ளன.

பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள பகுதிகளில் இதுவரை 18 முன்பள்ளிகள் அமைத்து நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

(ம-117)

# கசிப்பு வைத்திருந்த மூன்று பேருக்கு ரூ.36ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம்,ஜுலை22

கசிப்பு வைத்திருந்த மூவருக்கு யாழ். நீதிமன்றம் நேற்று 36 ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

இராசசிங்கம் வீதி திருநகரைச் சேர்ந்த றோமான் அனிற்றா என்பவரை 3ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 3ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறும் -

உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த சண்முகம் சித்திரன் என்பவரை 6 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 2 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறும் -

மானிப்பாய் வீதியைச் சேர்ந்த திருமதி ரவீந்திரரஜனி யோகராசா என்பவரை 20 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 2 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறும் -

யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் பா.சுப்பிரமணியம் நேற்று உத்தரவிட்டார்.

(ம-5)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு மின்பிறப்பாக்கி

தென்மராட்சி,ஜுலை22

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையின் மின்சார விநியோகத்திற்கென 40 கிலோவாற்ஸ் வலுவுடைய மின்பிறப்பாக்கி இயந்திரத்தினை நிக்கொட் நிறுவனத்தினர் வழங்கியுள்ளனர்.

மின் பிறப்பாக்கி இயந்திரம் நேற்று முன்தினம் மாலை வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு அறையொன்றில் பொருத்தப்பட்டுள்ளது.

அடுத்த வாரம் தொடக்கம் இந்த மின் பிறப்பாக்கி இயந்திரத்திலிருந்து ஆஸ்பத்திரியின் அனைத்துப் பிரிவுகளுக்கும் மின்சாரம் வழங்கப்படும் என ஆஸ்பத்திரி பொறுப்பதிகாரி டாக்டர் ச.அம்பிகைபாகன் தெரிவித்தார்.

(ம-117)


2003 உயர்தர முடிவுகளை எதிர்பார்த்திருப்போரும் இணைந்து கொள்ளலாம்

இந்தியாவின் பெங்களூர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட தேசிய முதல் தரக் கல்லூரி


B.B.M,B.Sc, B.C.A, B.Com+ பட்டப்படிப்பு
2003 ஆகஸ்ட் 4 இல் ஆரம்பம்

இவ் வருடம் அனுமதி பெற்று ஒரு வருடத்தை மீதப்படுத்துங்கள்

மேலதிக விவரங்களுக்கு:
www.nfgcollege.com
குணவர்தன 01-811524
குணசேகர 038-2232657
கம்பனி செக்கட்ரேரியல் சேர்விசஸ் பிரைவேட் லிமிட்டட்
265C 1/1, ஸ்டான்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொடை
தொலைபேசி: 01-854438



# பாராட்டும் வாழ்த்தும்



போர் நடவடிக்கைகளின் போது இடம்பெயர்ந்து அல்லற்பட்டு ஆதரவின்றி அந்தரித்த எமக்குப் புகலிடமளித்து அன்பு பாராட்டி உதவிகள் நல்கிய இளைப்பாறிய பதில் அதிபரும் சமூகத் தொண்டருமாகிய சிறுப்பிட்டி மேற்கைச் சேர்ந்த செம்மல்

உயர்திரு.

**சின்னத்தம்பி செல்வரத்தினம்** அவர்கள்

யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதையிட்டு அவரை மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

திரு.தா.கந்தசாமி குடும்பத்தினர்.
திரு.கி.குமரகுருலிங்கம் குடும்பத்தினர்.
திரு.வே.ஆறுமுகசாமி குடும்பத்தினர்.
திரு.தா.சுந்தரமூர்த்தி குடும்பத்தினர்.

*வளலாய் மேற்கு,*
*அச்சுவேலி.* (20562)(27-14-18-31)



# யாழ்ப்பாணம் - மாநகரசபை

யாழ்.பண்ணை மீன் சந்தையைக் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்பட்டுள்ளன. நிர்ணயித்த ஆகக் குறைந்த கேள்வி ரூபா 50,0000/= மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அறியலாம்.

*மாநகரசபை அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*2003.07.18*

இ.இராமலிங்கம்.
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

(C/29080)(27-14-18-31)



# இதய அஞ்சலி



கந்நவனத்தில் கானமழை பொழிந்த
கார்மேகவண்ணன
பத்மநாதன்
எந்த உலகும் போற்றி மகிழும் இசைவாணன்
சந்நதமும் கந்தவனம் என் சோந்தர் சேவகம்.
இரதோற்சவத்திற்கு வருவேனென்றான்
எம்மைச் சிந்தை கலங்கவிட்டுச் சென்றடைந்தான்
கந்தன் திருவடியே களித்து

"கந்தவனம்",
பரம்பரை ஆதீனகர்த்தா,
திக்கம் செல்லையாபிள்ளை குடும்பம்.

(20560) (26-14-18-31)



# 31ஆம் நாளில் துயர்பகிர்கின்றோம்

அன்னை மடியில் 01 - 08 - 1952



இறைவன் அடியில் 22 - 06 - 2003

## அமரர் மழவராயர் இராமநாதன்

(R.T.C.நிறுவன அதிபரும், விஞ்ஞான ஆசிரியரும்)

விஞ்ஞானத்தின் விந்தை பல புரிந்து
விண்ணுலகம் மண்ணுலகம் போற்ற வாழ்ந்ததோடு
பார்த்தோர் முகம் பசியாறக் கதைகூறிய
பண்பாளரே! உமது புன்னகை பூத்த முகத்தை
பாரினில் இனி எப்போது நாம் காண்போம்?

ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.
*ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

புகையிரத வீதி அருகில்,
கோண்டாவில். (20563) (26-14-18-31)

K.T.C. கல்வி நிறுவனச்சமூகம்.



# ஊர்காவற்றுறை பிரதேச சபை அறிவித்தல்

## சின்னமடு மாதா தேவாலய வருடாந்த பெருவிழா

ஊர்காவற்றுறை, புளியங்கூடல் சின்னமடு மாதா தேவாலய வருடாந்த பெருவிழா 27.07.2003 முதல் ஆரம்பமாகி 05.08.2003 ஆம் திகதி வரை நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இக்காலப் பகுதியில் ஆலய வீதியிலும், சுற்றாடல்களிலும் தற்காலிக வியாபார நிலையங்களை அமைத்து வியாபாரம் செய்வோர் ஊர்காவற்றுறை பிரதேச சபையுடன் தொடர்பு கொண்டு பொது சுகாதாரப் பரிசோதகரின் சிபாரிசுக்கு அமைய அனுமதி பெற்று வியாபாரத்தில் ஈடுபடவேண்டும்.

குறித்த காலப்பகுதியில் ஆலயச் சுற்றாடலில் ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் அமைக்கப்பட்டிருக்கும் வாகனப் பாதுகாப்பு நிலையத்தில் வாகனங்களை நிறுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்வதுடன், தனியார் எவருக்கும் வாகனப் பாதுகாப்பு நிலையம் அமைத்து வரி அறவீடு செய்ய அனுமதிக்கப்படமாட்டாது என்பதை அறியத்தருகின்றேன்.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை.
21.07.2003

கு.கணேசலிங்கம்,
செயலாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

(சி-29079) (23-14-18-31)

# கண்பரிசோதனை முக்கிய அறிவித்தல்

19.07.2003 உதயன் பத்திரிகை பக்கம் 12இல் வெளியான விளம்பரம் தொடர்பான முக்கிய அறிவித்தல்.

17.06.2003 முதல் 24.06.2003 வரை நடத்தப்பட்ட **இலவச கண் சிகிச்சை முகாமில் பதிவு செய்து** பரிசோதனை செய்வித்தவர்கள் மாத்திரம் **பின்வரும் திகதிகளில்** குறிப்பிட்ட **இடங்களில்** தமக்குரிய **கண்ணாடிகளைத்** தவறாது பெற்றுக்கொள்ளவும்.

| பாடசாலை | நேரம் |
|---|---|
| 22.07.2003 | |
| கோண்டாவில் இந்து ம.வி. | காலை 10.00 - 11.00 வரை. |
| உரும்பிராய் இந்துக்கல்லூரி | பி.ப. 1.00-2.00 வரை. |
| இராமநாதன் கல்லூரி | மாலை 4-5 வரை. |
| 23.07.2003 | |
| கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி | காலை 9-10 வரை. |
| புனித சார்ள்ஸ் ம.வி. | ந.ப. 12-1 வரை. |

**ஒப்டிலைன் ஒப்டிகல்ஸ்**
(மூக்குக் கண்ணாடி விற்பனை நிலையம்)
இல.54, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை,
கொழும்பு - 07.
(சி-29084) (31-17-18)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணக் கல்லூரியின் புதிய அதிபராகப் பதவி உயர்வு பெற்று நேற்று (21.07.2003) திங்கட்கிழமை கல்லூரிச் சமூகத்தின் பாராட்டைப் பெற்றவரான

**உயர்திரு. நோயல் விமலேந்திரன்**
அவர்களை நாமும் உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**K. கனகலிங்கம்**
(அம்பாள் ஸ்ரோஸ்), வட்டுக்கோட்டை.
(சி-29083) (31-17-18)

# கிறிஸ்தவ சமய சமூக ஆய்வு மன்றம் (C.I.S.R.S)
## கருத்தரங்கு

தலைப்பு : "ஈழத்தமிழ் இனத்தின் வரலாற்றுப்பின்னணியும் இன்றைய நிலையும், எதிர்காலமும்"

தலைமை : திரு. N.A.விமலேந்திரன் (அதிபர், யாழ்ப்பாணக்கல்லூரி, வட்டுக்கோட்டை)

ஆசியுரை : பேராயர் கலாநிதி. S.ஜெபநேசன்.

கருத்துரை வழங்குபவர் : திரு. மா.க.ஈழவேந்தன் (பொதுச் செயலாளர், தமிழீழ விடுதலை அணி)

காலம் : நாளை (23.07.2003) நேரம் 3.30 பி.ப.

இடம் : யாழ்ப்பாணக் கல்லூரி வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ். வைத்தியசாலை முன்பாக)

நன்றியுரை : வண. G.நடராஜா (இயக்குநர் C.I.S.R.S.)

உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

* குறிப்பு : க.பொ.த. (உ/த) மாணவர்களுக்கு உகந்தது.

C.I.S.R.S. நிறுவனத்தினர்.
(20581) (31-17-18)

# இதய அஞ்சலி

**அமரர் G.அருளானந்தம்** (முல்லைத்தீவு)
இளைப்பாறிய ஆசிரியர்
யா/புனித பத்திரிசியார் கல்லூரி

மிக நீண்ட காலம் எமது கல்லூரியில் ஆசிரியராக நற்பணியாற்றிய அன்னாருக்கு எமது இதய அஞ்சலியையும், துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆசிரியர் சங்கம்,
புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.
(20578) (31-17-18)

# கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியை
செல்வி அமுதா குஞ்சிதபாதம்
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி மகேஸ்வரி குஞ்சிதபாதம்**

அவர்களின் மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயருடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்.
(20580) (31-17-18)

# கண்ணீர் அஞ்சலி

யா/புனித பத்திரிசியார் கல்லூரியின்
இளைப்பாறிய ஆசிரியர்
**G.அருளானந்தம்**

அவர்கள் 19.07.2003இல் கொழும்பில் இறைபதம் அடைந்தார். அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிப்பதோடு, அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பத்திரிசிய குடும்பம்,
யாழ்ப்பாணம்.
(20577) (31-17-18)

## சமய சந்நிதி

யாழ்ப்பாணம், ஜூலை22

நல்லூர் ஸ்ரீசட்டநாதர் சிவன் ஆலய வருடாந்த அம்மன் மஹோற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கொடிச்சேலை பவனி வருவதுடன் பூர்வாங்கக்கிரியைகள் ஆரம்பமாகும்.

நாளை காலை பத்து மணிக்கு கொடியேற்றம் நிகழும்.

தேர்த் திருவிழா எதிர்வரும் 31ஆம் திகதியும் தீர்த்தத் திருவிழா மறுநாள் முதலாம் திகதியும் இடம்பெறும்.

(ஐ)

## பெற்றோல் நிலையத்தில் கொள்ளை!

கல்முனை, ஜூலை22

சாய்ந்தமருதில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் ஆயுத முனையில் சுமார் ஒரு லட்சம் ரூபா கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் தனது வீட்டிற்குச் செல்வதற்காக பணப்பையுடன் காரில் ஏறமுற்பட்டபோது ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்று இவரை மிரட்டி பணப்பையைப் பறித்துச் சென்றுள்ளது. கால்நடையாகவே வந்த கொள்ளைக் கோஷ்டியினர் சாய்ந்தமருது மாவடிப்பள்ளி வயல் பாதையூடாக தப்பிச்சென்றுள்ளனர்.

இவர்களை மடக்கிப்பிடிப்பதற்காக மோட்டார் சைக்கிள்களில் சிலர் துரத்திச் சென்றனர். ஆயினும், அவர்கள் துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டதனால் பின்வாங்க வேண்டியதாயிற்று.

இதையடுத்து காரைதீவு விசேட அதிரடிப்படையினர் விரைந்து வந்து பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். கல்முனைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### தவறிவிட்டது

21.07.2003 இருபாலைக்கும் நீர்வேலிச் சந்திக்கும் இடையில் K.லிங்கேசன் என்பவரின் மொறட்டுவ பல்கலைக்கழகம் எனப் பெயரிடப்பட்ட சிவப்பு நிற பைல் (file) ஒன்று முக்கிய ஆவணங்களுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பாலசிங்கம் விடுதி யாழ். பல்கலைக் கழகம் (T.P-0777-940170) எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(20586) 29-17-18-31

[illegible]
பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் பார்த்து மகிழக்கூடிய பக்திப் படம்
கரண், குஷ்பு நடித்த
ஸ்ரீ பண்ணாரி அம்மன் (ரீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
THE ART OF THE WAR
தினசரி 8.45 இற்கு.
(C/28877) (31-17-18)

லஷ்சுமி சினிமா
இணுவில்
அஜித், ஜோதிகா, சிம்ரன் நடித்த
வாலி (ரீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.00, 7.00 (பு.நே.)
(C/28876) (31-17-18)

[illegible] அச்சுவேலி
எதிர்வரும் வெள்ளி முதல்
விஜய் மற்றும் பிரியங்கா சோப்ராநடித்த
தமிழன் (ரீலஸ்)
தினசரி காட்சிகள்
3.00, 7.00 (புதிய நேரம்)
காலை 11.00 மணிக்கு THE WORLD IS NOT ENOUGH (ரீலஸ்)
(C/28688) (31-17-18) (007 ஜேம்ஸ் பாண்ட்).



நாகம்ஸ் சுன்னாகம்
அர்ஜுன், கிரண், கவுண்டமணி நடித்த
(ரீலஸ்)
தினசரி காட்சி : 11.00, 3.00 (பு.நே.)
28 முதல்
தினசரி இரவு 7.00 மணிக்கு ஆங்கிலத் திரைப்படம் காண்பிக்கப்படும்.
(C/28767) (31-17-18)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தினவெளியீடு
மாதவன், ஜோதிகா நடித்த
பிரியமான தோழி (ரீலஸ்)
தினசரி: 10.30, 2.30, 6.30, 9.30.
(31-17-18)

# வளர்மதி நிறைவாழ்வகத்தின்
## 20.07.2003 அன்று குலுக்கப்பட்ட சீட்டிழுப்பு முடிவுகள்

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு | - | 6018 |
| 2ஆம் பரிசு | - | 5490 |
| 3ஆம் பரிசு | - | 0345 |

ஆறுதல் பரிசுகள் :

| | | |
|---|---|---|
| 1) 0342 | 4) 6300 | 7) 4769 |
| 2) 4489 | 5) 4552 | 8) 0140 |
| 3) 1816 | 6) 4450 | 9) 0399 |

தொடர்பு:
பொருளாளர்,
வளர்மதி நிறைவாழ்வகம்,
சம்பியன் லேன், கொக்குவில்.
(சி-29085) (29-17-18-31)

# தென்மராட்சி கோட்ட தேசிய எழுச்சி பேரவையின் ஊரகக் கிளை உறுப்பினர்களுக்கான விசேட கலந்துரையாடல்

தென்மராட்சிக் கோட்டத்திற்குட்பட்ட ஊரத்தேசிய எழுச்சிப் பேரவையின் உறுப்பினர்களுக்கான விசேட கலந்துரையாடல் 23.07.2003ஆம் நாள் புதன்கிழமை பி.ப. 4மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைத்து ஊரகக் கிளை உறுப்பினர்களையும், கிராம உத்தியோகத்தர்களையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

தேசிய எழுச்சிப் பேரவை
அமைப்பாளர்கள்,
தென்மராட்சிக் கோட்டம்.
(20589) (31-17-18)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தையா செல்லாச்சி

சரசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா செல்லாச்சி நேற்று (21.07.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் பரமசாமி, நடராஜா, அமரர் செல்லத்துரை (அதிபர், மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம்), மகாலிங்கம் (பிள்ளையார் ஸ்ரோர்ஸ், சாவகச்சேரி), நவயோகேஸ்வரி, ராஜேஸ்வரி, குமாரவேலு (முகாமையாளர், லம்போதரன் ரேடர்ஸ், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ராசம்மா, அமரர் நவமணி, சிவபாக்கியம் (கொழும்பு), தங்கமணி கனகசந்திரன் (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர், தென்மராட்சி), கிருஸ்ணமூர்த்தி, ஜெயலட்சுமி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2003) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொம்பியுல மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.
(சி-29082) (31-17-18)

தகவல் :
க.மகாலிங்கம் (மகன்),
பிள்ளையார் ஸ்ரோர்ஸ், சாவகச்சேரி

## திருமதி இராசேந்திரம் செல்லம்மா

சங்குவேலி தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசேந்திரம் செல்லம்மா நேற்று (21-07-2003) திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி - கைராசி ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசேந்திரத்தின் அன்பு மனைவியும் லோகேந்திரராஜா (இளைப்பாறிய பொலிஸ் இன்ஸ்பெக்டர். J.P), ஜெயராஜா (சுவிஸ்), லோகநாயகி, சிறிராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திரகலா ரஞ்சனி, நகுலேஸ்வரி காலஞ்சென்றவர்களான கதிர்காமநாதன், ரேணுகா ஆகியோரின் மாமியாரும் அருள்ராஜ் (மானிப்பாய் மேற்கு கிராம அலுவலகர்), விஜியகலா, கவிதா(ஆசிரியை), ஜெகநாதன், உதயகலா ஆனந்தபாலன், அபிராமி, செந்தூரன், கேசவன், தினேஸ்குமார், நித்திலா, மிதிலா, துளசி, சபேஷன், சரவணன் ஆகியோரின் பேர்த்தியும் திவ்ஜன், யதுஷன், ஜீவிஷன், அக்ஷயன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21.07.2003) திங்கட்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.
(20588) (31-17-18)

தகவல் :
குடும்பத்தினர்.

## திருமதி மகேஸ்வரி குஞ்சிதபாதம்

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி குஞ்சிதபாதம் அவர்கள் நேற்று (21.07.2003) திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற (முருகண்டி கணேசன் கபே - உரிமையாளர்) மாரிமுத்து தம்பையா - யோகம்மா ஆகியோரின் அன்பு மகளும் சுண்டுக்குளி வி.சி. குஞ்சிதபாதம் (கவிஞர்-கூத்தாடி) அவர்களின் அன்பு மனைவியும் செல்வி அமுதா (ஆசிரியை, யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்), பிரதீபன், பார்த்திபன், பகீரதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் திருமதி தையல்நாயகி அவர்களின் பெறாமகளும் திருமதி விமலேஸ்வரி அரசரத்தினம், காலஞ்சென்ற விமலேந்திரன் மற்றும் திருமதி ஞானேஸ்வரி சிவலிங்கம், திருமதி யோகேஸ்வரி விக்னேஸ்வரன் ஆகியோரின் அருமைச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2003) செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு தற்காலிக இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் (கவிஞர்கள், கலைஞர்கள்) அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
இல.50, சாத்திரியார் ஒழுங்கை,
கனகரத்தினம் வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.

தகவல் :
வி.சி.குஞ்சிதபாதம் (கணவர்),
பிள்ளைகள்.
(20570) (18-17-31)

# நோர்வேயிலிருந்து ஊர் திரும்பியவரின் பொருள்களுடன் ஓட்டோ மாயமானது!

## சுன்னாகத்தில் நேற்றுச் சம்பவம்

சுன்னாகம்,ஜூலை22

வெளிநாட்டிலிருந்து வந்த இளைஞர் வீடு நோக்கிச் செல்லும் வழியில் அவரது பொருள்களுடன் அவர் பயணித்த ஓட்டோ மாயமானது.

நோர்வேயிலிருந்து தாய் நாட்டுக்கு வந்திருந்த சூராவத்தையைச் சேர்ந்த தமிழ் இளைஞரே இவ்வாறு பொருள்களைப் பறிகொடுத்தவராவார்.

நேற்றுத் திங்கட்கிழமை சுன்னாகத்தில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக கூறப்படுவதாவது:-

புலம்பெயர்ந்த மேற்படி இளைஞர் நேற்று பிற்பகல் யாழ்.பஸ்நிலையத்தில் வந்து இறங்கியுள்ளார். தனது ஊருக்குச்செல்வதற்காக ஓட்டோ ஒன்றில் சுன்னாகம் பஸ்நிலையத்தை சென்றடைந்தார். ஓட்டோ கட்டணத்தைச் செலுத்துவதற்காக காசு மாற்ற அந்த இளைஞர் கடைஒன்றுக்குள் நுழைந்தார். பின்னர் கடையிலிருந்து வெளியே வந்து பார்த்தபோது அவர் வெளிநாட்டிலிருந்து கொண்டுவந்த பொருள்களுடன் ஓட்டோ காணாமற் போயிருந்தது.

இச்சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-9-24)

## விடுதலைப் புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்சி)

ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகள் தொடர்பான முன்னேற்றங்களை ரணில் விக்கிரமசிங்கவின் அரசு தொடர்ந்து இந்தியாவுக்குத் தெரியப்படுத்தி வருகின்றது.

விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்படும் சலுகைகளை பௌத்த மதத் தலைவர்கள் எதிர்க்கின்றனர். அதே வேளை, தமிழ்மொழி பேசும் மதத் தலைவர்கள் புலிகளை ஆதரித்து வருகின்றனர்.

சமாதான நடவடிக்கையில் அனுசரணையாளர்களாகச் செயற்படுகின்றவர்கள் ஏதாவது ஒரு சமாதானத் தீர்வு கிட்டினால் போதுமானது என்று எண்ணுகின்றார்கள். இலங்கையின் ஒருமைப்பாட்டை சிதைப்பதாக இருந்தாலும் தீர்வொன்று கிட்டுவதிலேயே அவர்கள் கவனம் செலுத்துகின்றனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் யுத்தநிறுத்தத்தை தொடர்ந்து பேண வழங்கிவரும் ஆலோசனைகள், விடுதலைப் புலிகளின் அரசு ஒன்றை அங்கீகரிக்க வழிசெய்துவிடும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை இலங்கை அரசு, குறிப்பாக இலங்கைக் கடற்படை, விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அணியை சட்டப்படி அல்லாத ஆனால், ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு படையாக அங்கீகரிக்க வழிசெய்கிறது.

இச்சமாதானப் பேச்சுகளை, அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரை நீடிக்கச் செய்வதே ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமாகும். சமாதானத்திற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை முன்வைத்து ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற அவர் எண்ணுகிறார்.

அவ்வாறு ஜனாதிபதித் தேர்தலில் அவர் வெற்றி பெற்றால் சமாதான நடவடிக்கையிலிருந்து பின்வாங்கிக்கொண்டு தமிழர்களுக்கு எதிரான பிரசாரத்தில் அவர் ஈடுபடக்கூடும்

- இவ்வாறு ஜே.என்.டிக்ஷிற் தெரிவித்தார் (ஒ)

## கொள்கைப்...

(முதலாம் பக்கத் தொடர்சி)

இன்று நடைபெறும் கூட்டத்தில் சுதந்திரக்கட்சி சார்பில் ஜனாதிபதியை விட அதன் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேன மட்டுமே பங்கு பற்றுவார் எனத் தெரிகிறது.

ஜே.வி.பி.யின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ அரசியல் குழு உறுப்பினர் அநுர திஸாநாயக்க ஆகியோர் கலந்து கொள்வர் (ஒ)

## அக்கரைப்பற்று....

கடற்படைக் கப்பல்களும் கண்காணிப்பில் ஈடுபட்டன.

கடற்கரையை அண்டிய பகுதிகளில் பொலீஸார் காவல் கடமைகளில் ஈடுபட்டிருந்ததை காலையில் அவதானிக்க முடிந்தது. கப்பலைக் கரையிலிருந்து பார்ப்பதற்காக பெருந்திரளான பொதுமக்கள் தம்பட்டைப் பகுதிக்குப் படையெடுத்தனர்.

யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவும் இதுகுறித்து ஆராய்வில் ஈடுபட்டது. எரிபொருள் இன்மையால் அக்கப்பல் சின்ன முகத்துவாரம் கடல் பகுதியில் நிறுத்தப்பட்டிருப்பதாக கண்காணிப்புக் குழு தெரிவித்தது.

கடற்படையினரின் துணையுடன் அக்கப்பல் திருகோணமலை துறைமுகத்துக்கு இழுத்துச் செல்லப்படுமென கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் அக்னஸ் தெரிவித்தார். (ஒ)

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்சி)

கருத்து ஓரிருதினங்களில் வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு பிரதிநிதித்துவம் வழங்கிய அரசு, எமது கட்சிக்கு பிரதிநிதித்துவம் வழங்காதது தமக்கு விசனத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் சொன்னார். (ஒ-3)

## ஜோன்...

(முதலாம் பக்கத் தொடர்சி)

நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான அரசின் வரைவை கடந்த வியாழக்கிழமை வெஸ்பேர்க் எடுத்து வந்து விடுதலைப் புலிகளிடம் கையளித்திருந்தார்.

அந்த வரைவை விரிவாக விடுதலைப் புலிகள் ஆராய்ந்துவரும் நிலையில் வெஸ்பேர்க் மீண்டும் இன்று கிளிநொச்சி வருகிறார்.

புதிய வரைவு தொடர்பாக மேற்கு நாடு ஒன்றில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படும் பேச்சுக்கள் குறித்து விடுதலைப் புலிகளுடன் ஆராய்வதற்காகவே வெஸ்பேர்க் இந்த விஜயத்தை மேற்கொள்வதாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும், வெஸ்பேர்க்கின் விஜயத்தின் நோக்கம் குறித்து உத்தியோகபூர்வத் தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. (ஒ-3)

## இடைக்கால நிர்வாக...

(முதலாம் பக்கத் தொடர்சி)

துக் கூறுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்குக் கிழக்குக்கான இடைக்கால நிர்வாக சபையில் பொ.ஐ. முன்னணியின் பிரதிநிதி ஒருவரையும் நியமிப்பதற்கான அரசின் ஆலோசனையை அங்கீகரிக்கமுடியாது.

ஜனாதிபதியின் அனுமதியின்றியே விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாக அமைப்பை வழங்குவதற்கான ஆலோசனையை அரசு முன்வைத்துள்ளது.இவ்வாறன நிலையில் பொ.ஐ.மு. பிரதிநிதி ஒருவரை அதற்கு நியமிக்க அரசுக்கு எவ்வித உரிமையும் இல்லை.

ஜனாதிபதியின் அனுமதியின்றி விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாகக்கட்டமைப்பு ஒன்றை வழங்குவது அரசமைப்புச்சட்டத்திற்கு முரணானது - என்றார் அவர். (ஒ-9)

## நேற்று மட்டுநகர்....

(முதலாம் பக்கத் தொடர்சி)

மரங்கள், கற்கள் குவிக்கப்பட்டு போக்குவரத்துத் தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு மக்கள் பெருமன்றம் எனும் அமைப்பினால் துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டு ஹர்த்தாலை பூரணமாக அனுஷ்டிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. கதிர்காமத்துக்கு கால்நடையாக யாத்திரை செல்லும் அடியார்களும் ஹர்த்தால் காரணமாக தங்கிய இடங்களிலேயே முடங்கி இருந்ததைக் காணமுடிந்தது. வயல்களுக்கும் விவசாயிகள் எவரும் செல்லவில்லை.

கல்முனை, அக்கரைப்பற்று நகரங்களில் வர்த்தக நிலையங்கள், கடைகள் மற்றும் சந்தைகள் அரைகுறையாகத் திறந்தும் - மூடப்பட்டும் இருந்தன. அக்கரைப்பற்றில் வங்கிகள் இயங்கவில்லை.

நேற்று கல்முனை நகரின் பாதுகாப்பு விசேடமாகப் பலப்படுத்தப்பட்டிருந்தது. சனநடமாட்டங்கள் வழமையை விடக் குறைந்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

இன்றும் இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது. (ஒ)

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்சி)

பல திட்டங்களை கிளிநொச்சி மாவட்டத்தில் நடைமுறைப்படுத்த நிதி உதவிகளை வழங்க முன்வந்துள்ளன. அத்திட்டங்களை மேற்கொள்ள ஊடகங்கள் ஊடாக விளம்பரங்களைப் பிரசுரித்து ஒப்பந்தகாரர்களை அழைத்திருந்தோம்.

இந்தப் பணிக்காக இதுவரை எட்டுலட்சம் ரூபா செலவிட்டுள்ளோம். ஆனால், திட்டங்களை நடைமுறைப்படுத்த ஒப்பந்தகாரர் எவரும் முன்வரவில்லை.

இதன் காரணமாக வெளிநாட்டு நிதிகள் திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது.

- இப்படி அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (ஒ-3)

## ஒட்டுசுட்டான்...

(முதலாம் பக்கத் தொடர்சி)

வனவளப் பாதுகாப்புப் பிரிவினர் மீட்டுள்ளனர்.

இந்த யானைக்கு சிகிச்சை அளித்து அதைக் காப்பாற்ற நிபுணத்துவ உதவி வழங்குமாறு இத்துறை சார்ந்த நிபுணர்களிடம் வனவளப் பாதுகாப்புப் பிரிவினர் கோரியுள்ளனர்.

ஒட்டுச்சுட்டான் காட்டுப் பகுதியில் கண்ணிவெடிகள் அகற்றப்படாததால், கடந்த காலத்தில் அவற்றில் சிக்கி பல வனவிலங்குகள் அழிந்துள்ளன என்று வனவளப் பாதுகாப்புப் பிரிவினர் கவலை தெரிவித்தனர்.

'ஜெயசிகுறு' நடவடிக்கையின் போது இந்தப் பிரதேசத்தை படையினர் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-3)


எமது புதிய வீடியோ CD வெளியீடு
பாலா,விவேக் நடித்த
★ காதல் கிசு கிசு
(பிரதிகள் மதியம் பெறலாம்)
நேற்றைய வெளியீடு
★ இனிது இனிது காதல் இனிது
நிதர்ஷன் வீடியோ
ஏழாலை தெற்கு, மயிலங்காடு.
0777-178155 0777-964913
(12-18-30) (20590)

எமது புதிய வீடியோ CD வெளியீடு
★ J.RR,சிம்ரன் நடித்த
இனிது இனிது காதல் இனிது
★ சரவணன் நடித்த
தாயுமானவன்
K.D.M.TECHNOLOGIES
இல.1011, K.K.S.றோட், யாழ்ப்பாணம்
(மில்க்வைற்றுக்கு அருகில்)
T.P.- 021 - 222 3521
(C-29087)(12-30-17-18)


## முக்கிய அறிவித்தல

சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம்

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர்களால் பீடமாக்கலை வலியுறுத்தியும் நிறுவனமாக்கலை எதிர்த்தும் 08.07.2003இலிருந்து பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருவது யாவரும் அறிந்ததே. இப்போராட்டம் சம்பந்தமான அறிக்கைகள் சித்த மருத்துவ மாணவர் ஒன்றியக் கடிதத்தாள் (Letter Pad) மூலமாக தலைவர், செயலாளர் என்பவர்களின் ஒப்பங்களுடன் (Signature) அப்பதவி முத்திரைகளும் அடங்கியவைகளாகவே இருக்கும் . இவை தவிர்ந்த சித்த மருத்துவ மாணவர்கள எனக்குறிப்பிட்டு கடிதங்கள் சில முக்கிய பிரமுகர்களுக்கு அனுப்பப்பட்டதாக அறிகின்றோம். இவ்வாறான எந்தவொரு அநாமதேயக் கடிதங்கள், தனிப்பட்ட கடிதங்கள் ஆகியவற்றிற்கு சித்தமருத்துவ மாணவரோ, சித்தமருத்துவ மாணவ ஒன்றியமோ பொறுப்பாளிகளல்ல.

யாழ்.பல்கலைக்கழகம்,
கைதடி. (20574)(30-17-18) - சி.ம.மாணவர் ஒன்றியம.

## இலங்கைச் சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கான கருத்தரங்கு

இலங்கைச் சட்டக் கல்லூரி சட்ட மாணவர் இந்து மகாசபையும் உதயன் பத்திரிகை நிறுவனமும் இணைந்து இவ்வாண்டு செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள இலங்கைச் சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து தோற்றவுள்ள மாணவர்களுக்காக பரீட்சை தொடர்பான கருத்தரங்கு ஒன்றினை யாழ்.நகரில் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளன. ஓகஸ்ட் மாத இறுதியில் கருத்தரங்கு நடத்தப்படும்.

மேற்படி கருத்தரங்கில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன் (25.07.2003) உதயன் பத்திரிகை நிறுவனத்தில் அல்லது 071 2386070 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெயர்களை பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

(C-29063) (30-17-18-32)

## யா/கொக்குவில் - நந்தாவில்

திருவருள் மிகு கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய நவோத்தர சஹஸ்ர (1008) விஷேட மஹா சங்காபிஷேக விஞ்ஞாபனம்

காலம் : இன்று (22.07.2003) ஆடிச்செவ்வாய்.

நேரம் : 7.30 மணி முதல் 10.30 மணிக்குள்

கிரியா கால நிகழ்வுகள்

(21.07.2003) ஆடிமாதம்

திங்கள் மாலை 6.00 மணிமுதல் புண்ணியாக வாசனம்.கடஸ்தாபனம் முதலியன இடம்பெறும்.

22.07.2003 ஆடி மாதம்

செவ்வாய் காலை 7.30 மணிமுதல் விநாயக வழிபாடு. யாக பூஜை. சங்கு பூஜை. விசேட திரவ்வியாகுதி அபிஷேகம். திரவ்விய ஆகுதி இடம்பெற்று சர்வமங்கள வாத்திய சகிதம். கும்ப வீதிப் பிரதட்சணம் தொடர்ந்து எம் பெருமாட்டிக்கு சங்காபிஷேகம் இடம்பெற்று விஷேட பூஜையுடன் நிகழ்வுகள் நிறைவுபெற்று. திருவருட் பிரசாதம் வழங்கப்படும்.

அனைவரும் வருக அம்பிகை அருள் பெறுக!

சங்காபிஷேக பிரதமகுரு :
"சிவாச்சார்ய சாது"
சிவப் பிரம்மஸ்ரீ ச. ஸ்ரீசந்தனக் குருக்கள்.
(ஆலய பிரதமகுரு) (சி-29086) (30-17-18-31)

அம்பிகை அருள்
வழிநிற்கும்,
ஆலய பரிபாலன சபை.


எமது புதிய வீடியோ CD வெளியீடு
இனிது இனிது காதல் இனிது
வீடியோ விமல் யாழ்ப்பாணம்.

ஈசன் கல்வி நிலையம்
கணக்கீடு
A/L 2004 PAPER CLASS
திரு.பாலவராசன்
B.B.A(FM Spl.)
Tue,Thu:4.00p.m.
ஆரம்பம்:24.07.2003(THU)
(20532) (30-12-18)

A/L 2005
கணக்கீடு
Mr.தவா
B.com(hons.)(Acc.spl.)
கணக்கீடு சமன்பாடு
Mon.,Wed.,Fri.
6 => 7 a.m.
SHAMROCK
J/சுச்சமோட்டை
(12-30-17-18)



இந்திய சாஸ்திரியார் வருகை



முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற
S.N.குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 8மணிமுதல் மாலை 5மணிவரை)
ஸ்ரான்லி லொட்ஜ்
இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 077-6080660, 021-2226188
(யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)
(28-14-16) (20137)


## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சிவசிதம்பரம் (பாட்டுக்காரன்)

காரைநகர், தங்கோடையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சிவசிதம்பரம் அவர்கள் நேற்று (21.07.2003) திங்கள் மாலை 7 மணிக்கு காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை - தெய்வானையின் அன்பு மகனும் சங்கரப்பிள்ளை - இலட்சுமிப்பிள்ளையின் மருமகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை,சௌந்தரி, சிதம்பரப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் (காலஞ்சென்ற இராசம்மா), மீனாட்சி ஆகியோரின் அன்புக் கணவனும் சிவலிங்கம் (சிவா என்ரபிறைஸ்,நுவரெலியா), சிவமணி, சிவகலை ஆகியோரின் தந்தையும் சிவரூபன், சிவரஞ்சன் , சிவகாந்தன், சுரேஷ்குமார், ரமேஸ்குமார், சசிகலா, சத்தியகலா, சிவகலா, சபேசன், திருமதி சற்குணராசா அனுசா, மோகனா ஆகியோரின் பேரனும் கஜவதனனின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(22.07.2003) செவ்வாய்க் கிழமை மாலை 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தங்கோடை,
காரைநகர். (20592)(30-18-17)

தகவல்:
மனைவி (மீனாட்சி)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361அம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.07.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.